உ

கோண்டாவில்

# நெட்டிலைப்பாய் பிள்ளையார் கோவில்



புனராவர்த்தன பிரதிஷ்டா

மஹா

# கும்பாபிஷேக மலர்

ரௌத்திரி வருடம் ஆவணித் திங்கள் ஐந்தாம் நாள் வியாழக்கிழமை

உ

வாக்குண்டாம் நல்ல மனமுண்டாம் மாமலராள்
நோக்குண்டாம் மேனி நுடங்காது — பூக்கொண்டு
துப்பார் திருமேனித் தும்பிக்கை யான்பாதம்
தப்பாமற் சார்வார் தமக்கு.



M/s. எஸ். சின்னத்துரை & சகோதரர்கள்

39, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்.

உ

சிவமயம்

கோண்டாவில்

# நெட்டிலைப்பாய் பிள்ளையார் கோவில்

# மஹா கும்பாபிஷேக மலர்

உச்சியின் மகுட மின்ன ஒளிர்தர நுதலினோடை
வச்சிர மருப்பின் ஒற்றை மணிகொள் கிம்புரி வயங்க
மெய்ச்செவிக் கவரிதூங்க வேழமா முகங்கொண்டுற்ற
கச்சியின் விகடசக்ரக் கணபதிக் கன்புசெய்வாம்.

— கந்தபுராணம்


ஆசிரியர்:

**செல்லப்பா நடராசா**

மலர்க்குழு:

**சின்னத்துரை இராசேந்திரன்**

**சிங்கநாயகம் சிவானந்தம்**


**21 ஆவணி 1980**



## திருஅருட்பா

ஒருமையுடன் நினதுதிரு மலரடி நினைக்கின்ற
உத்தமர்தம் உறவுவேண்டும்,

உள்ளொன்று வைத்துப் புறம்பொன்று பேசுவார்
உறவுகல வாமைவேண்டும்,

பெருமைபெறு நினதுபுகழ் பேசவேண்டும் பொய்ம்மை
பேசா திருக்கவேண்டும்,

பெருநெறி பிடித்தொழுக வேண்டும், மதமான
பேய்பிடியா திருக்கவேண்டும்,

மருவுபெண் ணாசையை மறக்கவே வேண்டும்
உனைமறவா திருக்கவேண்டும்,

மதிவேண்டும், நின்கருணை நிதிவேண்டும், நோயற்ற
வாழ்வுநான் வாழவேண்டும்,

தருமம்மிகு சென்னையிற் கந்தகோட் டத்துள்வளர்
தலமோங்கு கந்தவேளே!

தண்முகத் துய்யமணி உண்முகச் சைவமணி
சண்முகத் தெய்வமணியே.

இராமலிங்க வள்ளலார்

அன்பளிப்பு: விநாயகர் பக்தர், வத்தளை.

## மலர் சிந்தும் துளிகள் . . .


வாழ்த்துரை — சிவஸ்ரீ தா. அரிகர சுப்ரமணியக் குருக்கள்

நாவலரின் கவலை

வாழ்த்துரை — சிவஸ்ரீ வை. சபாரத்தினக் குருக்கள்

வாழ்த்துரை — சட்டத்தரணி திரு. சி. சிதம்பரநாதன்

பரிபாலனசபை, திருப்பணிச்சபை, செயற்குழுக்கள்

தொண்டு தொடரட்டும் — ஆசிரியர் தலையங்கம்

திருப்பணிச்சபைக் காரியதரிசியின் அறிக்கை

நிறைவு — முருகையன்

இலங்கையில் சைவசமயமும் நவீனமயமாக்கமும் — பேராசிரியர் கலாநிதி க. கைலாசபதி

கோவில்கள் நிறைந்த பதி — செல்லப்பா நடராசா

உலகம் முழுவதும் தெரிந்த கண்பதி கடவுள்தான் பிள்ளையார் — பன்மொழி ஆராய்ச்சிக் கலாநிதி தென்புலோலியூர் மு. கணபதிப்பிள்ளை

பிள்ளையார் பெருமை — சிவஸ்ரீ தா. மகாதேவக் குருக்கள்

மங்கள வாத்தியம் — நாதஸ்வர கலாநிதி என். கே. பத்மநாதன்

வள்ளுவரும் காந்தியடிகளும் கடவுள்பக்தியும் — குன்றக்குடி அடிகளார், தொகுப்பு பொ. இராசதுரை

கலைக்கோயில் — இ. இரத்தினம்

திருவூஞ்சற்பாக்கள்




---

**"கடமையைச் செய் பலனை எதிர்பாராதே"**

உ

## விநாயகர் துதி

உம்பர்தருத் தேனுமணிக் கசிவாகி
ஒண்கடலிற் றேனமுதத் துணர்வூறி
இன்பரசத் தேபருகிப் பலகாலும்
என்றனுயிர்க் காதரவுற் றருள்வாயே
தம்பிதனக் காகவனத் தணைவோனே
தந்தை வலத் தாலருள்கைக் கனியோனே
அன்பர் தமக் கானநிலைப் பொருளோனே
ஐந்துகரத் தானைமுகப் பெருமாளே.


வெள்ளவத்தை
பவுண் புறேக்கேஸ் அன்ட்
ஜுவலேர்ஸ்

328, காலி வீதி,
வெள்ளவத்தை.

☎ 86860


அன்பளிப்பு: அமரர் சண்முகம் சின்னத்துரை குடும்பம்

வாரண முகத்தான் அருட்பதம் வெல்க

ambiga

**JEWELLERS**

(AIR CONDITIONED)

77, SEA STREET - COLOMBO-11.

Phone: 22839

ஞானமுதல்வன் மலர்த்தாள் போற்றி

WITH COMPLIMENTS

FROM

PEARLITES

ELECTRICAL DEALERS
IMPORTERS,
EXPORTERS,
ENGINEERS,
CONTRACTORS,
STATIONERS,
MERCHANTS.

78, MALIBAN STREET,
COLOMBO - 11.
Sri Lanka.

CABLE: **SIVAPEARL**
TELEPHONES: **24821, 28244**

கோண்டாவில் மக்களின் சிறப்புமிகு திருப்பணிக்கு
எமது நல்வாழ்த்துக்கள்!

# கோமதி விலாஸ்

142, செட்டியார் தெரு,
கொழும்பு 11.



சூடான பலகாரங்கள்,

சுத்தமான பசும்பால்

நெய்யில் தயாரித்த இனிப்புப் பட்சணங்கள்

வகைவகையான சிற்றுண்டிகள்

எவ்வேளையிலும் உகந்தமுறையில் கிடைக்கும்.

எல்லாவிதமான சாய்ப்புச் சாமான்களும்
சில்லறை விலைக்குச் சகாயமாகக் கிடைக்கும்.

☎ 34144

அப்ப முப்பழம் அமுதுசெய் தருளிய
தொப்பை யப்பனைத் தொழவினை யறுமே.

*Space Donated*

*by*

**M/s. N. A. VARNAKULASINGAM & SONS**

GENERAL MERCHANTS & COMMISSION AGENTS

173, KEYZER STREET,

COLOMBO-11.

வேழமுகத்து விநாயகனைத் தொழ
வாழ்வு மிகுத்து வரும்.

**BEST WISHES**

FROM

# Letchumi Jewellers

JEWELLERS & GEM MERCHANTS

**No. 111, SEA STREET,
COLOMBO-11**

T'Phone: 36862

BRANCHES:

**LETCHUMI JEWELLERS**
43, COLOMBO ROAD,
KALUWELLA,
GALLE.
T'Phone: 2423

**LETCHUMI JEWELLERS**
42, COLOMBO ROAD,
KITTANGI,
GALLE.

WITH BEST COMPLIMENTS

FROM

THE COLOMBO PICTURE PALACE

DEALERS IN WINDOW GLASSES AND MIRRORS.

104, PRINCE STREET,
COLOMBO-11

பண்ணவன் மலரடி பணிந்து போற்றுவாம்.

*with best compliments*

*from*

# Rajam Traders

57, SEA STREET, COLOMBO-11

for

**EVERSILVER PRESENTATION ARTICLES**

**GREETING CARDS**

**CALENDARS**

**DIARIES**

**FANCY GOODS AND**

**WESAK DECORATION ARTICLES**

Phone: 2 5 7 5 9

கணபதி என்வினை களைவாய் ஜெய ஜெய

★

அன்பளிப்பு

# Karuna Traders

GENERAL MERCHANTS & COMMISSION AGENTS

221, 5TH CROSS STREET,
COLOMBO - 11.

Telephone: 33366

நீண்டபுகழ் வாணுள் நிறைசெல்வம் பேரழகு
வேண்டுமட்டும் ஈவாய் விரைந்து.

with compliments

from

**NAWAGAMUWA ENTERPRISES LTD.**

ENGINEERS, BUILDERS & METAL CRUSHERS:

28, PAGODA RODA,
NUGEGODA.

T'Phone: 073-3208

இணங்கிய பிள்ளைகள் தலைவா ஜெய ஜெய

*with best compliments*

*from*

# VARATHAN TRADERS

GENERAL MERCHANTS AND COMMISSION AGENTS

75, 5th CROSS STREET,

COLOMBO-11

*Space Donated by*

# BASHEER TRADERS

பஷீர் டிரேடர்ஸ்

WHOLESALE DEALERS IN TEXTILES

210, Main Street,

COLOMBO - 11.

26154, 32608

Grams: BASHEERTEX

உயிர்களிடத்து அன்பு வேண்டும் - தெய்வம்
உண்மை என்று தானறிதல் வேண்டும்.

*Space Donated by*

# RATNA BROTHERS

GENERAL HARDWARE MERCHANTS
2, GRANDPASS ROAD,
(Armour Street Junction)
COLOMBO - 14.

*with the best compliments*

*of*

# H. D. SUGATHAPALA

BUILDING CONTRACTOR
53, MADAPATHA ROAD,
KOLAMUNNAE
PILIYANDALA.

அன்பென்று கொட்டுமுரசே — அதில்
ஆக்கமுண்டாமென்று கொட்டு

WITH BEST COMPLIMENTS
FROM

THEVA STORES
DEALERS IN GRAPES WHOLESALE & RETAIL

193, OLCOTT MAWATTE,
COLOMBO-11

Telephone: 20405

*with best wishes*

*from*

KAREEM TRADERS
DEALERS IN ALL VARIETIES OF TEXTILES
257, MAIN STREET, COLOMBO-11.

Telephone: 27307

*Sole Agents*
'MARINA BRAND' Umbrella

உ

சிவமயம்



தேவஸ்தான நித்திய குரு

சிவாகம பூஷணம்

# சிவஸ்ரீ தா. அரிகரசுப்ரமண்யக் குருக்கள்

அவர்கள் வழங்கிய

# வாழ்த்துரை

" மண்ணுலகத்தினிற் பிறவி மாசற,
எண்ணிய பொருளெலாம் எளிதின் முற்றுறக்
கண்ணுதல் உடையதோர் களிற்று மாமுகப்
பண்ணவன் மலரடி பணிந்து போற்றுவாம் ".

சிவ சக்தி வடிவமாகவும் தன்னில் மேலான தலைவன் இல்லாதவனாகவும் விளங்கும் ஒரே வடிவம் பிரணவஸ்வரூபியாகிய விநாயக வடிவமாகும். இத்துணைப் பெருமைவாய்ந்த விநாயகப்பெருமானுக்கு சைவம் வளர்க்கும் நாடெல்லாம் திருக்கோவில்கள் உண்டு. அப்படியான சைவ தமிழ் வளர்ச்சிமிக்க கோண்டாவில் நெட்டிலைப்பாய் நன்மக்கள் விக்கினந் தீர்க்கும் விநாயகன் திருவருளால் நலமே வாழ்ந்து வருகிறார்கள். அவர்களது நன்நிலை காரணராகிய ஸ்ரீ விநாயகர் திருக்கோவில் கற்றளியாக சமைக்கப்பட்டு இரண்டு தள விமானம், லக்ஷ்மி கோவில், சுப்பிரமணியர் கோவில், நடேசர், பைரவர் கோவில்கள் ஆதியனவும் புதிதாக அமைக்கப்பெற்றமை ஐங்கரன் திருவருளேயாகும். இவ்வாறு செய்வதற்கு இங்கு வாழ் சைவப்பெரியார்கள் திருப்பணிச்சபையினர் வழிபடுவோர் யாவற்றுக்கும் மேலாக சிரமதானப்பணி செய்யும் தொண்டர்கள் ஆகியோர் பட்ட சிரமங்கள் சொல்லுந்தரமன்று. அத்தகு விடாமுயற்சியின் பயனாக இன்று இவ்வாலயம் கும்பாபிஷேகம் செய்யப்பெற்று புதுப்பொலிவுடன் விளங்குகின்றது. இப்பணி சிறக்கத் தொண்டாற்றிய அனைவருக்கும் விநாயகன் நல்லருள் பாலிக்கப்பிரார்த்திக்கிறேன். மேலும் கடந்த கால்நூற்றாண்டு காலமாக ஆலயசேவை புரிபவன் என்ற காரணத்தால் இக்கும்பாபிஷேகம் சிறக்க வருகைதந்து மந்திரம் கிரியைகளில் குறைவுபடாது நிறைவுறச் செய்துவைத்த சிவாச்சாரியர்கள் வேத விற்பன்னர்கள் அந்தணச் செம்மல்கள் யாவர்க்கும் எனது உளங்கனிந்த நன்றியும் வணக்கமும் உரித்தாகுக.

இந்த நல்வேளையில் விநாயகர் கும்பாபிஷேக விழாவையொட்டி வெளியிடப்படும் இம்மலர் சிறக்கவும் தும்பிக்கையான் பாதம் நம்பிக்கையுடன் வணங்கி வாழ்த்துகிறேன்.

சுபம்.

" லம்போதரம் மஹா காயம்
சர்வ விக்ன நிவாரகம்
சர்வ கார்யார்த்த சித்தியர்த்தம்
த்யாயேத் சித்தி விநாயகம் "

உ



# நாவலரின் கவலை

"நிலையில்லாத என் சரீரம் உள்ளபொழுதே என் கருத்து நிறைவேறுமோ, நிறைவேருதோ என்னுங் கவலை, என்னை இரவும் பகலும் வருத்துகின்றது. அக்கருத்து இது:

தமிழ்க்கல்வியும் சைவசமயமும் அபிவிருத்தியாவதற்குக் கருவிகள், முக்கிய தலந்தோறும் வித்தியாசாலை தாபித்தலும் சைவப்பிரசாரணஞ் செய்வித்தலுமேயாம். இவற்றின் பொருட்டுக் கிரமமாகக் கற்றுவல்ல உபாத்தியாயர்களும், சைவப் பிரசாரகர்களும் வேண்டப்படுவார்கள். ஆதலினுலே நல்லொழுக்கமும் விவேகமும் கல்வியில் விருப்பமும் இடையரு முயற்சியும் ஆரோக்கியமும் உடையவர்களாய்ப் பரீட்சிக்கப்பட்ட பிள்ளைகள் பலரைச் சேர்த்து அன்னதானம், வஸ்திரம் முதலியவை கொடுத்து, உயர்வாகிய இலக்கணவிலக்கியங்களையும் சைவசாஸ்திரங்களையும் கற்பித்தல் வேண்டும். அவர்களுள்ளே தேர்ச்சி அடைந்தவர்களையே உபாத்தியாயர்களாகவும், சைவப் பிரசாரகர்களாகவும் நியோகிக்கலாம்."

கொழும்பு 2ல் உள்ள அன்பரின் காணிக்கை.



உ

கோண்டாவில்
நெட்டிலைப்பாய் பிள்ளையார் கோவில்
மகா கும்பாபிஷேக விழாவின்
பிரதம சிவாசாரியர்
"சிவாசாரியமணி"

# சிவஸ்ரீ வை. சபாரத்தினக் குருக்கள்

அவர்கள் வழங்கிய

# ஆசியுரை

உலகமெலாம் உணர்ந்து உய்திபெறவேண்டுமென்ற பெருங்கருணையினால் எல்லையற்ற பரம்பொருள் எடுத்த வடிவங்கள் எண்ணில. இதனையுணரும் வாய்ப்பு பிறவிகளிலே மேம்பட்ட பிறவியாகிய மானிடப் பிறவி எடுத்த எமக்கே உரியதாகும். அதனால்தான்

"துர்லபம் மானுஷம் ஜென்ம
சிவதர்மோபி துர்லப"

என ஆகமங்கள் சிறப்பித்துக் கூறுகின்றன. இத்தகு வடிவங்களிற் சிறந்து விளங்குவது விநாயக வடிவமாகும். திருவதனமே பிரணவ வடிவமாக அமைந்தமையினால் "பிரசன்ன வதனன்" என்னும் சிறப்புப்பெயர் விநாயகருக்கு மாத்திரமே உரிய தனிப்பெயராகும். ஆன்மாக்கள் பாசத்தினாற் பந்திக்கப்பட்டு வாழும் முறைதவறி நெறி பிறழ்ந்து வாழ்வதினால் அதர்மம் மேலோங்கும்பொழுதெல்லாம் ஆண்டவன் திருவவதாரம் செய்து ஆன்மாக்களைக் காப்பாற்றுவது காலங்காலமாக கடந்த யுகங்களில் கிடைக்கும் வரலாறுகளில் இருந்து அறியப்படுகின்றது. ஆனால், இக்கலியுகத்தில் துன்பங்கள் மலிந்துவிட்டமையினால் அவற்றை வளரவிடாது தடைசெய்யும் ஒரேவழி யாகங்கள் செய்வதுதான்.

இதனையே "கற்று ஆங்கு எரியோம்பி" என்று ஞானசம்பந்தர் தேவாரத்திலும், "அவிசொரிந்து ஆயிரம் வேட்டல்" எனத் திருக்குறளிலும் சிறப்பித்துக் கூறப்பட்டுள்ளது. இவ்வாறு யாகங்கள் செய்வது எவ்வாறு என்பதனை இறைவன் வேத சிவாகமங்கள் மூலம் எமக்கு அறியத்தந்துள்ளார். இறைவன் வகுத்த வேதசிவாகமங்களை ஆராய்ந்து உருவத்திருமேனியைச் சிந்திக்கும் தியானம் முதலானவைகளையும் மற்றும் கிரியை முறைகளையும் "உக்ரஜோதி" முதலான சிவாசாரியர்கள் தத்தம் பெயர்களை முன்வைத்து பத்ததி எனப்பெயரிட்டு ஆக்கி உதவினார்கள். அவைகளே இன்று நாம் கோயில்களிலே செய்யும் கிரியை முறைகளாகும்.

சகல செல்வங்களும் மலிந்து பொலிந்து விளங்கும் கோண்டாவில் நெட்டிலைப்பாய் பிள்ளையார் கோவிலில் மேற்கூறிய இருவகைச் சிறப்புக்களும் நிகழ்ந்திருக்கின்றன, ஒன்று இறைவன் வடிவிற் சிறந்த விநாயகவடிவம் இங்கு பிரதிஷ்டை செய்யப்படுகின்றது. மற்றது துன்பங்களை நீக்கி இன்பங்களை நல்கும் யாகங்கள் செய்யப்படுகின்றன. இதுவன்றோ மண்ணிற் பிறந்தார் பெறும்பயன். மேலும் எட்டிசைந்த மூர்த்தியாகிய சிவன்தான் விநாயகன் என்பதற்கு ஔவைப்பிராட்டியார் அருளிச்செய்த அகவலே சான்றாக அமைகிறது.

அதனுல், இங்கும் உத்தம யாகசாலையில் அமைக்கப்பெற்ற எட்டுக் குண்டங்களிலும், நிலம், நீர், தீ, காற்று, வெளி, சூரியன், சந்திரன், ஆன்மா, என்கின்ற எட்டு மூர்த்திகளையும் பிரதான குண்டத்தில் விநாயகப்பெருமானையும் ஆவாகனம் செய்து மந்திரங்கள் ஜபித்து ஆகுதிகள் சொரிந்து ஆகம முறைப்படி செய்யப்பெற்ற இந்த யாகங்களினுல் விநாயகப்பெருமான் பரிபூரண சாந்நித்தியம் கொண்டு எமக்கு நல்லருள் பாலித்து கலியை நீக்கி அருளுவார்.

"அர்ச்சகஸ்ய ப்ரபாவே ந, அர்ச்சருஸ்ய சாயனுத்
அபிரூப்யச்ச பிம்பானும், சிலாபவதி தைவிக்"

என்பது ஆகம வாக்கியம். ஆசாரியரின் சிறப்பினுலும் மந்திரங்களின் சக்தியினுலும் சாஸ்திரோக்தமாக அமைக்கப்பெற்ற ஆலயங்களில் முறைப்படி அமைந்த விக்கிரகங்களை வைப்பதினுலும் சிலை தெய்வீகத் தன்மையை அடைகிறது என்பது பொருள். அவ்வாறு தெய்வீகத்தன்மை பொருந்திய திருவுருவத் திருமேனிக்கு தெய்வாம்சம் நிறைந்து அமுதமயமாகிய கலசதீர்த்தத்தினுல் அபிஷேகம் செய்யப்படுகிறது. இதுவே பெருஞ்சாந்தி என்று கூறப்படும் மஹாகும்பாபிஷேகமாகும்.

எனவே இத்துணைப் பெருமைவாய்ந்த இக் கும்பாபிஷேகத்தைச் செய்வித்த நல்லோர்கள் அனைவருக்கும் தரிசித்த பக்தர்களனைவருக்கும் ஞானமத ஐந்துகர மூன்றுவிழி நால்வாய் ஆனைமுகன் தனது இன்னருளை வாரி வாரி வழங்கி அனைவரும் பல்லாண்டு காலம் கல்விமான்களாகவும் நோயற்றவர்களாகவும் சிறந்து விளங்கும் சகலவிதமான செல்வங்களோடு கூடியவர்களாகவும் வாழவைக்க வேண்டுமென மன மொழி மெய்யாலே விநாயகப் பெருமானைப் பிரார்த்தித்து நல்லாசி கூறுகின்றேன்.

மேலும்;

இவ்வேளையில் வெளியிடப்படும் இம் மலர் கோண்டாவில் நெட்டிலைப்பாய் விநாயகர் பேரருளைப் பாரெல்லாம் பரப்பும் நன் மலராக விளங்கவேண்டுமெனவும் வாழ்த்துகிறேன்.

"நற்குஞ் சரக்கன்று நண்ணிற் கலைஞானம்
கற்குஞ் சரக்கன்று காண்"

— திருவருட்பயன்

"அன்பின் வழியது உயர்நிலை அஃதிலார்க்கு
என்புதோல் போர்த்த உடம்பு"

உ

### கோண்டாவில் நெட்டிலைப்பாய் பிள்ளையார் கோவில்
### பரிபாலன சபை, திருப்பணிச் சபை ஆகியவற்றின் தலைவர்
## சட்டத்தரணி திரு. சி. சிதம்பரநாதன் அவர்கள்
வழங்கிய

# வாழ்த்துரை

சமயத் தொறுநிறைந்த தற்பரமே யன்பர்க்
கமையுந் தனித்தெள் ளமுதே — யுமைதந்த
கண்மணியே யானைமுகக் கற்பகமே பேரின்ப
விண்மணியே யாள்வாய் விரைந்து.

— மாம்பழக் கவிராயர்

யானைக் கன்றின் முகத்தைப் போலும் முகத்தையுடைய தன்னேரிலாத தலைவராம் விநாயகப்பெருமானை வழிபடுபவர்களுக்கு இடரொன்றில்லை. எல்லா உலகங்களிலும், எல்லா உயிர்களிலும் அத்துவித வஸ்துவாய்க் கலந்து இருக்கின்றார். இத்துணைச் சிறப்பு வாய்ந்த விநாயகப்பெருமானைச் சைவசித்தாந்த நெறி நின்று மெய்யன்போடு வழிபடுபவர்கள் விண்ணுலகெய்துவர்.

அந்தப் பொழுதி லறுமா முதற்கிரங்கி
முந்திப் படர்கின்ற *மொய்குழலாண் முன்னகத்
தந்திக் கடவுட் டனிவார ணப்பொருப்பு
வந்துற்ற தம்மா மறிகடலே போன்முழங்கி,

என்கின்றார் கச்சியப்பர். யானைமுகம், விநாயகர் பிரணவ வடிவினன் என்பதைக் காட்டும். முருகன் இட்டீர்த்த கரிமுக வாரணக் கணபதி, ஓங்கார மூர்த்தியாய் ஆன்மாக் களை ஞானவழியில் ஓம் படுத்தும் தத்துவ நிலையில் உள்ளார். இது புராண சாஸ்திர முடிபு.

விநாயகப் பெருமானின் யானைமுகம், பார்க்கப் பார்க்கப் பரவசமூட்டுவது. எத்தனை முறை பார்த்தாலும் எள்ளத்தனையும் தெவிட்டாது தித்தித்துத் திருவருள் பொலியும் செவ்விய முகம். இச்சிறப்புப் பற்றியே சைவசமய நிகழ்ச்சிகள் அனைத்திலும் விநாயகர் வழிபாடு முக்கிய இடம் பெறுகின்றது. நாயன்மார்கண்ட நெறிமுறையும் இதுவே.

நீர்வளம், நிலவளம், கலைவளம் மிக்க கோண்டாவிற்பதியில் 'நெட்டிலைப்பாய்' என்னும் குறிச்சியில் கோவில்கொண்டெழுந்தருளி ஆன்மாக்களின் துயர்நீக்கிப் பேரருள் புரிகின்றார் பிள்ளையார். நெட்டிலைப்பாய்ப் பிள்ளையார்கோவில் ஈழத்திலுள்ள பிரசித்திபெற்ற ஆலயங்களில் ஒன்று.

இவ்வாலயம் புனருத்தாரணஞ் செய்யப்பெற்று, அதையடுத்து மகா கும்பாபிஷேகத்தையும் செய்தல்வேண்டும் என்னும் உன்னத எண்ணத்தை அடியார்கள் உள்ளத்தில் உதிக்கும்படி செய்தவரும் பிள்ளையாரே. இற்றைக்கு நான்கு ஆண்டுகளுக்கு முன்னர் ஷெ ஆலய வளர்ச்சி கருதி ஸ்தாபிக்கப்பெற்ற பரிபாலன சபையும், திருப்பணிச் சபையும் ஒருங்கிணைந்து மேலே குறிப்பிட்ட நோக்கங்களை நிறைவுசெய்ய முயன்றனர். முயற்சியின் பெறுபேறே திருப்பணிகளும், மகா கும்பாபிஷேகமும்.

---

* வண்டுகள் மொய்க்கின்ற மாலையணிந்த கூந்தலுடைய வள்ளிநாயகி அம்மையார்

பிள்ளையாரின் திருவருளினால், திருப்பணி நிதி சேர்ந்தது. கைதேர்ந்த சிற்பிகள் தாமாகவே வந்து கைகொடுத்தார்கள். கர்ப்பக்கிருகம், செப்பனிடப்பட்ட வைரக்கற்களி னால் இருதள விமானச் சிறப்புடன் ஓங்கி வளர்ந்தது. மகாலக்ஷ்மி, சுப்பிரமணியர், நடேசர், பைரவர் ஆலயங்கள் அழகுற அமைந்தன, இன்னும் சில திருப்பணிகள் மெய்யடி யார்களின் ஒத்துழைப்பினால் கண்மூடி விழிப்பதற்குள் நிறைவேறியுள்ளன. ஆலயத்தையும் அதனை அடுத்துள்ள சூழலையும் அழகுபடுத்தி உதவிய சிரமதானத் தொண்டர்களைப் பாராட்டியமையாது. ஆலய மடாலயங்கள் 'கல்லினாற் செய்த பேர்கள் கைலைவிட்டகலார் தாமே' என்றபடி இப்புண்ணிய கைங்கரியங்களில் ஈடுபட்டவர்கள் யாவரும் பாக்கியசாலி களே.

ஆலயங்களில் நடைபெறும் கிரியைகளில் மிகமிக முக்கியமானது - உன்னதமானது மகா கும்பாபிஷேகம். கும்பாபிஷேகத்தைச் செய்பவர்கள், செய்விப்பவர்கள், தரிசிப்பவர் கள் பூர்வ புண்ணியஞ் செய்தவர்கள் என்பார்கள் சான்றோர்கள். இதனாலன்றோ மகா கும் பாபிஷேகம் பெருஞ்சாந்தி என்று விதந்து பேசப்படுகின்றது. சித்தத்தைச் சிவன்பாலே வைத்தவரான திருஞானசம்பந்தப் பெருமான். பூம்பாவைப் பதிகத்தில் இறுதிப் பாடலில்: கபாலிச்சரமமர்ந்தான் பெருஞ்சாந்தி காணாது போதியோ பூம்பாவாய், என்று திருவாய் மலர்ந்ததும், மறைந்த பூம்பாவை மறையாதவள் போல என்புக்கடம் உடைய எழுந்து வந்தாள் என்பதில் இருந்தே, மகா கும்பாபிஷேகம் எத்துணைச் சிறப்புவாய்ந்தது என்பது பெறப்படுகின்றது.

கோண்டாவில் நெட்டிலைப்பாய்ப் பிள்ளையார் திருக்கோவிலில், சாஸ்திரரீதியாகத் திருப்பணிகள் பூரணமாகி, மேலான மகா கும்பாபிஷேகமும் இனிது நிகழத் தோன்றாத் துணையாயிருந்து அருள்பாலிக்கும் விநாயகப் பெருமானின் திருவடிகளை வாழ்த்தி வணங்கும் அதேவேளையில், இந்நிகழ்ச்சிகள் யாவும் செவ்வனே நிறைவுபெற, பேருதவியாயிருந்த மதிப்பார்ந்த சிவாசாரியர்களுக்கும், சிவநேயச் செல்வர்களுக்கும், பரிபாலன சபையினதும் திருப்பணிச் சபையினதும் தலைவர் என்ற வகையில், பணிவன்புடன் கூடிய எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவிக்கின்றேன்.

இக் கும்பாபிஷேக வைபவத்தையொட்டி வெளியாகும் கும்பாபிஷேக விழா மலர், இதழ்கள் தோறும் நறுந்தேனினைச் சொரிவதாய், இனிமை பயப்பதாக என்று விநாயகப் பெருமான் திருவருளை முன்னிட்டு வாழ்த்துரை வழங்குவோமாக.

''எப்போ தகத்து நினைவார்க் கிடரில்லைக்
கைப்போ தகத்தின் கழல்''

''இயல்பினான் இல்வாழ்க்கை வாழ்பவன் என்பான்
முயல்வாருள் எல்லாம் தலை''.

# பரிபாலன சபை, திருப்பணிச் சபை செயற்குழுக்கள்

நளவருடம் சித்திரைத் திங்கள் 31-ம் நாள் (13-5-76) வியாழக்கிழமை நடைபெற்ற மகாசபைக் கூட்டத்தில் ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்ட பரிபாலனசபை, திருப்பணிச்சபை ஆகியவற்றின் உறுப்பினர்கள் விபரம்.

## பரிபாலனசபை

சி. சிதம்பரநாதன் (தலைவர்)
சி. க. சபாபதி (காரியதரிசி)
வ. குணரத்தினம் (தனாதிகாரி)

உறுப்பினர்கள்:
செ. கனகசபை
ந. சி. சின்னத்துரை
க. கனகராசா
சி. இராசேந்திரன்

## திருப்பணிச் சபை

### காப்பாளர்கள்:

திரு. மு. இரத்தினம்
,, தம்பு துரையப்பா
,, செ. முத்துத்தம்பி
,, இ. பொ. குமாரசாமி
,, சண்முகம் சின்னத்துரை
,, வை. இரத்தினசபாபதி

திரு. ஐ. இராமநாதன்
,, வை. பொன்னுச்சாமி
,, வி. இராசசிங்கம்
,, இ. முத்துக்குமாரசாமி (மலேசியா)
,, சி. ஐயாத்துரை

### தலைவர்:

திரு. சி. சிதம்பரநாதன்

### உப தலைவர்கள்:

திரு. மா. வீரசிங்கம்
,, மு. சிவராமலிங்கம்
,, செ. தியாகராசா
,, மா. கனகசிங்கம்
,, மா. திருநாவுக்கரசு

திரு. அ. பொன்னுச்சாமி
,, இ. முருகையா
,, சி. க. இரத்தினசிங்கம்
,, ப. இரத்தினசிங்கம்
,, வை. சுப்பிரமணியம்

### இணைக்காரியதரிசிகள்:

திரு. சி. க. சபாபதி
திரு. செ. கனகரத்தினம்
திரு. பொ. இலங்கநாதபிள்ளை

### தனாதிகாரி:

திரு. வ. குணரத்தினம்

### கணக்குப் பரிசோதகர்கள்:

திரு. நா. இராசரத்தினம்
திரு. க. கணேசபிள்ளை

**கட்டிட நிர்வாகம், ஒப்பந்தம் மேற்பார்வைக் குழு:**

| | |
|---|---|
| திரு. சி. சிதம்பரநாதன் | திரு. சி. க. சபாபதி |
| ,, வ. குணரத்தினம் | ,, கே. வி. பசுபதி |
| ,, மா. வீரசிங்கம் | ,, சி. புவனேந்திரன் |
| ,, செல்லப்பா நடராசா | ,, பொ. இலங்கநாதபிள்ளை |

**நிதிக்குழு, செயற்குழு உறுப்பினர்கள்:**

பரிபாலனசபை உறுப்பினர்களுடன் திருவாளர்கள்: அ. விருத்தாசலம், க. தருமலிங்கம், பொ. நடராசா, நா. பொ. சுப்பிரமணியம், ஆ. தருமலிங்கம், சி. செல்வரத்தினம், க. இ. இராமசாமி, சி. குணரத்தினசிங்கம், க. சின்னத்துரை, க. இரத்தினம், அ. வல்லிபுரம், த. வல்லிபுரம், க. சண்முகலிங்கம், சி. சின்னத்துரை, க. சிவபாலசிங்கம், உ. இராச சுப்பையா க. இரத்தினசபாபதி, க. இராசதுரை, ஆ. சி. செல்லத்துரை, செ. கனகரத்தினம், டாக்டர் ச. குகதாசன், த. துரையப்பா. இ. க. சின்னராசா, எஸ். ரி. சுந்தரம், சு. பொன்னம்பலம், சி. பொன்னுத்துரை, சி. கந்தையா, திருமதி தேவி இரா்சகுலசிங்கம், எஸ். சுந்தரராஜா, சோ. சின்னத்துரை, ஆ. கந்தையா, செ. இலங்கநாயகம், இ. குமாரசுவாமி, இ. கனக சபாபதி (முருகா), ஆ. தியாகராசா, க. கனகலிங்கம், அ. மகாதேவன், டாக்டர் செ. சிங்க நாயகம், இ. உருத்திரமூர்த்தி, வை. சுப்பிரமணியம், ச. மனோகரன், செ. திருஞானசம்பந்தர், ந. செல்வரத்தினம், செ. பொன்னம்பலம், மா. கனகரத்தினம், க. ஸ்ரீபதி, சி. பத்மநாதன், கணபதிப்பிள்ளை ஆசிரியர், இ. கந்தையா, த. தருமராசா, த. கனகராசா, க. ஞானசேகரம், சபாபதி மயில்வாகனம், செ. சுப்பிரமணியம், த. இரத்தினசிங்கம், து. சங்கரப்பிள்ளை, ச. வைத்திலிங்கம், வி. சிவகுமார், த. பாலசிங்கம், இங்கிலாந்துப் பிரதிநிதிகளாக திருவாளர்கள்: க. மகாலிங்கம், டாக்டர் ஆ. சி. ரூபசிங்கம், இ. ஸ்ரீதரன், பொ. கணேசன், இ. துரைரத்தினம், க. அரசன், ச. இராஜ்குமார், கனடா அங்கத்தவர்களாக: கலாநிதி கு. பாலச்சந்திரன் திரு. கு. பாக்கியநாதன், மலேசியா, சிங்கப்பூர்ப் பிரதிநிதியாக திரு. கே. பூபாலசிங்கம், கலாநிதி செ. செல்வலிங்கம் (பாங்கொக்).

"எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு".

முத்து விநாயகன் சித்தி அருள்வான்.

எமது மனமார்ந்த வாழ்த்துகள்

# நியூ முத்து மீனாட்சி ஜுவலறி



## New Muthumeenachi Jewellery

152, Sea Street, COLOMBO - 11.

— YOU ARE WELCOME TO OUR NEW SHOW ROOM —

☎ 33164

கற்பக விநாயகக் கடவுளே போற்றி

# S. S. NELLAIYAPPAH PILLAI & CO.

MILLERS, GENERAL MERCHANTS, COMMISSION AGENTS,
IMPORTERS & EXPORTERS.

141, MALIBAN STREET,
COLOMBO-11.
P. O. BOX 141

T'Phone: 29561

யாரும் பணிந்திடும் தெய்வம் — பொருள்
யாவினும் நின்றிடும் தெய்வம்.

with compliments

from

# Shree Thamothara Vilas

239, K. K. S. Road,
JAFFNA.

ஸ்ரீ தாமோதர விலாஸ்

யாழ்ப்பாணம்.

தத்துவ மறைதெரி வித்தகா போற்றி.

for all your requirements in

Heavy Duty

3 Phase Electrical Equipments

↓

CONTACT:

Rotax Ltd.

113, OLCOTT MAWATHA,

COLOMBO-11.

Phone: 29973

Grams: "ROTEX"

வேத முதல்வோனே போற்றி.

*Space Donated*

*By*

# M/s. E. N. ARIYARATNA & Co.

IMPORTERS, GENERAL MERCHANTS

&

COMMISSION AGENTS.

222, PRINCE STREET,

COLOMBO-11.

Phone: **26562** Grams: **'MALARMAHAL'**

சிந்தித்தவர்க்கருள் கணபதி ஜெய ஜெய.

*with best compliments*

*from*

Dealers in:
WATCHES
&
RADIOS

**SUGUNA TRADERS**

21,
SECOND CROSS
STREET,
COLOMBO - 11

Phone: 23695

சங்கரன் மகனே ஐங்கரா போற்றி.

*with best compliments*

*from*

# AMBALAVANAR & SONS

**AVS**

PAPER MERCHANTS, STATIONERS, IMPORTERS AND
PRINTER'S REQUISITES.

**78, MALIBAN STREET,**
**COLOMBO-11**

Phone: **24821** Grams: **'VANARSONS'**

நன்னெறி நல்குவான் விக்கின விநாயகன்

# ARASAN COMPANY

GENERAL MERCHANTS & COMMISSION AGENTS

**72-A, 4th Cross Street,**

**COLOMBO-11.**

☎

29407

அன்பளிப்பு:

PEARL TEXTILES

145, KEYZER STREET,

COLOMBO-11.

T'PHONE: 26503

எமது பாராட்டுதல்கள்

SANTHA TEXTILE

212, MAIN STREET,

COLOMBO-11.

T'PHONE: 24459

மகா கும்பாபிஷேகம் நினைவாக

WITH
BEST
COMPLIMENTS
FROM

# New Kasimari Palayakat Co.

*WHOLESALE DEALERS IN TEXTILES*

94, 2nd Cross Street,
Colombo-11.

T'Phone: 28329

கணபதி தாளைக் கருத்திடை வைப்பாம்

with best compliments

from

# sivayoga jewellers

54, SEA STREET, COLOMBO - 11.

வாரண முகத்தான் மலர்த்தாள் வெல்க.

★

அ. ச. ப. சிவன்பிள்ளை

# A. S. P. SIVAN PILLAI

IMPORTERS, GENERAL MERCHANTS

&

COMMISSION AGENTS

DEALERS IN SRI LANKA PRODUCTS

**214, Keyzer Street,**

**COLOMBO-11.**

*Phone: 21693*

ஆசிரியர் தலையங்கம்

# தொண்டு தொடரட்டும் . . .

கோண்டாவில் நெட்டிலைப்பாய்ப் பிள்ளையார் கோவில் இன்று பூரண சந்திரன்போலப் பொலிவுடன் விளங்குகின்றது. கோவிலின் எப்பகுதியைப் பார்க்கினும் இந்தப் பொலிவு விநாயகப் பெருமானது அடியார்களுக்கு மிகுந்த மனநிறைவைக் கொடுக்கும். கடந்த அரை நூற்றுண்டு காலமாகத் தவமிருந்து பெற்றதுபோன்ற ஒரு பெறுபேறு இது. இந்தப் பேறு கோண்டாவில் மக்கள் மாத்திரமல்ல சைவ மக்கள் அனைவருமே வியந்து போற்றத் தக்கது. இந்தச் சிறப்பினை எவ்விதம் சம்பாதித்துக் கொண்டோம் என்பதனை இந்தப் பொன்னுன நாளில் நாம் அனைவரும் ஒருகணம் சிந்தித்துப்பார்க்கக் கடமைப்பட்டிருக் கின்றோம்.

விக்கினங்களைத் தீர்க்கும் விக்கினேஸ்வரரது ஆலயம் இரவோடு இரவாகவோ அல்லது ஒருவாரம் இருவாரங்களுக் கிடையிலோ இத்தகைய வளர்ச்சியை அடைந்துவிடவில்லை. இந்த எழிலைக்காண நாம் பலவருடங்கள் ஐக்கியவழி நின்று பாடுபட்டுள்ளோம். பல முக்கிய நிருவாகிகள் இரவும் பகலும் சோர்வின்றி வெய்யிலென்றும் மழையென்றும் பாராது தமது கடமையே கண்ணுக இருந்திருக்கின்றார்கள். அவர்களது உழைப்பிற்கு ஊக்கமளிப்பது போல ஊர்ப்பொது மக்களும், அகமும் முகமும் மலர, வேண்டிய பொன்னையும் பொருளையும் வாரி வாரி வழங்கியிருக்கிறார்கள், உற்சாகமூட்டியிருக்கிறார்கள், உதவிகள் பல செய்திருக் கிறார்கள்.

இம் மாபெருந் தெய்வத் திருப்பணி தமது காலத்தில் இனிது நிறைவெய்த வேண்டு மென்று முதியவர்கள் பலர் தவமிருந்தனர். அவர்களது தவம் அவம்போகவில்லை. தவ மிருந்து பெற்ற தவப்புதல்வர்கள் பலர் - இளைஞர்கள் - முதியவர்களின் கனவு நனவாகக்கூடிய முறையிலே செயற்பட்டிருக்கிறார்கள். உணவும் உறக்கமுமின்றி அவர்கள் கடந்த நான்கு ஆண்டுகளாக இரவும் பகலும் அயராது, இருபத்துநான்கு மணிநேரமும் கோவிலடியிலேயே தங்கிப் பணிபுரிந்திருக்கிறார்கள். அவர்கள் புரிந்துள்ள சிரமதானப் பணிகள் ஒன்றல்ல இரண்டல்ல. கோவிலைப் புனருத்தாரணம் செய்யவேண்டுமென்று ஊர்ப்பொதுமக்கள் மகா சபை கூடித் தீர்மானித்த அந்தக் கணத்திலிருந்து இந்தக் கணம்வரை அவர்கள் செய்த தொண்டுகள் எமது கோவிலின் வரலாற்றிலே பொன்னெழுத்துக்களாற் பொறிக்கப் படவேண்டியவை.

நெட்டிலைப்பாய் கோவிற்பற்றைச் சேர்ந்த பொதுமக்களும் இளைஞர்களும் ஒரு முன் மாதிரியைத் தமிழ் ஈழத்திற்கே காட்டியிருக்கிறார்கள். அந்த முன்மாதிரிதான் அனைவரும் காட்டிய ஒற்றுமையுணர்வு. ''ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு'' என்பது ஆன்றோர் வாக்கு. இன்று காட்டப்பட்டுள்ள இந்த ஒற்றுமையும், அன்பும், பண்பும், சகோதரத்துவ மனப் பான்மையும், சாதனையும் நீண்டகாலம் நீடிக்கவேண்டும். இந்த உறவே எமது எதிர் காலத் திட்டங்களுக்கெல்லாம் அடியத்திபாரமாக அமையவேண்டும்.

கடந்த நான்கு ஆண்டுகளாகப் பரிபாலன சபையினர், திருப்பணிச் சபையினர், முதிய வர்கள், ஆண்கள், பெண்கள், இளைஞர்கள், சிறுவர் சிறுமியர்கள் ஆகிய எத்திறத்தினரது உள்ளங்களிலும் எல்லாம் வல்ல கணேசரது திருப்பணிகள் எப்பொழுது இனிது முடிவெய் தும், நாம் அனைவரும் என்று மகா கும்பாபிஷேகப் பெருவிழாவைக் காண்போம், கண்டு இன்பம் பெறுவோம் என்கின்ற ஏக்கமும் ஆசையுமே குடிகொண்டிருந்தன. இன்று அந்த அவா எல்லைகடந்த மகிழ்ச்சியுடன் நிறைவைக்கண்டுள்ளது.

எமது பணியும் கடமையும் இத்துடன் முற்றுப்பெற்றுவிடவில்லை. இதுவே எமது திருத்தொண்டுகளின் ஆரம்பமாக அமையட்டும். அடியார்களும் தொண்டர்களும் கைக்கொண்டுள்ள சீலமும், நாம் அனைவரும் ஒருவர் என்கின்ற உணர்வும் பக்தியும் நம்பிக்கையும் மேன்மேலும் வளரட்டும். அதுவே எமது இலட்சியம்; அதுவே எமது மூச்சு; அதுவே எமது பணி, அதுவே எமது சிந்தனை; அதுவே எமது எண்ணம்; அதுவே எமது மகிழ்வு; அதுவே எமது மனநிறைவு; அதுவே எமது தொண்டு; எனவே, தொண்டர்கள் தொகை பெருகட்டும். அவர்தம் தொண்டு வற்றாது வளமுடன் சலசலத்துப் பாய்ந்தோடும் ஜீவநதிபோல ஒரு கணமேனும் தேங்காது தொடரட்டும் என்பதே எமது பிரார்த்தனை.

''பெரியது கேட்கின் எரிதவழ் வேலோய்
பெரிது பெரிது புவனம் பெரிது
புவனமோ நான்முகன் படைப்பு
நான்முகன் கரியமால் உந்தியில் வந்தோன்
கரிய மாலோ அலைகடற் றுயின்றோன்
அலைகடல் குறுமுனி அங்கையி லடக்கம்
குறுமுனியோ கலசத்திற் பிறந்தோன்
கலசமோ புவியிற் சிறு மண்
புவியோ அரவினுக் கொருதலைப் பாரம்
அரவமோ உமையவள் சிறுவிரல் மோதிரம்
உமையோ இறைவர் பாகத் தொடுக்கம்
இறைவரோ தொண்டர் உள்ளத் தொடுக்கம்
தொண்டர்தம் பெருமை சொல்லவும் பெரிதே''

— ஒளவையார்

'' தன்குற்றம் நீக்கிப் பிறர்குற்றம் காண்கிற்பின்
என்குற்றம் ஆகும் இறைக்கு''.

# திருப்பணிச்சபைக் காரியதரிசியின் அறிக்கை

எல்லாம் வல்ல எமது நெட்டிலைப்பாய் விநாயகப்பெருமானுக்கு இன்று நடைபெறும் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த புனராவர்த்தன பிரதிஷ்டா மஹா கும்பாபிஷேக தினத்தில் திருப்பணிச் சபை தனது அறிக்கையை வெளியிடுவதில் பெருமகிழ்ச்சி அடைகிறது.

கடந்த சில வருடங்களாக நிரந்தரமான ஓர் பரிபாலன சபையோ அன்றி திருப்பணிச் சபையோ இன்றி இவ்வூர்வாழ் சைவப் பெருமக்களின் பராமரிப்பின் கீழிருந்து வந்த எமது விநாயகர் ஆலயத்திற்கு நளவருடம் சித்திரைத் திங்கள் இரண்டாம் நாள் (14-4-76) இவ்வாலயத்தில் நடைபெற்ற தீர்த்தோற்சவத்தன்று கூடிய வழிபடுவோரின் ஆலோசனைப் படியும் அன்று கூடிய அடியார்களின் கூட்டத் தீர்மானப்படியும் நளவருடம் சித்திரைத் திங்கள் 31ம் நாள் (13-5-76) ஓர் மகாசபைக் கூட்டம் நடைபெற்றது. அன்றைய தினம் நிரந்தரமான ஓர் பரிபாலன சபையும், திருப்பணிச்சபையும் மகா சபையினரின் பூரண ஒத்துழைப்புடன் ஏகமனதாக அமைக்கப்பட்டது.

புதிதாக அமைக்கப்பட்ட திருப்பணிச்சபையின் நோக்கத்திற்கு அமைய ஆதிமூலத் திருப்பணி வேலையில் திருப்பணிச் சபையினர் ஈடுபட்டனர். அதன் முதல் முயற்சியாக நிதி சேகரிக்கும் வேலை ஆரம்பிக்கப்பட்டது. அதற்கு எமது கோவில்பற்றைச்சேர்ந்த அடியார்களும் ஏனைய அன்பர்களும் மனம்தளராது நிதியை வாரி வழங்கினர். உற்சாகமூட்டி ஊக்கமும் காட்டினர். இதன்பயனாக ஆதிமூலத்தை முற்றிலும் புதிதாகக் கட்டுவதற்கு எம்பெருமான் அருள்கிடைத்தது. இதன் முதல் நிகழ்ச்சியாக நளவருடம் தைத்திங்கள் 28ம் நாள் மூலமூர்த்தியாகிய விநாயகருக்கும் பரிவார மூர்த்திகளுக்கும் பாலஸ்தானம் நடைபெற்றது. இதனைத் தொடர்ந்து எமது ஊர் இந்து இளைஞர்களின் சிரமதானப் பணிமூலம் பழைய ஆதிமூலக்கட்டிடம் அகற்றப்பட்டதுடன் அத்திவாரம் வெட்டும் பணியும் இளைஞர்களின் சிரமதானமூலம் மிகக் குறுகிய காலத்தில் மிகவும் சிறப்பாகச் செய்துமுடிக்கப்பெற்றது இவ்வேலை பூர்த்தியாக்கப்பட்டதும் நளவருடம் பங்குனித் திங்கள் 8ம்-நாள் (21-3-77) திங்கட்கிழமை காலை 9-15 மணிக்கும் 10-15 மணிக்கும் இடைப்பட்ட சுபமுகூர்த்தத்தில் எமது விநாயகப்பெருமானின் ஆதிமூலக் கட்டிடத்திற்கு அத்திபாரக் கல் நாட்டப்பெற்றது.



ஆ. முத்துக்கிருஷ்ணன்

இதனைத் தொடர்ந்து அராலி தெற்கு திரு. வி. நாகமுத்து ஆச்சாரியார் அவர்களால் வானவரிமட்டும் அத்திபார வேலைகள் பூர்த்தியாக்கப்பட்டன. வானவரிக்கு மேல் கர்ப்பக்கிருகம், அர்த்த மண்டபம் ஆகிய இரண்டும் வெள்ளைக்கல்லினால் கட்டி முடிக்கப்பட்டுள்ளது. இத்திருப்பணியை மல்லாகம் ஆறுமுகம் முத்துக்கிருஷ்ணன் அவர்களிடம் திருப்பணிச்சபை ஒப்படைத்தது. 62 வயதுடைய திரு. முத்துக்கிருஷ்ணன் அவர்களுக்கு 40 வருடங்களுக்குமேல் வெள்ளைக்கல் வேலையில் கைதேர்ந்த அனுபவம் உண்டு. இவரை நாம் தேடிச் செல்லவில்லை. விநாயகர் திருவருளே அவரை ஆலயவாசலில் அழைத்து வந்து சேர்த்தது. திரு. முத்துக்கிருஷ்ணன் அவர்களின் சிறந்த கலைப்படைப்பாக வெள்ளைக் கல்வேலை அமைந்துள்ளது. இவருடைய திறமைக்கும் கலைத்திறனுக்கும் இது ஓர் எடுத்துக்காட்டாகக் காட்சி அளிக்கிறது. உரிய காலத்தில் வெள்ளைக் கல் வேலையை பூர்த்தியாக்கி சிறப்

புற அமைத்துத்தந்த திரு. ஆ. முத்துக்கிருஷ்ணன் அவர்களுக்கும் அவருடைய குழுவினருக்கும் முக்கியமாக திரு. பசுபதி அவர்களுக்கும் திருப்பணிச் சபையின் நன்றியை தெரிவிக்கின்றோம்.

வெள்ளைக் கல் வேலை பூர்த்தியாக்கப்பட்டதும் கர்ப்பக்கிருகத்தோடு சேர்த்து இரு தளங்களோடு கூடிய விமானத்தையும், அர்த்த மண்டபத்துக்கு மேல் கர்ணக்கூட்டுச் சாலையையும் அமைக்கவேண்டும் எனத் திருப்பணிச் சபையினர் தீர்மானம் எடுத்தனர். இந்த முக்கிய திருப்பணி வேலையை சிற்ப வேலைகளில் கைதேர்ந்த ஓர் சிற்பாசாரியாரிடம் ஒப்படைக்க வேண்டும் என்று எண்ணிக்கொண்டு இருக்கும் போது எமது மதிப்பிற்குரிய அராலி தெற்கைச் சேர்ந்த திரு. விசுவநாதன் தம்பிராசா அவர்களை விநாயகப் பெருமானே ஆலய வாசலில் கொண்டுவந்து சேர்த்தார்கள். இவரை நாம் தேடிச் செல்லவில்லை. நமது விமானத்தையும், சிற்பங்களையும் அமைக்கக் கூடிய ஆற்றல் உள்ளவர் திரு. தம்பிராசா அவர்கள்தான் என்பதை எம்பெருமானே தீர்மானித்து அவரிடம் வேலையை ஒப்படைக்கக் கூடிய மன நிலையை எல்லோருக்கும் ஏற்படுத்திய தெய்வச்செயலை நாம் பின்பு உணர்ந்தோம்.



திரு. வி. தம்பிராசா

திரு. தம்பிராசா ஆச்சாரியார் அவர்கள் இலங்கையின் பலபாகங்களில் உள்ள ஆலயங்களில் சிற்பங்களை உருவாக்கி 30 வருடங்களுக்கு மேற்பட்ட கைதேர்ந்த அனுபவம் வாய்ந்தவர். 50 வயதுடைய திரு. தம்பிராசா அவர்களைப் பற்றி நாம் விபரித்துக் கூறத் தேவையில்லை. இவ்வூர் மக்கள் அனைவருக்கும் அவருடைய சிறந்த குணதிசயங்களைப்பற்றி நன்கு தெரியும். எமது விநாயகர் ஆலயத்தில் தத்துவ ரீதியாக சிற்பங்கள் படைத்துள்ளார். நமது நாட்டில் உள்ள ஆலயங்களில் முன்பெல்லாம் சிற்பங்களை அமைப்பதாயின் அதிக பொருட் செலவில் தென்னிந்தியாவில் இருந்தே சிற்பாசாரிமாரை அழைத்து சிற்பங்களை உருவாக்க வேண்டிய நிலை இருந்தது. இன்று திரு. தம்பிராசா போன்றவர்களின் முயற்சியினாலும் திறமையினாலும் இந்த நிலைமாறி நமது நாட்டிலே உள்ள கலைஞர்களினாலும் சிற்பங்கள் உருவாக்கக் கூடிய நிலை ஏற்பட்டுள்ளது. திரு. தம்பிராசா போன்றவர்கள் ஆற்றும் தொண்டிற்கு நமது தமிழ்கூறும் சைவ உலகம் என்றும் நன்றி செலுத்தக் கடமைப்பட்டுள்ளது.

திரு. வி. தம்பிராசா அவர்களும் அவருடைய குழுவினரும் எமது விநாயகர் ஆலயத்திலும் பரிவார ஆலயங்களிலும் விமானத்தையும் சிற்பங்களையும் அமைத்து வர்ணந்தீட்டி உரிய காலத்தில் மிகச் சிறப்போடு அமைத்துத் தந்துள்ளார்கள். இவர்களுடைய தெய்வத் திருப்பணி என்றும் நிலைத்திருக்க எம்பெருமான் அருள் புரிவாராக.

மூலமூர்த்தியாக இருக்கும் விநாயகப் பெருமான், மகாலக்ஷ்மி, முருகன், பைரவர், ஆகியவற்றிற்குரிய நூதன மூர்த்திகளை தத்துவ சாத்திரங்களுக்கு அமைய காலதாமதமின்றி உரிய காலத்தில் பூர்த்தியாக்கி தந்த ஆனைப்பந்தியைச் சேர்ந்த திரு. நா. பாலகிருஷ்ணன் ஆசாரியாருக்கும் அவருடைய உதவியாளர்களுக்கும் திருப்பணிச் சபையின் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

ஆலயங்கள் புதுப்பித்து நிர்மாணிக்கும்போது நாம் முக்கிய கவனம் செலுத்த வேண்டியன அளவு, பிரமாணம், அமைப்புமுறை ஆகிய அம்சங்களேயாம். இதற்கு ஐங்கரன் அருளால் தென்னிந்தியாவில் இருந்து இந்நாட்டிற்கு வந்து சிலகாலம் மாவிட்டபுரத்தில் வசித்துவந்த திரு. பெரியசாமி ஆச்சாரியார் அவர்களுடைய ஆலோசனையை நாம் பெறக்

கூடியதாய் இருந்தது. அவருடைய ஆலோசனைக்கும் விதிமுறைக்கும் அமையவே எமது விநாயகர் ஆலய ஆதிமூலக்கட்டிடம், மகா மண்டபம், தரிசன மண்டபம், பரிவார மூர்த்திகளாகிய ஸ்ரீ முருகன் ஆலயப் பண்டிகை ஸ்ரீ நடேசர் ஆலயப் பண்டிகை ஸ்ரீ பைரவர், ஆலயம் என்பன அமைக்கப்பட்டுள்ளன. திரு. பெரியசாமி ஆச்சாரியார் அவர்கள் தற்பொழுது இலங்கையைவிட்டுச் சென்று இந்தியாவில் வசித்துவந்தாலும் அவருடைய தெய்வத் தொண்டிற்கு எமது பணிவான நன்றியைக் கூறக்கடமைப்பட்டுள்ளோம்.

தானங்கள் பல உண்டு. அதில் மிகவும் சிறப்பானது சிரமதானம். அத்தகைய சிறப்பு வாய்ந்த சிரமதானப்பணியை இவ்வூர் இந்து இளைஞர்கள் எமது விநாயகர் ஆலயத்தில் மிகவும் சிறப்புடன் நிறைவேற்றியுள்ளார்கள். புதுப்பித்து புனர்நிர்மாணம் செய்யப்பட்ட அநாதியான கட்டிடங்கள், அனைத்தையும் அகற்றியதுமுதல் அத்திபாரம் வெட்டுதல் வீதிகள் செப்பனிடுதல் வரையுள்ள சகல வேலைகளையும் அவர்கள் பூர்த்தியாக்கியுள்ளார்கள். அத்துடன் ஆலயத்தின் பல்வேறுவகையான வேலைகள் அனைத்தையும் எமது இந்து இளைஞர்கள் மிகவும் கண்ணியமான முறையில் நிறைவேற்றி உள்ளார்கள் என்பதை பெருமையுடன் கூறிக்கொள்வதில் திருப்பணிச்சபை பெருமைப்படுகிறது. இத்துடன் இவர்களுடைய பணி நிற்கவில்லை. எத்தனையோ சோதனைகளுக்கு மத்தியில் தாம் திரட்டிய நிதிமூலம் மகாமண்டபத்தின் தெற்கு வாயிற் கதவை அமைத்துள்ளார்கள். ஆலயத்தின் முன் மண்டபத்தில் ஓர் விநாயகர் வர்ண ஓவியத்தையும் அமைத்து மண்டபத்திற்குப் புதுமெருகூட்டியுள்ளார்கள். அந்த ஓவியத்தை மின்விளக்குகளால் அலங்கரித்து புதுமையோடு காட்சியளிக்கும் சிறப்பினை தமது முயற்சியின் மூலம் திறம்பட நிறைவேற்றியுள்ளார்கள். இளைஞர்கள் அனைவரும் இரவு பகல் என்றுபாராது உறக்கம் இன்றி இத்தெய்வத் திருப்பணிக்கு ஆற்றிய தொண்டிற்கு இவர்கள் அனைவருக்கும் நல்ல வளமான எதிர்காலத்தை எல்லாம் வல்ல விநாயகப்பெருமான் அளிப்பாராக.

எமது விநாயகர் ஆலயத்தில் ஸ்ரீ முருகன், ஸ்ரீ நடேசர், ஸ்ரீ பைரவர் ஆகிய பரிவார மூர்த்திகளுக்கு ஆலயங்கள் அமைக்கப்பட்டு பரிபாலிக்கப்பட்டு வருகிறது. விநாயகருடைய ஆலயத்தின் தென்மேற்கு மூலையில் பரிவார மூர்த்தியாக மகாலக்ஷ்மிக்கு ஓர் ஆலயம் அமைக்கவேண்டும் என திருப்பணிச் சபையினர் பலருடைய விருப்பமாக இருந்தது. இதனைப்பற்றி சிந்தித்தும் செயற்படுத்துவதற்கு திருப்பணிச்சபையின் நிதிநிலைமை இடந்தரவில்லை. இதனால் எமது தெய்வச் சிந்தனையை எவ்வாறு நிறைவேற்றுவது என்று எண்ணிச் சிந்தித்துக்கொண்டிருக்கும்போது விக்னேஸ்வரரின் அருளால் ஒருநாள் எமது ஊர்வாசியும் மிகத் தெய்வநம்பிக்கையும் உள்ளவருமான திருவாளர் சோமசுந்தரம் சின்னத்துரை அவர்கள் தமது குடும்பத்தினர் விநாயகர் ஆலயத்தில் மகா லக்ஷ்மிக்கு ஓர் ஆலயம் அமைக்க விரும்புகிறோம்; அதற்கு அனுமதி அளிப்பீர்களா என்று கேட்டார்கள். யார் இப்பணியை நிறைவேற்றுவார்கள் என்று யோசித்துக்கொண்டிருந்த திருப்பணிச் சபையினருக்கு இவரது வேண்டுகோள் தெய்வ அனுக்கிரகமாக இருந்தது. கணேசப்பெருமானே இத்திருப்பணிக்கு இவர்களுடைய மனதை தூண்டியிருக்கவேண்டும். அவருடைய தெய்வத்தொண்டிற்கு திருப்பணிச் சபையினர் பூரண ஆதரவு அளித்தனர். அதன் பலனாக இன்று எமது ஆலயத்தில் அருள்பாலித்துக் கொண்டிருக்கிறது மகாலக்ஷ்மி ஆலயம். இவ்வாலயத்தையும் பண்டிகையில் அட்டலக்ஷ்மிகளின் சிற்பங்களையும் மிகச்சிறப்போடு உருவாக்கிய திரு. வி. தம்பிராசா ஆச்சாரியார் அவர்களின் கலைத்திறன் சகலரினதும் ஏகோபித்த பாராட்டைப் பெற்றுள்ளது. மகாலக்ஷ்மி ஆலயத்தை அமைத்து சிறப்போடு நிறைவேற்றிவைத்த திரு. சோ. சின்னத்துரை அவர்களுக்கும் அவரது குடும்பத்தினருக்கும் சகல செல்வங்களையும் கொடுத்துச் சிறப்பான எதிர்காலத்தை அளிக்க எல்லாம் வல்ல விநாயகர் அருள் பாலிப்பாராக.

இன்றைய கும்பாபிஷேக விழாவின் பிரதிஷ்டா பிரதான குருவாகிய சிவஸ்ரீ. வை. சபாரத்தினக் குருக்கள் எமக்குப் புதியவர் அல்ல. எமது அயல் கிராமத்தில் உள்ள உரும்

பராய் கருணைகரப்பிள்ளையார் கோவில், இணுவில் ஸ்ரீ சிவகாமி அம்பாள் கோவில் ஆகியவற்றின் பிரதான குருவானவராவர். மிகவும் சிறப்பான ஆலயங்களின் குருவாக இருந்து சகல சிறப்போடும் வாழும் ஒருவர் எமது விநாயகர் கும்பாபிஷேகத்தின் பிரதம குருவாக இருந்து சிறப்புற நிறைவேற்றிவைத்தமை எமது ஊர்மக்களின் நற்பயனே. பிரதமகுரு அவர்கள் திருப்பணிச் சபையின் வேண்டுகோளை ஏற்று எமது விநாயகரின் புனராவர்த்தன பிரதிஷ்டா மஹா கும்பாபிஷேக விழாவை இனிது நிறைவேற்றிவைத்து ஆசி உரையும் வழங்கியமைக்குத் திருப்பணிச் சபையின் நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

சிவஸ்ரீ தா. அரிகரசுப்பிரம்மண்யக் குருக்கள் அவர்கள் கடந்த இருபது வருடங்களாக இவ்வாலயத்தின் நித்திய அர்ச்சகராக இருந்து மிகவும் சீரிய முறையில் தமது தெய்வத் தொண்டினை ஆற்றிவருகிறார்கள். 1975-ம் ஆண்டு எமது விநாயகப்பெருமான் முன்னிலையில் குருப்பட்டம் ஏற்றார்கள். இவர் 1976-ம் ஆண்டு இவ்வாலயத்தில் நடைபெற்ற வருடாந்த உற்சவத்தில் தமது முதல் கொடியேற்ற வைபவத்தை மிகச்சிறப்போடு நிறைவேற்றிவைத்தார்கள். இவ்வாலய உற்சவத்தின்போது இவர்கள் செய்த யாகங்கள், கிரியைகள், பூசைகள் என்பவற்றின் பலனாகவே விநாயகப்பெருமானின் ஆதிமூலக் கட்டிடம் புதுப்பித்துக் கட்டக்கூடிய தெய்வ அனுக்கிரகம் கிடைத்தது என நம்புகிறோம். திருப்பணி வேலைகளுக்கும், மஹா கும்பாபிஷேக விழாவிற்கும் இவர்கள் காட்டிய ஆதரவும், ஒத்துழைப்பும் எமக்கு மிகவும் உதவியாக இருந்தது. விநாயகரின் நித்திய பூசைகளை குறைவின்றி தொடர்ந்து நடத்துவதற்கும் ஊர்மக்களின் குறைகளுக்கு தமது கையினால் இடும் திருநீற்றின் மூலம் ஆறுதல் அளிப்பதற்கும் ஐங்கரன் இவருக்கு அருள்பாலிப்பாராக.

பிரம்மஸ்ரீ தா. மகாதேவ சர்மா அவர்கள் எமது ஆலய நித்திய அர்ச்சகர் அவர்களின் மூத்த சகோதரர் ஆவர். இவர்கள் இணுவில் தர்மசாஸ்தா குருகுலத்தின்பிரதம ஆசிரியராக இருக்கிறார்கள். இவர்கள் சைவாகம வேதங்களை மிகவும் சிறந்தமுறையில் கற்றவர்கள்; இலங்கையின் பல பாகங்களிலும் மஹா கும்பாபிஷேக கிரியைகளைச் சிறப்புடன் நடாத்தி மிகுந்த அனுபவமும் ஆற்றலும் அடைந்தவர்கள். இப்படியான ஓர் சிறந்த குருவின் ஆலோசனைக்கு அமையவே எமது விநாயகப்பெருமானின் மஹா கும்பாபிஷேக விழா நடைபெற்றுள்ளது. இவர்கள் எமது ஆலயத்தில் ஆற்றிய தெய்வத்தொண்டிற்கு விநாயகப்பெருமான் அருள்பாலிப்பாராக.

எமது ஆலயத்திருப்பணி வேலைகளுக்கு பலதுறைகளிலும் தொண்டாற்றிய கோண்டாவில் மேற்கு திரு. வீரவாகு முருகையா ஆச்சாரியார் அவர்களும், யாழ்ப்பாணம் பிறவுண் வீதியைச் சேர்ந்த திரு. சு. பாஸ்கரன் ஆச்சாரியார் அவர்களும், யாழ்ப்பாணம் அன்னசத்திரம் வீதியில் வசிக்கும் திரு. சோ. நாகராசன் அவர்களும் தமது வேலைகளை உரியகாலத்தில் பூர்த்தியாக்கித்தந்து எம்பெருமானின் திருப்பணிவேலைக்கு உதவி புரிந்தமைக்கு திருப்பணிச் சபையின் நன்றியைத் தெரிவிக்கின்றோம்.

இம் மங்களகரமான நேரத்தில் விநாயக அடியார்களுக்கு எமது நன்றியைச் செலுத்துதல் மிகவும் சிறப்புடையது. ஆதிமூலத்திருப்பணிவேலையை ஆரம்பித்து பூரணத்துவமான்முறையில் அதை அமைத்தது அடியார்களின் ஒத்துழைப்பினாலேயே. எந்தச் சந்தர்ப்பத்திலும் நிதி இல்லை என்ற காரணத்திற்காகத் திருப்பணிவேலையை இடைநிறுத்தம் செய்ததில்லை. விக்கினங்களைத் தீர்க்கும் விநாயகப்பெருமான் அடியார்களின் மனதில் தெய்வ நம்பிக்கையையூட்டி தம் திருப்பணிக்கு நிதியை சேகரித்துக்கொண்டார். நாம் நிதி சேகரிக்கச் சென்றபோதெல்லாம் மிகுந்த தெய்வநம்பிக்கையோடு அடியார்கள் அனைவரும் நிதி தந்து உதவினார்கள். அத்துடன் சில அடியார்கள் ஆலயத்திற்கு தேவையான சில பொருட்களைத் தமது செலவில் மிகவும் நல்ல முறையில் செய்து விநாயகப்பெருமானுக்கு அளித்துள்ளார்கள். பொன்னாகவும், பொருளாகவும் எம் விநாயகருக்கு வாரிவழங்கிய அடியார்கள் அனைவருக்கும் அவர் அருள்பாலிப்பாராக.

ஆலயத்தின் ஆதிமூலத்திலிருந்து கொடித்தம்பம் வரையுள்ள திருப்பணி வேலைகள் யாவும் மிகவும் சிறப்பான முறையில் நிறைவேறியுள்ளன. மிகுதியாக இருக்கும் வசந்த மண்டபத்திருப்பணி; உள்சுற்றுப்பிரகாரக் கொட்டகைவேலை; தேர்த்திருப்பணிவேலை; இராஜ கோபுரத்திருப்பணி வேலைகள் என்பன எம்பெருமான் ஆலயத்தில் நிறைவேற்றவேண்டியுள்ளன. இதற்கு அடியார்களுடைய பேராதரவு தொடர்ந்தும் கிடைப்பதற்கு எல்லாம்வல்ல விநாயகப்பெருமான் அருள் பாலிப்பாராக.

பொ. இலங்கநாதபிள்ளை
சி. க. சபாபதி
செ. கனகரத்தினம்
இணைக்காரியதரிசிகள்

## மூஷிக வாகனன்

ஒவ்வொரு தெய்வத்துக்கும் ஒரு வாகனம் இருக்கிறது. உண்மையில் உயிர்கள் எல்லாம் தெய்வத்துக்கு வாகனமாகின்றன. அந்தந்த தெய்வத்துக்குரிய வாகனம் அத்தெய்வத்தின் தனி மகிமையை விளக்குவதாகும். விநாயகக் கடவுள் பெருச்சாளி வாகனன் எனப் பெயர்படைத்துள்ளான். எலியின்மீது அவன் ஊர்ந்து செல்லுதலே அதற்குக் காரணமாகும். எலியின்மீது யானை ஏறிச்செல்வது நகைப்புக்குரிய விஷயமாகும். மிதியுண்டு எலி செத்துப்போய்விடும். சாகாது அது வேழத்தைச் சுமந்து செல்லுகிறது என்றால் அது பெரு வேதனைக்கு உள்ளாகும். உட்பொருளை உணராதார் இங்ஙனம் ஊகிக்க இக்கோலம் இடம் கொடுக்கிறது.

ஆத்மாவைப் பற்றிய உண்மையொன்று உண்டு. பெரியதிலெல்லாம் ஆத்மா மிகப்பெரியது. நுண்ணியதிலெல்லாம் அது மிக நுண்ணியது. ஜிவாத்மாக்களில் சிறிய உடலில் இயங்குவது சிறிய ஆத்மாவென்றும், பெரிய உடலில் இயங்குவது பெரிய ஆத்மாவென்றும் எண்ணலாகாது. உடல் சிறியது எனினும் உள்ளிருக்கும் ஆத்மா அளப்பரியது. வடிவங்களில் அது கட்டுப்படுவதில்லை. ஜடப் பொருள்களுக்கு எடையுண்டு. கனமானதென்றும் இலேசானதென்றும் பூதப் பொருள்களைப் பற்றிப் பகரலாம். அறிவுப் பொருளைப்பற்றி அங்ஙனம் பகர்வது பொருந்தாது. அறிவு வளர்வதால் மூளைக்கோ உடலுக்கோ பாரம் அதிகரிக்கிறது என்று சொல்லலாகாது. உடலும் உயிரும் சேர்ந்தது ஜீவாத்மா. உடல் வடிவத்தில் ஆத்மாக்கள் யாவும் எல்லையில் அடங்கிய சிறு ஜந்துக்களாம். ஆத்ம சொரூபத்திலோ ஒவ்வொரு ஜீவனும் அளப்பரிய பெரிய பொருளாகுந்தன்மையது. இக்கோட்பாட்டைப் பெருச்சாளி வாகனன் புகட்டுகிறான்.

சுவாமி சித்பவானந்தர்

# நிறைவு

கோண்டாவில் நெட்டிலைப்பாய்ப் பிள்ளையார் கோயில்
கோலமே முற்றாக மாறிவிட்ட தாமே!
நீண்டநாள் அப்படியே கிடந்துபழ சாகி
நேற்றுநின்ற மண்டபங்கள் இன்றுபுதி சாக
வேண்டுமென்று திருப்பணிகள் செய்தபடி யாலே
மேம்பாடு கொண்டதையா கோண்டாவிற் கோயில்
ஆண்டவனே, பிள்ளையார் அப்பனே என்றும்
அபிசேகம் காண்பதற்கு வருகின்றார், மக்கள்.

ஒக்கலைவிட் டிறங்காத பிள்ளைவரு கின்றான்
உலகமுற்றும் போய்மீண்ட இளைஞர்வரு கின்றார்
அக்கையரும் தங்கையரும் கூடிவரு கின்றார்
அலங்காரம் குலையாமல் அசைந்துவரு கின்றார்
பொக்குவாய் புன்னகைத்துப் பாட்டிவரு கின்றாள்
பொல்லூன்றி நரைத்ததலைப் பாட்டன்வரு கின்றார்
விக்கினேசா! எம்மைக் காத்தருளும் என்று
வேண்டுதல்கள் செய்தபடி வருகின்றார், மக்கள்.

வாழைநட்டு வெள்ளைகட்டிப் பந்தல்கள் போட்டார்
மாவிலைகள், தோரணங்கள், பூமுடிகள் செய்தார்
வாழ்கவென்று மேலலையும் ஆலவட்டம் தூக்கி
மற்றுமுள்ள குடை,கொடிகள் சப்பரங்கள் ஆக்கி,
நாழிகைகள் பலவெடுத்து நாதஇசை இழுக்கும்
நாயனங்கள் மேளங்கள் சிலசோடி பிடித்தார்
ஏழைகளும் செல்வர்களும் கூடிஇவை செய்தார்
ஈசன்மகன் கோயில்வலம் வருகின்றார் மக்கள்.

குடமுழுக்குக் காண்பதற்கு வருவோர்கள் வாழி
கூப்பியகை நெகிழாத அன்பர்கள் வாழி
கடவுளுக்குக் கோயில்கட்டிச் சிற்பங்கள் செய்யக்
கல்பொழிந்த கலைஞர்களின் கைகளெல்லாம் வாழி
கொடைகொடுத்த ஊர்மக்கள் கொள்கைநலம் வாழி
கோண்டாவில் நெடுங்காலம் குறைவின்றி வாழி
நெடுமுழைப்புக் காரர்களின் இருப்பிடமா யுள்ள
நெட்டிலைப்பாய் அமர்ந்தவனின் நிறைந்தவருள் வாழி.

முருகையன்

நெட்டிலைப்பாய் சித்திவிநாயகன் யாவர்க்கும்

அருள் பாலிப்பானாக

*with best compliments*

*from*

# K. K. INDUSTRIES

MANUFACTURERS OF ALUMINIUM WARES

48, OLD MOOR STREET,
COLOMBO - 12.

Phone: 35331

வெள்ளைக் கொம்பன் விநாயகனைத் தொழத்
துள்ளியோடுந் தொடர்ந்த வினைகளே.

★

*Space Donated*

*by*

**SINGAM STORES**

216, PRINCE ST., COLOMBO-11.

WHOLESALE AND
RETAIL MERCHANTS,
COMMISSION AGENTS,
ESTATE & BUNGALOW
REQUISITES SUPPLIERS.

T'Phone: **27009**

எமது இதயம் நிறைந்த நல்வாழ்த்துக்கள்.

*with compliments*

*from*

# MIRANDA SHOP

109, OLCOTT MAWATTE,

COLOMBO-11

சித்திர மோனத் தேவன் வாழ்க.

எஸ். பி. எஸ். ஏஜன்ஸி
113, நாலாம் குறுக்குத் தெரு,
கொழும்பு - 11

PHONE: 26204

**S. P. S. AGENCY**
IMPORTERS, GENERAL MERCHANTS AND
COMMISSION AGENTS

*Space Donated By*

**KARUNA TRADING CENTRE**
29, DAM STREET, COLOMBO - 12

Phone: 35769

GRAMS: KARUNAI

சங்கரன் மகனே சதுரா ஜெய ஜெய

♣

# SELVARATNAM STORES

WHOLESALE & RETAIL GENERAL MERCHANTS

DEALERS IN TEA & OILMAN STORES ETC.

13, Old Butcher Street,
COLOMBO-11.

Phone: 27548

அன்பளிப்பு:

## ஸ்ரீ சிவகாமி கைத்தறி நிலையம்

இணுவில்.

↓

## வளர்மதி ரெக்ஸ்ரைல்ஸ்

176, கே. கே. எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.

தொலைபேசி: 7590

விநாயகனே வெவ்வினையை வேரறுக்க வல்லான்.

*with best compliments*

*from*

# EAGLE ELECTRICALS

5, KUMARA VIDIYA, KANDY.

☎ 2913

நெட்டிலைப்பாய் கோவில்பற்று இளைஞர்களின்
சிரமதானப்பணிகளைப் பாராட்டுகிறோம்.

*With Best Compliments from*

# Woodlands Company

IMPORTERS, EXPORTERS, & COMMISSION AGENTS

**Dealers in all kinds of Local Produce**

192, 4th Cross Street,
COLOMBO - 11.

☎ 27451

வஞ்சனை பலவும் தீர்ப்பாய் ஜெய ஜெய

BEST COMPLIMENTS

FROM

# *Yoga Trading Company*

யோகா டிரேடிங் கொம்பனி

GENERAL MERCHANTS & COMMISSION AGENTS

AGENTS FOR LOCAL PRODUCE

68, 4TH CROSS STREET,

COLOMBO-12.

Phone: 26065



# இலங்கையில் சைவசமயமும் நவீனமயமாக்கமும்

பேராசிரியர் கலாநிதி க. கைலாசபதி

இலங்கைவாழ் இந்துக்களைப் பற்றிப் பொதுப்படையாகப் பேசுவோர், அவர்கள் சைவசித்தாந்த நெறியைப் பின்பற்றுபவர்கள் என்றும் அச்செந்நெறியே அவர்கள் வாழ்க்கையை ஊடுருவி நிற்கிறது என்றும் சிலாகித்துக்கூறுவர். இன்னும் சிறிது வரையறை செய்துகொண்டு, யாழ்ப்பாணத்து இந்துக்களைப் பற்றிக் குறிப்பாகப் பேசுபவர்கள், கந்தபுராண கலாசாரமே அவர்களை நெறிப்படுத்துகிறது என்பர். சைவசித்தாந்தத்தின் பிழிசாறுகக் கந்தபுராணம் உள்ளது என்ற அடிப்படையில் அவ்வாறு கூறப்படுகிறது. இக்கூற்றுக்கள் தென்னிந்தியாவை மனங்கொண்டே அடிக்கடி கூறப்படுவதுண்டு. இந்து சமயத்தின் இருபெரும் உட்பிரிவுகள் சைவமும் வைணவமும்ஆகும். இவை தமிழ்நாட்டில் ஏறத்தாழச் சமமான செல்வாக்குடன் விளங்குகின்றன. ஆனல் இலங்கைவாழ் இந்துக்களிடையே வைணவர்கள் மிகக் குறைந்த தொகையினரே. அவ்வகையில் இலங்கையில் சைவம் தலையாய சமய நெறியாக விளங்குகிறது என்பதில் தடையில்லை. அதைப்போலவே தரிசனங்களுள் ஒன்றுய வேதாந்தம் இந்தியாவில் பெருஞ்செல்வாக்குடன் திகழ்வதைக் காணலாம். நவீன காலப்பகுதியில், வேதாந்தத்தின் பெருமை இந்தியாவிற்கு வெளியிலும் பரவியுள்ளது. விவேகாநந்தர், அரவிந்தர், இராதாகிருஷ்ணன் முதலியோரின் நூல்கள் நவீன வேதாந்தம் செழித்துப் படருவதற்கு வழிவகுத்துள்ளன. இலங்கைவாழ் இந்துக்களைப் பொறுத்தவரையில் வேதாந்தமும் அவர்களிடையே பெருவழக்காயுள்ளது என்பதற்கில்லை. இச்செய்திகளைக் கூர்ந்து கவனிக்கும்பொழுதே, இந்நாட்டு இந்துக்களிடையே சைவசமயம் அதாவது சைவசித்தாந்தம், தனிச்சிறப்புடைய நெறியாக விளங்கிவருதல் யாவரும் ஒப்பமுடிந்த உண்மையென்பது தெளிவாகும்.

இலங்கையிற் சைவசமயம் பல நூற்றுண்டுகளாக நிலவிவந்திருப்பது உண்மையேயாயினும், சைவாகம உணர்ச்சி எல்லாக்காலத்தும் தனிச்சிறப்புடனும் தனிஉரிமையுடனும் இருந்துவந்ததோ என்பது ஆராய்ச்சிக்குரியதொன்றுகும். வைணவமும், கண்ணகியம்மன் முதலிய தெய்வங்களின் வழிபாடும் ஒரு காலத்தில் இப்பொழுதிருப்பதிலும் பார்க்கக் கூடுதலாக இருந்திருத்தல் வேண்டும் என்றே கருதவேண்டியுள்ளது. வட, கிழக்கு மாகாணங்களிலும் வன்னிப் பிரதேசத்திலும் வழங்கிவந்துள்ள நாட்டார் பாடல்களையும் தெய்வவழிபாட்டு வழக்காறுகளையும் ஆராயும்பொழுது பெண் தெய்வங்களின் வழிபாடும், பல்வேறு கரணங்களும் சமயச் சடங்குகளும் மக்கள் மத்தியில் மிகையளவினவாக இருந்தமை உறுதிப்படுகின்றது. உதாரணமாக நாய்ச்சிமார் வழிபாடு ஒருகாலத்திலே வன்னிப்பகுதியில் முக்கியம் வாய்ந்ததாக இருந்திருக்கிறது. பருத்தித்துறை, காங்கேசன்துறை, யாழ்ப்பாணம் முதலிய இடங்களிலும் நாய்ச்சிமார் வழி

பாட்டின் எச்சசொச்சங்களை இன்றும் காணக்கூடியதாய் இருக்கிறது.

வரலாற்று ரீதியாக நோக்குமிடத்து, இப்பொழுது வடபகுதித் தமிழ் இந்துக்களிடையே செல்வாக்குடன் விளங்கும் சைவ சித்தாந்தம் ஆறுமுகநாவலர் காலத்தை அடுத்த காலப்பகுதியிலேயே தனிச்சிறப்பு வாய்ந்த உயர்நிலை எய்தியது எனலாம். நல்லை நகர் ஆறுமுக நாவலர் யாழ்ப்பாணத்தில் மாத்திரமன்றி தமிழ்நாட்டிலும் சைவசமயத்தைப் புனருத்தாரணஞ் செய்யப் பெரும்பாடுபட்டார் என்பது பொதுவாக ஏற்றுக்கொள்ளப் படுவதாகும். பரசமயங்களின் ஊடுருவல்களினால் நலிவுற்றிருந்த சைவசமயத்தை மீண்டும் நிலைநாட்டினார் என்ற கூற்று மிகை எளிமைப்படுத்தப் பட்டதொன்றாகும். பரமத கண்டனங்களை மேற்கொண்டும், சுயமத ஸ்தாபனத்தைச் செய்தும் சமயத் தொண்டாற்றிய நாவலரவர்கள் நலிவுற்றிருந்த சைவசமயத்தை அப்படியே நிலை நிறுத்தினாரல்லர். அதிற் சிலமாற்றங்களை உண்டாக்கினார்.

''யாழ்ப்பாணச் சமயநிலை'' என்ற பிரசித்தி பெற்ற கட்டுரையில் நாவலர் எடுத்துக்கூறிய விமர்சனங்கள் அன்று மக்கள் மத்தியில் வழங்கிய சைவசமயத்திற் காணப்பட்ட குறைகள் பற்றியனவே. அக்குறைகளிற் பல பிற மதத்தவராலும் கூறப்பட்டிருந்தன. அக்குறைபாடுகளைக் களைவதாலேயே சைவத்தை மீண்டும் நன்னிலைக்குக் கொண்டுவருதல் சாலும் என்று நாவலர் நம்பினார்; அதற்கேற்றவாறு செயற்பட்டார். எனவே நாவலருக்குப் பின் வந்த சைவம் 'பழைய' - நாவலர் காலத்திலும் அதற்குச் சிறிது முன்னரும், நிலவிய சைவம் அன்று. சீர்திருத்தமடைந்த சைவசமயத்தையே நாவலரும் அவரைச் சார்ந்து நின்றோரும் இந்துக்களிடையே நிலைநாட்டினர்.

இவ்விடத்திலே ஓர் உதாரணம் காட்டுவோம். நாவலர் காலத்திலே கோயில்களில் கணிகையரின் நடனம், இசை என்பன இடம்பெற்றன. ஒழுக்கநெறிநின்று நோக்கிய நாவலர், 'சின்னமேளம்', 'சதுர்' என்றெல்லாம் வழங்கிய நடன நிகழ்ச்சிகளைக் கண்டித்ததோடு அவை சாத்திர விரோதமானவை என்றும் வாதிட்டார், ஆயினும் பரசமயத்தவர், குறிப்பாகக் கிறித்தவர்கள் சைவக்கோயில்களில் நடப்பவற்றை எள்ளி நகையாட வாய்ப்பு ஏற்படுகிறது என்பதே நாவலரை அதிகம் உறுத்தியது. ''சுப்பிரபோதம்'' என்ற கட்டுரையில் நாவலரது உள்ளக்கிடக்கையைக் கண்டுகொள்ளக்கூடியதாய் இருக்கிறது.

''பாதிரிகள், சண்டை சலஞ்சாதித்தல் தாசி சதுர் சங்கீதம் பரஸ்திரிகூட்டம், வாத்திய முழக்கம், வாண விளையாட்டு முதலிய வேடிக்கைகள் யாவும் திருவிழாவில் உண்டென்றும், அவை கந்தருக்கும் காமுகருக்கும் வாய்ப்பென்றும் இகழ்கின்றார்கள்.

இக்காலத்திலே, கோயிலதிகாரிகள் பெரும்பான்மையும் சைவாகமவுணர்ச்சியும் நல்லொழுக்கமும் சிவபக்தியுமில்லாதவர்களாயும், சிவத்திரவியாபகாரத்திலும் வியபிசாரத்திலுமே கருத்தைச் செலுத்துவோர்களாயு மிருத்தலாலும், அக்கோயில்களுக்குப் பொருள் கொடுப்போர்களும் அவ்வாறே புண்ணியபாவப் பகுப்புணர்ச்சியின்றி, கோயில்களில் வெகுசனங்கள்முன் தாங்கள் பெறும் உபசாரத்தையும் தாசிகள் கூட்டம் வாணவிளையாட்டு முதலிய வேடிக்கைகளையுமே பொருளென மதித்தலாலும், சில கோயிலதிகாரிகள் பூசை திருவிழாக்களைக் குத்தகைகூறி விற்றலாலும், பொய் களவு வியபிசாரம் சிசுவதை வழக்கோரம்பேசல் முதலிய பெரும் பாதகங்களைச் செய்யும் பிராமணர்கள் கோயிலதிகாரிகளிடத்திலே பொருள் கொடுத்துப் பூசை திருவிழாக்களையும், அவற்றோடு சிவத்திரவியாபகாரமாகிய அதிபாதகத்தையும் விலைக்குக் கொள்ளுதலாலும், அதனால் சைவாகமவுணர்ச்சியும் நல்லொழுக்கமும் சிவபக்தியுமுள்ள பிராமணர்கள் விலக்கப்

படுதலாலும், நமது தேவாலயங்கள் சைவாகம விதிப்படி நடவாதொழிந்தன.''

இக் கூற்றிலே நாவலரவர்களுடைய நிலைப்பாட்டை நன்கு கண்டுகொள்ளலாம். கண்டிப்பான - ஒழுக்கத்தை அதீதம் வற்புறுத்தும் - மார்க்கத்தையே நாவலர் விதந்துரைத்தல் வெளிப்படை. சமய வரலாற்றுசிரியர்கள் இதனைத் தூய்மை வாதம் என்பர். புலனின்பங்களைக் கடிந்து சிந்தனைபூர்வமான சமய ஒழுகலாறுகளைச் சிறப்பிப்பது தூய்மைவாதம். சமயங்களிலே சீர்திருத்தஞ் செய்ய முற்படுவோரெல்லாம் இத்தகைய கடுந்தூய்மைக் கட்சியினராகவே இருப்பதை அடிக்கடி காண்கிறோம். சைவத்தில் மாத்திரமன்றி வேறு மதங்களின் வரலாற்றை நோக்கினும், சிற்சில கால கட்டங்களில் நியமங்களையும் நெறிமுறைகளையும் மட்டுமழுப்பில்லாத – விட்டுக்கொடுப்பற்ற - முறையில் கைக்கொள்ளுதலையே சமயியின் கடுந்தேர்வாகக் கருதும் மாறு மரபேற்புக்கோட்பாட்டாளர் தோன்றுவதை நாம் காண்கிறோம். அத்தகையோர், தாம் வாழ்ந்த காலத்திலும் அதற்குச் சிறிது முன்னரும் வழக்கிலிருந்த சடங்கு சம்பிரதாயங்களிற் பல இடையே வந்து புகுந்தவை என்றும், அவை மூல நூல்களிற் காணப்பெறாதவையென்றும், பழைய - தூய - நிலைக்குச் சென்றால்மட்டுமே உண்மையான சமய உணர்ச்சியையும் விளக்கத்தையும் பெற்றுக்கொள்ள முடியும் என்றும் வாதிடுவர். அந்தவகையில், தாம் சில பல மாற்றங்களைப் புகுத்தியபோதும், அவற்றை மாற்றங்கள் எனக் கொள்ளாது இடைப் பிறவரலாக நுழைந்தவற்றைக் களைந்து முற்பட்ட நிலைக்கு இட்டுச்செல்லும் முயற்சியாகவே அவற்றைக் கருதுவர். அதன் காரணமாகவே, அவர்களை மாறு மரபேற்புக்கோட்பாட்டாளர் என்று நாம் கூறுகிறோம். இதனைச் சற்று விளக்குதல் தகும்.

மேலே நாம் எடுத்தாண்டுள்ள மேற்கோளிலே, நடனம், இசை. வாண வேடிக்கை முதலியன கோயில்களின் புனிதத் தன்மையையும் தூய்மையையும் கெடுத்துவிடுகின்றன என்று நாவலரவர்கள் வாதிடுவதைப் பார்த்தோம். நாவலர் எழுப்பிய குரல் அவருக்குப்பின் வேறு பலராலும் எழுப்பப்பட்டு, நவீன சமய சீர்திருத்தக் குரலாக அமைந்துவிட்டதென்பது உண்மையே. கோயிலதிகாரிகளும், பிராமணர்களும் பிறப்புரிமையாலும் சொத்துடமையாலும் கோயில்களிலே தாம் எண்ணியவாறு நடந்தமையை நாவலர் கண்டிப்பதை நாம் கவனிக்கலாம். கோயிலோடு நேரடியாகச் சம்பந்தப்பட்டிராத நாவலரவர்கள் கோயில் நிர்வாகமும் வழிபாட்டு முறைகளும் சமயாசாரங்களும் எவ்வாறிருத்தல் வேண்டும் என நிருணயிக்க விரும்புவதை அவரது கூற்றுக்கள் தெளிவுறுத்துகின்றன. இது நிதானித்து நோக்கவேண்டியது. பல விஷயங்கள் இதில் அடங்கியுள்ளன. நாவலர் திருத்திய சைவசித்தாந்தத்தின் அடிப்படை அமிசங்களும் இதில்தான் அடங்கியுள்ளன. நாவலர் காலத்திலே பூரண உருப்பெறாது விடினும், நவீன யுகத்திலே செல்வாக்குப் பெற்றுவந்துள்ள ஜனநாயகக் கோட்பாடு சமயத்துறையில் செயற்படத் துவங்கியமையையும் நாவலர் கூற்றுக்களிலே இனங்கண்டு கொள்ளக்கூடியதாய் இருக்கிறது.

இனி மீண்டும் நாவலர் கூற்றுக்கு வருவோம். கணிகையர் நடனம் விலக்கப்படவேண்டியது என்ற கருத்து நவீன சீர்திருத்தப் போக்கோடு இசைவுடையதாய் அமைந்தபொழுதும், நாவலர் காலம்வரையில் நிலவிவந்த சைவசமயத்தில் கணிகையர் நடனம் கோயிலோடு பிணைந்திருந்தது என்பது வரலாற்றுச் செய்தியாகும். குறிப்பாக, பக்தி இயக்கம் தமிழ் நாட்டிலே பெருக்கெடுத்துப் பாய்ந்த பல்லவர் ஆட்சிக் காலமுதல், இசை நடனம் முதலிய லளித கலைகள் கோயில்களிலேயே செழித்து வளர்ந்தன. சமண பௌத்த மதங்களின் கடு நோன்பு, இன்பமறுப்பு, ஒதுங்கிய துறவு வாழ்வு என்பவற்றுக்கு மாறாக ''மனித்தப் பிறவியும் வேண்டுவதே இந்த மாநிலத்தே'' என்னும் இன்பக் கிளர்ச்சியுடனும் குதூகல உணர்ச்சியுடனும் உலகையும் வாழ்க்கையை

யும் எதிர்நோக்கின. மறுமலர்ச்சி பெற்ற வைதிக சமயங்களான சைவமும் வைணவமும். சைவ நாயன்மார் பலருடன் அவர் தம் மனைவியரும் சேர்ந்தே சமயவாழ்வில் ஈடுபட்டனர். பக்தியியக்கம் தூய்மை வாதத்தைப் பேணிய தொன்றன்று.. கடுந் துறவையும் வற்புறுத்திய தொன்றன்று. கணிகையர் மரபில் வந்த பரவையாரைத் திருமணம் செய்தவர் தம்பிரான் தோழரான சுந்தரர். திரு எறும்பியூர்ப் பதிகத்திலே.

> பொருந்து பூண்முலை
> மங்கைநல் லாளொடும்
> எறும்பி யூர்மலை
> யானெங்க ளீசனே

என்று குதூகலத்துடன் இறைவனைப் பாடுகின்றார் திருநாவுக்கரசர். இத்தகைய இன்ப நோக்குடன் வளர்ந்துவந்த சைவத்தில் நடனம் இசை என்பவற்றை வெறுத்தொதுக்கும் கண்டிப்பு இருக்கவில்லை. கோயிலோடு இரண்டறக் கலந்து வளர்ந்து விட்ட சைவத்தில் தூய்மைவாதம் இலகுவில் தலைகாட்டவில்லை.

ஆனல் சீர்திருத்தம் வேண்டிய நாவலர் கோயில்களில் புலனின்ப மிகுதியான ஆடல் பாடல்களும், அவற்றின் விளைவான ஒழுக்க வீனங்களுமே நமது சமயத்துக்கு ஊறு விளைவிக்கின்றன எனக்கருதினர். கல்வி மானன நாவலருக்கு வரலாற்றுச் செய்திகளை முற்ருகப் புறக்கணிக்கவும் இயலவில்லை. முற்காலச் சைவ ஆலயங்களில் கணிகையர் பெற்றிருந்த இடம் அவருக்குத் தெரியாமலில்லை. எனவே அவ்விஷயத்தைச் சர்ச்சை செய்தார்.

> ''உருத்திர கணிகையர் வியபிசாரம் மதுமாமிச பக்ஷணம் முதலிய பாதகங்களின்றி, சிவவேடம் பூண்டு, சிவபக்தியிற் சிறந்தவர்களென்று சைவாகமங்கள் சொல்லுகின்றன. இதற்கு மாருக, இக்காலத்தார் கோயில்களெங்கும் மதுமாமிச பக்ஷணமுடையவர்களாய் வரையின்றி யாவரையும் புணரும் ஸ்திரீகளை உருத்திர கணிகையரென்று நியோகிக்கின்ருர்கள். . . . இக்காலத்தில் சில கோயில்களிலே அவைகளினதிகாரிகள் புராணம் கேட்கவும் திருவிழாத்தரிசிக்கவும் வரும் பரஸ்திரிகளிற் சிலரோடும் தாசிகளோடும் இம்மையிலிகழ்ச்சிக்கும் மறுமையில் நரகவேதனைக்கும் சிறிதுமஞ்சாமல் வியபிசாரஞ் செய்கின்ருர்கள்''.

தனது காலத்துக் கோயில்கள் பலவற்றிற் பணிபுரிந்த கணிகையர்க்கும் முற்காலத்து உருத்திர கணிகையர்க்கும் வேறுபாடு உண்டென்று வாதிப்பதனலேயே, கணிகையரோடு தொடர்புடையவற்றைக் கண்டித்தொதுக்குகிருர் நாவலர். முற்காலத்தில் உருத்திரகணிகையர் அனைவரும் அப்பழுக்கற்ற அரனடியாராகவும், ஒழுக்க சீலராயும் இருந்தனர் என்னும் கூற்று, கேட்பதற்கு இனிமையப்பதாய் இருப்பினும் எவ்வளவு தூரம் யதார்த்தத்திற்குப் பொருந்துவதாய் இருந்திருக்கும் என்பது விவாதத்துக்குரியதே. உருத்திர கணிகையர் பற்றி இலட்சியமயமான கூற்றுக்கள் ஆங்காங்கு இலக்கியங்களிலே இடம் பெற்றிருத்தல் கூடும். ஆனல் அவ்வருணனைகள் நடைமுறை வாழ்க்கையின் சித்திரங்கள் எனக்கொள்ளவேண்டியதில்லை. ஆனல் முற்காலப் பிற்காலக் கணிகையர்பற்றிய ஒப்பீட்டு ஆராய்ச்சியன்று நமக்கு இவ்விடத்திலே வேண்டப்படுவது. கணிகையர் நடனம், இசை முதலியவற்றை நாவலர் நிராகரித்தமையே நாம் மனங்கொளவேண்டியதாகும். ஒழுக்கத்தின் அடிப்படையில் கோயில்களையும் நிர்வாகிகளையும் பிராமணர்களையும் அளவிட்ட நாவலர், புலனின்பக் களங்களை வெறுத்தொதுக்கியமையே கருதத்தக்கதாகும். அவ்வாறு செய்ததன் பயனக சைவசமய நடைமுறைகளிற் சிலதிருத்தங்களை உண்டாக்கினர்.

சரியோ, பிழையோ கணிகையர் நடனம் இசை முதலியன பொதுமக்களின் மகிழ்ச்சிக்காகவும், பக்திப் பெருக்கத்திற்காகவும் பரம்பலுக்காகவும் நடைபெற்றன என்பதும்

மறுக்கமுடியாததொன்று. முற்காலத்தில் கிராமங்கள் கோயிலை மையமாகக்கொண்டு இயங்கின என்பதும் சமயத்தோடு இணைந்து சமூக வாழ்க்கையும் பொருளாதார வாழ்க்கையும் கலைவாழ்க்கையும் நடைபெற்றன என்பதும் வரலாறறிந்த செய்திகளாம். கற்றறிந்தோர் மாத்திரம் கோயிலுடன் தொடர்புடையராய் வாழவில்லை. பொது மக்களே கோயில்களிலிருந்து பெரும்பயன் பெற்றனர் எனலாம். அப்பயன்களில் ஒன்றே கலையின்பம். ஆயினும் தூய்மை வாதி என்ற முறையில், லளித கலைகள்மூலம் புலனின்பப் போக்கும் ஒழுக்கக்கேடுகளும் தவிர்க்கமுடியாதவாறு விளையுமென்று கருதிய நாவலர், புலனின்பப் பொழுது போக்குகளுக்குப் பதிலாக அறிவுசார் பொழுதுபோக்கு வழிகளை அறிமுகப்படுத்தினர்.


> ''சிவபத்திமான்களும் பண்ணோடோதவல்லவர்களுமாகிய ஓதுவார்கள் பலரை நியோகித்துப் பூசாகாலத்தும் உற்சவகாலத்தும் யாவருக்கும் மனங் கசிந்துருக உரோமஞ் சிலிர்ப்ப ஆனந்த வருவிசொரியச் சிவன்மேல் அன்பு செனிக்கும் பொருட்டுத் தேவாரமுந் திருவாசகமுமாகிய தமிழ் வேதத்தை ஓதுவித்தலும், சைவப்பிரசாரகர்களை நியோகித்து வாரந்தோறுங் கடவுளது மகிமையையும் புண்ணிய பாவங்களையும் அவற்றின் பலன்களையும் கடவுளை வழிபடும் முறைமையையும் குறித்துச் சனங்களுக்குப் போதிப்பித்தலும் செய்வார்களாயில், அறியாமை நீங்கும்; பாவந் தேயும்; புண்ணியம் வளரும்; சிவபத்தி தழைக்கும்.........''

அறிவு பூர்வமாயும் தருக்கரீதியாயும் நாவலர் வற்புறுத்துகின்ற அமிசங்கள் நவீன சைவத்தில் காணப்படுவது கண்கூடு. திருத்தம்பெற்ற சைவசமயமே இப்பொழுது நம்மவரால் கைக்கொள்ளப்படுவது.

மற்றொன்று. நாவலர் காலம்வரை சைவ சமயம் கோயில்களிலும் மடாலயங்களிலுமே பேணிப்பாதுகாக்கப்பட்டுவந்தது. அவற்றுடன் நேரடியாகத் தொடர்புகொண்டோரே சமயம், தத்துவம், இறையியல் என்பன குறித்து அதிகாரபூர்வமாகப் பேசவும் எழுதவும் தகுதியுடையவர்களாகக் கொள்ளப் பட்டுவந்தனர். இந்நிறுவனங்களுக்கு வெளியே சைவசித்தாந்த நூல்களைக் காண்பதுதானும் அரிதாயிருந்தது. திருவும் திருவுடையார்க்கே என்பதுபோல கோயில், மடம் என்ற நிறுவனங்களுடன் தொடர்புடையவரே, கோயில், மடாலயம் என்பன வற்றின் தொடர்பால் சமய உலகில் பிரபலியம் பெற்றுத் திகழமுடிந்தது. அது ஒரு சிறு உலகம்; சுயதிருப்தியும் தன்னிறைவும் கொண்ட உலகமாய் இருந்தது. நாவலரே முதன்முதலாக எந்த ஒரு கோயிலையோ, தேவஸ்தானத்தையோ, மடாலயத்தையோ சார்ந்து நிற்காமல் சமயத்துறையில் அதிகாரபூர்வமான கருத்துக்களைத் துணிவுடன் கூறத்தக்கவராயிருந்தார். சைவசமய சம்பந்தமான சொற்பொழிவுகளைப் பொதுமக்களுக்கு வழங்கியதன்மூலம், கோயிலதிகாரிகளினதும் மடாதிபதிகளினதும் ஏகபோகஉரிமையாயிருந்தசைவத்திற்கு விடுதலையளித்து, சமயத்தில் நேர்மையான அக்கறைகொண்ட எவரும்அதில் ஈடுபட்டு உழைக்கலாம் என்னும் கருத்துக்கு வலுவூட்டினர். உலகியல் சார்ந்த பல்வேறு தொழில்களில் ஈடுபட்டுப் பல்வேறு பக்குவநிலைகளில் உள்ளோரும் சைவசமய வளர்ச்சியிலும் பணியிலும் பங்கு கொள்ளும் நிலை இந்நூற்றுண்டில் சர்வ சாதாரணமாகிவிட்டது. குறிப்பாக தமிழ் நாட்டிலே 1905ஆம் ஆண்டு சைவசித்தாந்த சமாஜம் துவங்கப்பெற்றது. அதனை நிறுவுவதில் முன்னின்றவர்களுள் திரு. ஜே. எம். நல்லசாமிப்பிள்ளை (1864-1920) சிறப்பாகக் குறிப்பிடப்படவேண்டியவர். மாவட்ட நீதிபதியாகக் கடமையாற்றிய நல்லசாமிப் பிள்ளை நல்லைநகர் ஆறுமுக நாவலர்பால் பெருமதிப்புக்கொண்டவர். உலகியல் வாழ்வில் இருந்துகொண்டே சைவசித்தாந்த உலகில் உயர்மதிப்புடன் திகழ்ந்தவர். சைவசித்தாந்த சமாஜத்திலே, சமய நிறுவனங்களுடன் நேரடியாகத் தொடர்பு கொள்ளாதோரே அதாவது துறவையும்

குருத்துவத்தையும் தழுவாதோரே, முக்கிய பதவிகள் வகித்து வந்துள்ளனர். சமாஜத்தின் முதல் மகாநாட்டுக்கு சேர். பொன்னம்பலம் இராமநாதன் தலைமைவகித்தார் என்பது நினைவுகூரத்தக்கது. சேர். அம்பலவாணர் கனகசபை, சேர். கந்தையா வைத்தியநாதன், சு. நடேசபிள்ளை முதலிய இலங்கைப் பிரமுகர்களும், சேர். சி. பி. இராமசுவாமி ஐயர் போன்ருேரும் சமாஜத்தின் மகாநாடுகளுக்குத் தலைமை வகித்திருக்கின்றனர். முன்னர் நல்லசாமிப்பிள்ளை சித்தாந்த தீபிகை என்ற இதழை நடத்திய போதும், பின்னர் சமாஜம் சித்தாந்தம் என்ற இதழைத் தொடர்ந்து நடத்திவரும் நிலையிலும், சைவசமயம், சைவசித்தாந்தம் சம்பந்தமான ஆதாரபூர்வமான ஆய்வுக் கட்டுரைகளும் சிந்தனைகளும் அவ்விரு ஏடுகளில் வந்துள்ளன. இவையனைத்தும் நாவலர் காலத்திருந்து சைவம் பெற்ற புதிய பரிமாணங்கள் என்பதில் ஐயமில்லை. ம. பாலசுப்பிரமணிய முதலியார், க. சச்சிதானந்தபிள்ளை, ச. சிவகுமாரன், மு. திருவிளங்கம், க. வச்சிரவேல் முதலியார், மு. அருணுசலம், மு. ஞானப்பிரகாசம் முதலியோர் உலகியல் நெறியிலிருந்துகொண்டே சைவசித்தாந்த அறிஞர்களாய் விளங்கிவந்துள்ளனர். இது முற்காலச் சைவத்தில் அதிகம் காணப்படாத ஓர் அமிசமாகும்.

சைவசமயத்தை ஜனரஞ்சகப்படுத்தி, எளிமைப்படுத்த நாவலர் எடுத்த முயற்சிகளின் தருக்கரீதியான விளைவே மேற்கூறிய போக்குகள் எனலாம். இதனை இன்னெரு கோணத்திலிருந்தும் நோக்கி விளக்கலாம். கோயிலும் மடாலயங்களும் நாவலர் காலத்திலும் அதற்குப் பின்னரும்கூட, பழைய நிலமானிய அமைப்பில் வாழ்ந்த மக்களுக்கேற்ற நிறுவனங்களாய் இயங்கின. கோயிலை மையமாகக்கொண்ட கிராமங்களில் பொருளியல் வாழ்வுமுதல் கலை வாழ்வு ஈருக யாவும் கோயிலை முன்னிட்டே நடைபெற்றன. ஆனல் நவயுகத்திலே அம்முறை பெரிதும் மாறிவிட்டது. உதாரணமாக உருத்திர கணிகையர் கோயில்களில் ஆடிய காலத்தில் பரதக் கலை கோயிலிலேயே வளர்ந்தது. அங்குதான் மக்கள் சிறப்பான பரதத்தைக் கண்டு மெய்மறந்தனர். ஆனல் இன்றோ, கோயிலில் பரதம் வெகு அருமையாகவே இடம்பெறும். சிறந்த நடன நிகழ்ச்சிகள் பொது அரங்குகளிலேயே இடம்பெறும். அதாவது பரதம் சமயச்சூழலிலிருந்து விலகி, சமயச்சார்பற்ற பொழுதுபோக்குக் கலைவடிவமாகிவிட்டது. இசையும் அவ்வாறே. ஆங்கிலத்தில் இதனை Secularisation என்பர். முரணுரைபோலக் கூறுவதாயின், சமயத்தின் கணிசமான பகுதியும் இன்று உலகியல்நிலை சார்ந்துவிட்டது. மத்தியதர வர்க்கத்தினர் நவீன வாழ்க்கையில் அமிழ்ந்துகொண்டே சமயிகளாகத் தம்மை எண்ணிக்கொள்வதற்குத் '' திருந்திய '' சமயம் இடமளிக்கிறது. அதன் தருக்கரீதியான முடிவாகவே, ஆங்கிலம் கற்று, வழக்குரைஞர் தொழிலிலிருந்து வாணிபம் செய்யும் தொழில்வரையிலான பல்வேறு நிலைகளில் உள்ளவர்களும் சைவசித்தாந்தத்தில் நிபுணர்களாக விளங்கக்கூடிய சூழ்நிலை இருபதாம் நூற்ருண்டில் ஏற்பட்டது. அது சைவத்தில் ஏற்பட்ட உலகியல் தன்மை ஆகும். இதில் விசித்திரம் யாதெனில், தூய்மையுணர்ச்சியுடன் சமய வாழ்க்கையையே இலட்சியமாகக்கொண்டு வாழ்ந்த நாவலரவர்கள் தாம் அறியாமலே வரலாற்றின் கருவியாகச் சைவத்தின் நவீனமயமாக்கத்துக்குக் காரணகர்த்தராய் இருந்திருக்கிருர். அதனலேயே நமது காலத்தில் ஆதீனங்களிலும்பார்க்க பொதுமக்கள் அங்கத்துவம் வகிக்கும் மன்றங்கள் சமயத் துறையில் முக்கியத்துவம் வாய்ந்தனவாய் உள்ளன. எனவே, இன்று நாம் சைவ சமயம் குறித்தும் சைவசித்தாந்தம் குறித்தும் எண்ணும்பொழுது, கடந்த ஒன்றரை நூற்ருண்டுக் காலத்தில் இவை பெற்றுள்ள பல்வேறு மாற்றங்களையும் கருதுதல் தகும். இதேகாலப்பகுதியில் உருவாகி வந்துள்ள பொதுவான ஜனநாயக வளர்ச்சியின் வெளிப்பாடாகவும் சமயத்துறையில் ஏற்பட்ட மாற்றங்களைக் கருதுதல் தவருகாது.



# கோவில்கள் நிறைந்த பதி

— செல்லப்பா நடராசா —

''கோவில் இல்லா ஊரிற் குடி இருக்க வேண்டாம்'' என்பது ஔவையார் வாக்கு. ஆனால் கோண்டாவில் மக்களோ தமது கிராமம் முழுவதையுமே கோவில்களாக நிர்மாணித்து அக்கோவில்களின் சுற்றுப் பிரகாரங்களில் வாழ்கின்ற பெருமைக்குரியவர்கள். இத்தகைய தனித்துவச் சிறப்பைத் தமிழ் ஈழத்தில் வேறு எங்கணும் காண்பது அரிது. வீதிகள்தோறும் கோவில்கள். பேரொழுங்கைகள் முதல் சின்னஞ்சிறு பாதைகள் ஈறாக எங்கு புகினும் வழிபாட்டுத் தலங்கள். அதிகாலையும் மாலையும் கிராமம் முழுவதுமே இடைவிடாதொலிக்கும் ஆலயங்களின் கண்டாமணி ஓசையில் மூழ்கி இன்புற்றுத் திளைத்து நிற்கும் ஜீவராசிகள். மணியோசை கோவிற்பூசை வழிபாடுகளை நினைவூட்டும். கோவில்களில் மாத்திரமல்ல, வீடுகளிலும் பக்திநிலை அலைபுரளும். இத்தகைய பெருமைக்குக் காரணம் என்ன?

கொடியேறி வருடாந்த உற்சவங்கள் நடைபெறுகின்ற தலங்கள் கோண்டாவிற் கிராமத்தில் காரைக்கால் சிவன்கோவில், ஸ்ரீ பூதவராயசுவாமி கோவில், சிவகாமி அம்மன் கோவில், நாகபூஷணி அம்மன் கோவில், ஆசிமட அரசடி விநாயகர் கோவில், ஸ்ரீ மகாகணபதிப் பிள்ளையார் கோவில், உப்புமடம் சந்திரசேகரப் பிள்ளையார் கோவில், மஞ்சத்தடி அருணகிரிநாத சுப்பிரமணியசுவாமி கோவில், நெட்டிலைப் பாய் பிள்ளையார்கோவில் என ஒன்பது உள. இந்த ஒன்பது தலங்களைத் தவிர கோண்டாவில் கிராமத்தின் எல்லைகளை அணைத்தபடி நந்தாவில் அம்மன், இணுவில் கிழக்கு சிவகாமி அம்மன் ஆதியாம் கோவில்கள் அமைந்துள்ளன. இக்கோவில்களும் கொடியேறி வருடாந்த உற்சவங்கள் நடைபெறும் பெருமைமிக்கவை. இவை தவிர வருடாந்த பொங்கல் பூசைகள் நடைபெறும் சிறியதும் பெரியதுமான சுமார் இருபத்தைந்து கோவில்களும் கோண்டாவிற் கிராமத்தை அலங்கரிக்கின்றன. இவற்றுள் வருடாந்த அலங்கார உற்சவங்கள் நடைபெறுகின்ற குமரகோட்டம் ஸ்ரீ ஞான பைரவர் கோவில் முக்கியமானது. இது தவிர ஸ்ரீ வல்லியப்பன் கோவில், வாகீஸ்வரி ஞானபைரவர் கோவில், குமரகோட்டம் உடையாற்றை பைரவர் கோவில், பலாலி வீதி அற்புத நர்த்தன விநாயகர் கோவில், அரசடியிலுள்ள ஞானபைரவர் கோவில், பொற்பதி வீதி பழைய மகா காளி கோவில், விதானையாற்றை காளி கோவில், செம்பாடு பொன்னையற்றை காளி கோவில், புகையிரதநிலையத்தடி அதிபதீஸ்வரன்கோவில், சந்தையடி செம்மாதோட்ட ஞான பைரவர் கோவில், நெட்டிலைப்பாய்

நரசிங்க பைரவர் கோவில், புளியடி ஞான பைரவர் கோவில், நெட்டிலைப்பாய் வீதி ஞான பைரவர் கோவில், நவரத்தினராசா வீதி காத்தவராயர் கோவில், விளாத்தியடி பைரவர்கோவில், மொங்கட்டியான் பேய்ச்சி அம்மன் கோவில், கோண்டாவில் மேற்கு சரவணையார் அம்பாள் கோவில், புகையிரத நிலைய வீதி ஸ்ரீ கருணாகர பைரவர் கோவில் எனக் கோவில்களை கோண்டாவிலாக உள்ள பதியில்தான் நெட்டிலைப்பாய் விநாயகர் நடுநாயகமாக வீற்றிருக்கின்றார்.

நெட்டிலைப்பாய் விநாயகர் கோவில் எப்பொழுது தாபிக்கப் பெற்றதென்று சரியாகக் கூற முடியாத அளவு பழம்பெருமை மிக்கதாகும். ஆதிகாலத்தில் இக்கோவிலை சூழ இருந்த நிலங்கள் அனைத்தும் தினையும் குரக்கனும் வள்ளிக் கிழங்குவகைகளும் விளையும் நிலங்களாக இருந்ததாகவும் கமக்காரர்களே தமது வழிபாட்டின் பொருட்டு இவ் விநாயகராலயத்தைத் தாபித்ததாகவும் ஆராய்ச்சிகள் புலப்படுத்துகின்றன. ஓலைக்கொட்டிலிலிருந்து சிறிதுசிறிதாக வளர்ச்சி கண்ட ஆலயம் கல்கொண்டு சாந்துக் கட்டடமாகச் சுமார் நூறு வருடங்களுக்கு முன்னர் கட்டப்பட்டதாகும். 1936 ஆம் ஆண்டு முதல் கொடியேற்றத்துடன் வருடாந்த உற்சவம் நடைபெறும் இவ்வாலயத்தில் மிக நீண்ட காலத்திற்கு முன்னர் ஸ்ரீஅய்யனார் என்ற அந்தணர் பூசை வழிபாடுகளை நடாத்தி வந்தார். அவருக்குப்பின் அவரது மகன் ஸ்ரீ சுப்பிரமணியக் குருக்கள் தமது தந்தையாரின் அடிச்சுவட்டில் கோவிற் கிரியைகளைக் கவனித்து வந்தார். இவர்களது காலங்களில் கோவிலில் புராண படனங்களும் நடைபெற்று வந்துள்ளன. சிவாகமபூஷணம் சிவஸ்ரீ தா. அரிகர சுப்பிரமண்யக் குருக்கள் அவர்கள் கடந்த இருபது வருடங்களுக்கு மேலாக இக்கோவிலின் பூசை வழிபாடுகளைச் செவ்வனே நடாத்தி வருகின்றார். இன்று பழைய சாந்துக் கட்டிடத்தை இடித்து ஆதிமூலம் வெள்ளை வைரக்கல்லால் சமைக்கப்பெற்றுள்ளது. அத்துடன் இங்கு முதன் முதலாக மகாலக்ஷ்மிக்குத் தனியாக கோவிலொன்று பரிவாரத்தில் நிர்மாணிக்கப்பெற்றுள்ளது. பரிவார மூர்த்திகளின் தலங்களும் செப்பனிடப்பட்டு முழுத்தலமுமே இன்று கம்பீரமாகக் காட்சியளிக்கின்றது.

இக்கோவிலின் நீண்டகால பரிபாலனத்தில் ஆங்காங்கே மிகவும் சுவையான வரலாறுகள் காணப்படுகின்றன. ஆதிகாலத்தில் கோண்டாவிற் கிராமத்தில் வருடா வருடம் பெருமளவில் தினைவிளையும். கமக்காரர்கள் தினையை அறுவடை செய்யும் காலங்களில் அவர்களிடம் சென்று கோவிலுக்கெனச் சேகரித்த தினையின் வரும்படி கொண்டு பெரியார் நாகேந்திரர் முருகேசு என்பாரும், பூசாரியார் எனப்போற்றப்பட்ட சுப்பர் செல்லப்பா என்பாரும் கோவிலைப் பேணியதாக முதியோர்கள் கூறுகின்றனர். இக்கோவிலில் தினமும் திருவிளக்கேற்றும் தொண்டினை வள்ளிப்பிள்ளை என்னும் மூதாட்டி பிடி அரிசி எடுத்து செய்து வந்துள்ள வரலாறும் இக்கோவிலுடன் இணைந்துள்ளது. பால்போன்ற வெள்ளைத் தலைமுடியும் குடுகுடுவென்ற பாணியில் நடையும் குறுகிய உருவமும் கொண்ட வள்ளிப்பிள்ளைப் பாட்டியின் தொண்டும் இன்றைய தலைமுறையினருக்கு ஒரு எடுத்துக்காட்டான உதாரணமாக உள்ளது. அதாவது, குடியானவர்கள் தினம்தோறும் தாம் சமையல் செய்யும் அரிசியில் ஒரு பிடியை எடுத்து எடுத்து ஒரு பானைக் குடுவையில் போட்டு வைப்பது வழக்கம். மாதாமாதம் இப்படியாகச் சேமிக்கப்படும் அரிசியையே பெற்று வள்ளிப்பிள்ளைப் பாட்டி கோவிலில் திருவிளக் கேற்றும் தொண்டை மேற்கொண்டு வாழ்ந்தார். இத்திருவிளக்கேற்றும் திருப்பணியை சுமார் கால் நூற்றாண்டு காலம் வல்லிபுரம் மாணிக்கம் என்னும் பெரியவர் அண்மைக் காலங்களில் ஏற்று நடாத்தி வந்தமையும் ஒரு அரிய வரலாற்று உண்மையாகும்.

1960 ஆம் ஆண்டை அடுத்து சில தொண்டர்களது ஆர்வத்தினால் இக்கோவிலில் ஒடிந்துவிழும் நிலையிலிருந்த பல

பகுதிகள் பூரணமாகச் செப்பனிடப்பட்டன எனலாம். அன்றுதொட்டு இன்றுவரை ஊரவர்கள் தத்தமது உபயங்களைச் செய்து வந்துள்ளனர். ஆனால் இன்று ஊர்மக்கள் ஒன்றுதிரண்டு பரிபாலன சபையும் திருப்பணிச் சபையும் அமைத்துக் கோவிலைப் பரிபாலித்து வருவதன் பிரதிபலிப்பே இன்றுள்ள தல வளர்ச்சியாகும்.

நெட்டிலைப்பாய்ப் பிள்ளையார் கோவிற்பற்றைச் சேர்ந்த இளைஞர்கள் பொன்னின் குடத்திற்குப் பொட்டிட்டாற்போன்றுதமது பல்வேறு வகையான சிரமதானப் பணிகளால் இக்கோவிலின் அழகிற்கு அழகூட்டும் முயற்சிகளில் அயராது உழைத்து வருவதும் கண்கூடு. இவ்விளைஞர்களும் திருப்பணிச் சபையைச்சார்ந்த தொண்டர்களேயாயினும் இவர்கள் தமது சிரமதானப் பணிகள்மூலம் ஆலயப் புனருத்தாரணத்திற்காக பல்லாயிரக்கணக்கான ரூபாக்களை மீதப்படுத்த உதவியுள்ளமையையும் ஈண்டு குறிப்பிடுதல் சாலப் பொருத்தமானதாகும்.

இன்று யாழ்ப்பாணக் குடாநாட்டின் மூலை முடக்கெல்லாம் கோவில்கள் புதுப்பிக்கப்பட்டும், ராஜகோபுரங்கள் நிர்மாணிக்கப்பட்டும் மகாகும்பாபிஷேக வைபவங்கள் அடிக்கடி நடைபெற்றுக்கொண்டே இருக்கின்றன. இதை ஒரு சமயப் புரட்சியே நடைபெற்றுக் கொண்டிருக்கின்றதெனலாம். இந்தச் சமயப் புரட்சிக்குக் கோண்டாவிலும் விதிவிலக்காக இருக்க முடியாது. முதியவர்களும் இளைஞர்களும் ஆண்களும் பெண்களும் ஒருங்கே சேர்ந்து நடாத்துகின்ற இந்தச் சமயப் புரட்சி தமிழையும் சிற்பம், சங்கீதம், ஓவியம், நாட்டியம் முதலாம் தமிழ்க்கலைகளையும் பல நூற்றாண்டுக் காலத்திற்குத் தமிழ் ஈழத்தில் வாழவைக்கும் என்று நர்பலாம்.

கடந்த ஐம்பது - குறிப்பாக இருபத்தைந்து - ஆண்டுகளுக்குள்ளாக கோண்டாவில் கிராமம் கிழக்கு, மேற்கு, வடக்கு, தெற்கு ஆகிய நான்கு திசைகளிலும் வீதிகள், கல்விக்கூடங்கள், தலங்கள் ஆகியவற்றைப் பொறுத்த அளவில் பாரிய மாற்றங்களைக் கண்டிருப்பதற்கான வேறொரு காரணத்தையும் இங்கு நாம் சொல்லக் கடமைப்பட்டுள்ளோம்.

''தக்காரும் தாழ்விலாச் செல்வரும்'' சேர்வதுதான் நாடெனப்படும். தாழ்விலாச் செல்வர்களைக்கொண்ட கிராமங்களில் கோண்டாவிலும் ஒன்றெனலாம். கோண்டாவிலில் காலத்திற்குக்காலம் பல தக்கார்கள்தோன்றி நடமாடி மறைந்துள்ளதுடன் இன்றும் வாழ்ந்து வருகின்றனர். கோண்டாவில் மேற்கில் உதித்துப் பாடசாலைகள் தோறும் சிறார்களிடையே நல்லொழுக்கத்தையும் பக்தியையும் ஊட்டிய ஸ்ரீ அம்பலவாண சுவாமிகள் நடமாடிய பதியெனப் பெருமைகொண்டது. காரைக்கால் சிவன்கோவிலில் குடியமர்ந்திருந்து கோவிற்பணியும் அளப்பரும் வைத்தியசேவையும் ஆற்றிய மற்றொரு அம்பலவாண சுவாமிகளையும் கண்ட பெருமை கோண்டாவில் கிராமத்திற்குண்டு குடைச்சாமியார் என இலங்கை முழுவதும் போற்றப்பட்ட சித்தரான ஸ்ரீ கந்தையா சுவாமிகளையும் பெற்றெடுத்த பெருமையும் கோண்டாவிலுக் குரியதெனலாம். சன்னாசியார் எனப் போற்றப்பட்ட சித்தர் ஒருவரும் உலாவிய இடம் கோண்டாவில். இன்றும் அன்னாரது சமாதி காரைக்காலில் இருப்பதைப் பார்க்கமுடியும், தமிழ் இசைவாணர்களும் அதாவது பல நாதஸ்வர விற்பன்னர்களும் கோண்டாவிலில் குறைவின்றி உளர். இவ்வாறாக கடந்த கால் நூற்றாண்டு காலத்துக்கிடையில் கோண்டாவில் கிராமம் பல முன்னேற்றங்களைக் கண்டிருக்கின்றதென்றால் அது இத்தகைய பல தக்கார்கள் வாழ்ந்ததன் பலாபலனே எனலாம்.

இன்று நெட்டிலைப்பாய் பிள்ளையார் கோவில் மகா கும்பாபிஷேகம் பெருவிழாவாகக் கொண்டாடப்படுகின்றது.

ஒரு கோவில் கட்டிக் கும்பாபிஷேகம் நடைபெறுகின்றதென்றால் வெறுமனே ஒரு வழிபாட்டுத் தலம் கட்டிடம் கட்டி முடிக்கப்படுகின்றதென்று அர்த்தமில்லை. ஒரு கோவில் கட்டி முடிக்கப்படுகிறதென்றால்

சிற்பம் ஓவியம் சங்கீதம் நடனம் முதலான தமிழ்க்கலைகளும் அதனோடிணைந்து வளர்க்கப்படுகின்றன - பேணிப்பாதுகாக்கப்படுகின்றன - தமிழ்க் கலைஞர்கள் வளர்க்கப்படுகிறார்கள் - பேணிப்பாதுகாக்கப் படுகிறார்கள் என்று அர்த்தம். ஒரு கோவில் கட்டிக் கும்பாபிஷேகம் நடைபெறுகிறதென்றால் மறைமுகமாக நாதஸ்வர இசை வளர்க்கப் படுகின்றதென்பதும் நாதஸ்வரக் கலைஞர்களது வாழ்வில் ஒளியேற்றப்பட்டு மறுமலர்ச்சி ஏற்படுத்தப்படுகின்றதென்பதும் அர்த்தமாகும். மக்களின் கலந்துறவாடலைக் கோவில்களே இன்று அதிகம் பிரதிபலிப்பதுடன் அவை தமிழையும் தமிழ் நாகரீகத்தையும் வளர்க்கின்றன. இத்தனை பிரதிபலிப்புக்கள் எல்லாவற்றையும் கொண்ட பதியாகக் கோண்டாவில் திகழ்வதை இக் கும்பாபிஷேக நன்னாளிலே சிந்திப்போமாக.

★

## பிள்ளையார்

அம்மையப்பன் முன்னிலையில் மைந்தன் என்றைக்கும் மைந்தனாகவே இருக்கிறான். தான் யாண்டும் பிள்ளையாகவே இருக்கவேண்டுமென்று கணபதி தீர்மானம் செய்தான். அந்நிலைக்கு அவனைத் தூண்டுவதற்கான நிகழ்ச்சியும் ஒன்று நேர்வதாயிற்று. பாலகணபதி விளையாடிக்கொண்டிருந்த போது பெண்பூனையொன்று அவனெதிரில் தென்பட்டது. அதைத் துரத்திப் பிடித்து விளையாடினான். இவன் தொந்தரையினால் பூனையின் முகத்தில் காயம் ஒன்று உண்டாயிற்று. விளையாட்டின் வேகத்தில் அது குற்றமாக அவனுக்குத் தென்படவில்லை. பின்பு அன்னை உமாதேவியிடம் அவன் ஓடினான். அவள் முகத்தில் காயம் ஒன்றைக் கண்டான். அது எப்படி உண்டாயிற்று என்று கேட்டான். மைந்தனாகிய கணபதி செய்தகுற்றம் அது என்று அன்னை விடையிறுத்தாள். தான் அப்படியொன்றும் செய்யவில்லையே என்று அவன் திகைத்து நின்றான். பெண் உலகு அனைத்தும் தன் வடிவம்; ஆதலால் பூனைக்குச் செய்த ஊறு உண்மையில் தனக்குச் செய்தது ஆகும் என்றாள் தாய். அதைக் கேட்ட கணபதி நான் என்றும் பிரம்மச்சாரியாகவே இருக்கத் தீர்மானித்தான். மற்ற தெய்வங்களுக்கு ஏற்ற சக்தி சொரூபம் அமைவது போன்று பிள்ளையாருக்குப் பெண்பாகம் இல்லை. ஆண், பெண் என்ற பேதத்திற்கு அப்பாற்பட்டவன் அவன். சித்தி, புத்தி என்ற இரண்டு சக்திகளை அவனோடு இணைத்து வைத்துக்கூறுவது உண்மையில் அவன் மகிழ்ச்சியையே விளக்குவதாகும். வாழ்க்கையில் விநாயக தத்துவத்தை அனுஷ்டித்து வருபவர் தொடுத்த கருமங்களில் எல்லாம் சித்தி பெறுவார்கள்; லாபம் உண்டாகும். அவர்களுக்கு புத்தி அல்லது நல்லறிவு என்பது கோட்பாடு. பிள்ளையாரைப் போற்றுகின்ற சிறுவர்கள் ஆற்றலையும் அறிவையும் பெறுவார்கள்.

சுவாமி சித்பவானந்தர்

# உலகம் முழுவதும் தெரிந்த கண்பதி கடவுள்தான் பிள்ளையார்

"பன்மொழி ஆராய்ச்சிக் கலாநிதி"
தென்புலோலியூர், மு. கணபதிப்பிள்ளை

தமிழ் நூல்கள் எல்லாவற்றிலும் சிறந்தது கந்தபுராணம். விருத்தப் பாக்களால் முதன்முதலாக இயற்றப்பட்ட சிவம் மணக்கும் நூல் அது. கவிச்சக்கரவர்த்தி எனப் போற்றப்படும் கம்பநாட்டாழ்வார் இயற்றிய இராமாயணத்துக்குக் காலத்தால் முற்பட்டது. கந்தபுராணத்தைத்தான் கம்பநாட்டாழ்வார் "புவியினுக் கணியாய் ஆன்ற பொருள் தந்து புலத்திற்ருகி" என்ற பாடலிலே மறவாது எடுத்துக் கூறினுர் என்று கூறுவது பொருத்தமாகும். கந்தபுராணம் முருகக் கடவுளின் பெருமை கூறுவது. ஈடும் இணையும் இல்லாத புராணம் அது. கந்தபுராணம் காட்டிய பண்பாடுதான் இன்றும் இலங்கையிலே சிவநெறி பேணிக்கொண்டிருக்கிறது.

கந்தபுராணத்தினை இயற்றியருளிய கச்சியப்ப சிவாசாரிய சுவாமிகள், தமது புராணத்துக்குச் செய்த "காப்பு", தனிச் சிறப்பு வாய்ந்தது. அதனைப் பார்ப்போம்.

"திகட சக்கரச் செம்முக மைந்துளான்
சகட சக்கரத் தாமரை நாயகன்
அகட சக்கர வின்மணி யாவுறை
விகட சக்கர மெய்ப்பதம் போற்றுவாம்".

விளங்குகின்ற பத்துத் திருக்கரங்களையும் ஐந்து திருமுகங்களையும் உடையவரான சிவபெருமானது தேருக்குச் சில்லாயிருந்த சூரியன், வட்டவடிவான ஒளிபொருந்திய இரத்தினமாய் அமைந்திருக்கப்பெற்ற திருவயிற்றினையுடைய விகடசக்கர விநாயகரது மெஞ்ஞானமாகிய திருவடிகளை வணங்குவாம் என்று காப்புச் செய்கிருர். பிற்றைக் காலத்தில் எழுந்த நூல்களுக்கெல்லாம் பிள்ளையார் காப்பு அமைந்திருப்பதை யாம் காண்கின்ருேம். இந்தக் காப்பிலே, பிள்ளையாரது (விநாயகக் கடவுளது) திருப்பெருவடிவம் துதிக்கப்படுகின்றது. திருப்பெரு வடிவத்தைத்தான் "விசுவரூபம்" எனவும் குறிப்பதுண்டு. உலகங்கள் எல்லாவற்றையும் தாங்கிநிற்கும் வடிவம் அது. உலகங்களெல்லாம் எவரிலே தங்கியிருக்கின்றனவோ அவரே "பரமபதி" என்பது சைவ மக்கள் கருத்து. விநாயகரைப் பரமபதியாகப் போற்றிப் பரவும் பாட்டுதான் இந்தக் காப்பு. "விநாயகர்" என்னும் சொல்லின் பொருள்கூட அதுதான். சிவபெருமானுக்கும் விநாயகக் கடவுளுக்கும் வேற்றுமை இல்லை என்பதனையும் கச்சியப்பசுவாமிகள் இந்தக் காப்பிலே தெளிவுபடுத்துவதைக் காண்கின்ருேம்.

சிவபெருமானைக் "கூத்தாடும் பெருமான்", "கூத்தர்" என்றெல்லாம் யாம் போற்றி வருகின்ருேம். நடமாடும் தெய்வம் அவன்தான். ஆனந்தநடனமாடி உலகினை வாழவைப்பவனும் அவன்; ஊழிக் கூத்து ஆடி உலகினை அழிப்பவனும் அவன்; அவன் தில்லைமன்றிலே நடனமாடினுலும், அவனது - தெய்வ நடனம் - திருக்கூத்து - உலகமெங்குமே பரவியிருப்பதாகச் சைவ சமயத் தத்துவம் கூறும். அவன் ஆடாத இடமே கிடையாது. அவன் ஆடுவதுமட்டுமன்றி, எல்லாவற்றையும் ஆட்டுவித்துங் கொண்டிருக்கின்ருன் என்பது சைவமக்கள் கொள்கை. அவனன்றி ஓர் அணுவும் அசையாது.

''வேதண்டமே புயங்கள் விண்ணே திருமேனி
மூதண்ட கூடமே மோலியாம் - கோதண்டம்
ஒற்றைமா மேரு உமாபதியார் நின்ருட்ப்
பற்றுமோ சிற்றம்பலம்?'' என்கிருர் ஒரு புலவர். உமையம்மையாருடைய நாயகனுக்கு மலைகள்தாம் புயங்களாம். ஆகாயந்தான் உடம்பாம். பிரபஞ்சத்தின் முகடுதான் முடியாம். மேருமலைதான் வில்லாம். இப்படிப்பட்டவன் ஆடுவதற்குத் தில்லைச் சிற்றம்பலத்தில் இடம் போதுமா? என்று அதிசயத்துடன் கேட்கிருர்.

இவ்வளவு பெரியவரான சிவபெருமானுடைய தேருக்குச் சில்லாயிருந்த சூரியன், விநாயகப் பெருமானது வயிற்றிலே கட்டப்பெற்ற (அகடு அசக்கு) நாகரத்தினமாக அமைகின்ருன். விநாயகர் திருப்பெரு வடிவத்திலே சூரியன் மேலும் சிறுத்துப் போகின்ருன். சூரியன் அப்படிச் சிறுக்கத் தக்கபடி பெரியவராய் விளங்குகின்ருர் பிள்ளையார். எப்படியிருக்கின்றது கற்பனை.

சிவபெருமான் குடும்பமே ஒரு கூத்தாடிக் குடும்பம். சிவபெருமானுக்கு மட்டுமல்ல. அவருக்கு வாய்த்த மனைவியாருக்கும் ஆடல் கைவந்ததாகும். தமது கணவனுரைப் பார்த்தே ஒருமுறை கோபநிலையில், போட்டிக்குக் கூத்தாடவரும்படி அழைத்த அம்மையார் அவர். தந்தை தாயர் கூத்தாடிகளாய் இருக்கும்போது, அவர்கள் குழந்தைகள் எப்படியிருப்பார்கள். அவர்களும் கூத்துவல்லவர்களாகவே இருந்தார்கள். பிள்ளையார் அப்படி, முருகனும் அப்படித்தான். எல்லோருமே ஆடுவார்கள். அவர்கள் ஆடாவிட்டால் இந்த உலகம் எப்படி ஆடும்?

முறிந்த கொம்பும், துதிக்கையும், தொந்தி வயிறும் உள்ள பிள்ளையாராகிய விநாயகர் உலகம் முழுவதற்குமே தெரிந்தவர், அவர் ஒருமுறை கூத்து ஆடினுராம். அந்தக் கதையினை யாமும் அறிய வேண்டும். பிள்ளையாருடைய தந்தையார் தலையிலே கங்கை மாத்திரமல்ல, கபாலமும் இருக்கிறது. அந்தக் கபாலத்தினை ''பிரம கபாலம்'' என்று குறிப்பதுண்டு. அந்தக் கபாலம் ஒருமுறை திருமாலின் சக்கராயுதத்தை விழுங்கிவிட்டது. திருமால், பிள்ளையாரின் மாமனுர் அல்லவா? அவர் தன் மூத்த மருமகனை பிள்ளையாரைப் பார்த்து கபாலம் சக்கராயுதத்தை வெளிப்படுத்தாமல் இருக்கின்றது என முறையிட்டார். பிள்ளையாரும் என்னசெய்வதென்று யோசித்துப்பார்த்தார். ஆவணி மாதத்துச் சதுர்த்தி நாள் ஒன்றிலே, தமக்கு மிகவிருப்பமான மோதகத்தை நிறைய உண்டுவிட்டு பெருத்த வயிற்ருேடு நின்று கோணங்கிக் கூத்து ஆடினுர். அந்தக் கூத்தைப் பார்த்து எல்லோரும் சிரித்தார்களாம். சிரிப்பினை அடக்கமுடியாமல், கபாலமும் சிரித்ததாம். அப்படி அது சிரித்தபோது திருமால் பறிகொடுத்த சக்கரம் கபாலத்தின் வாயிலிருந்து வெளியே வந்து விழுந்ததாம். உடனே, பிள்ளையார், ''மாமா, மாமா... உங்கள் சங்கரம் வந்துவிட்டது, பார்த்தீர்களா? எடுத்துக்கொண்டு போங்கள்.'' என்று கூறிக்கொண்டு, திருமால் கையிலே கொடுத்துவிட்டாராம். இங்கே கூறிய கூத்தினைத்தான் ''விகடக் கூத்து'' என்பார்கள். இந்தக் கூத்தினை ஆடிய விநாயகனை ''விகட சக்கர விநாயகர்'' என்று சைவ மக்கள் போற்றி வருகிருர்கள். அந்த விநாயகரையே கச்சியப்ப சிவாசாரிய சுவாமிகள் போற்றிப் பணிகின்ருர்கள். காக்கும்படி வேண்டுகிருர்கள். அதுதான் ''கணபதி காப்பு''. அந்தக் காப்பிலே - சிவபெருமானையும் சொல்லாமற் - சொல்லி வணங்கும் பண்பினைக் காண்கின்ருேம்.

இப்படியாகப் போற்றப்படும் பிள்ளையார் பௌத்தர்களாலும். போற்றப்படுகின்ருர். ''கணபதி ஹ்ருதயம்'' என்னும் துதியினைப் புத்தரே இயற்றினுர் என்று கூறப்படுகின்றது. சைனமதக் கடவுளாகவும் அவர் போற்றப்படுகிருர். இவருடைய திருவுருவங்கள் கி. பி. முதலாம் நூற்ருண்டிலிருந்தே இந்தியாவின் பல பாகங்களிலும் வழிபடப்பெற்று வந்தமைக்கான சான்றுகள் இருக்கின்றன. கி. மு. மூன்றும் நூற்ருண்டிலேயே பிள்ளையார் வழிபாடு நேபாளத்துக்குச் சென்

றிருக்கிறது. அசோகச்சக்கரவர்த்தியின் புதல்வியாரே நேபாளத்திலே பிள்ளையார் வழிபாட்டினைப் பரவச் செய்திருக்கிறார். பிள்ளையார் வழிபாடு கடல் கடந்து, சுமத்திரா, யாவா, பாலி, போணியோ, சயாம், சீனு, யப்பான், இந்து சீனு முதலான கீழைத் தேசங்களிலெல்லாம் படிப்படியாகப் பரவிவிட்டது.

அலிசு கெட்டி என்னும் பிரான்சு நாட்டு ஆராய்ச்சியாளர் ஒருவர், ''யானை முகக் கடவுள் கணேசர்'' என்ற தலைப்புடன், பிள்ளையார்பற்றிய விரிவான நூல் ஒன்றினை இயற்றியுள்ளார். அந்த அரிய நூலிலே உலக நாடுகளிலே பிள்ளையார் வணக்கம் பரவி வழங்குவதைப்பற்றி மிக விரிவாக எழுதியுள்ளார். அமெரிக்க நாட்டின் புகழ்மிக்க ஆராய்ச்சியாளரான கேணல் சேமிசு சேச்சுவாட்டு என்பார், தாம் எழுதியுள்ள ''கடல் கொண்ட மூ நாடு'' என்னும் நூலிலே, பிற நாட்டுப் பட்டயங்களையும் கல்வெட்டுகளையும் ஆராய்ந்து பிள்ளையார் ''நிலபுலக் கடவுள்'' எனக் காட்டுகின்றார்கள். ''கணேசன்'' என்னும் பெயரினையே அவருடைய திருப்பெயராகக் கொண்டாடுகிறார்கள். அவருடைய தத்துவத்தையும் ஆராய்ந்து கூறுகிறார்கள். எங்கள் மூதாதையரும் பிள்ளையாரை ''எவ்வினைக்கும் முன்னுனேன்'' எனப் போற்றி, எவ் வினையினைத் தொடங்கும்போதும் வணங்கியே தொடங்குகின்றார்கள். எழுதும்போதுகூட, பிள்ளையார் சுழி இட்ட பின்பே எழுதுகின்றார்கள்.

எங்கள் தென்னுட்டிலே மட்டுமன்றி, எங்கும் குளக்கரைகளிலும் தெருவோரங்களிலும் வயல்வெளிகளிலும் எங்கள் மூதாதையர் அவரை இருத்தி வழிபட்டு வந்திருக்கிறார்கள். கடல் கடந்து சென்றும் பல நாடுகளில் அவரை வணங்கி வந்திருக்கிறார்கள். அவரைக் ''காப்புக் கடவுள்'' எனவே போற்றி வந்திருக்கிறார்கள். உலகம் முழுவதற்குமே அவர் தெரிந்தவராக விளங்குகின்றார். ஆயின், அவர் பெயர்மட்டும் ''கணபதி'' (கணங்களுக்குத் தலைவன்) என்றமட்டில் இருக்கின்றது. அது பொருந்தும் என்றும், அவரது தனியியல்பினைக் காட்டுவதென்று கொள்ள முடியாதிருக்கின்றது.

அவரை முதன்முதலாக வழிபடத் தொடங்கிய எமது முன்னோர், அவரைச் சுட்டிக் குறிப்பதற்கு வழங்கிய திருப்பெயர் ''கண் பதி கடவுள்'' என்பதாகவே இருந்திருத்தல் வேண்டும் என யான் கருதுகின்றேன். கண் பதித்துக் கருணை காட்டுவதுதான் அவரது தனிப் பெருங்குணம். பயிர்த்தொழிலினை முதன்முதலாகச் செய்யத் தொடங்கிய எமது முன்னோர், தமது வினைகளையெல்லாம் தொடங்கி நடாத்தும்போது - ''பிள்ளையார்'' பிடித்துவைத்தே பிள்ளையாரைக் காப்புக்காக வணங்கிக் கொண்டே தொடங்கினார்கள் என்பது யாம் அறிந்தது. ''கண்+பதி'' கடவுளே ''கணபதி'' ஆகி, கடைக்கண்ணுற் பார்த்தருளுகின்றார். கருணை செய்கிறார். ''கணேசர்'' என்பதும் அவரைத்தான். அந்தப் பெயரினை ஒருகால் பிரித்துப் பார்ப்போம். ''கண் ஈசர்'' ஆகவே அவர் திருவவதாரஞ் செய்தார் என்று கூறத் தோன்றுகின்றது. ''கண் காணித்தல்'' என்பதன் பொருள் யாது? யாம், சிறிது அவரைத் தனியன்புடன் போற்றிக்கொண்டு சிந்தித்துப் பார்ப்போம். ''கண்ணீசர்'' தான் ''கணேசர்'' ஆகிவிட்டார் எனத் தோன்றுகின்றது. ''கண்ணுதல்'' என்ற சொல் லினைப்போலத் தொடங்கும் ''கண்'' முதற் சொற்களை எடுத்து நோக்கினுல் இந்த உண்மை தெரிய வரும்.

# பிள்ளையார் பெருமை

சிவஸ்ரீ தா. மகாதேவக் குருக்கள்
அதிபர், தர்மசாஸ்தா குருகுலம் - இணுவில்.

ஈழவள நாட்டிலும், இந்தியாவிலும், சிறப்பாக வணங்கப்பட்டுவரும் தெய்வங்களில் விநாயகரும் ஒருவர். இந்தியாவில் சாதாரணமாக எல்லா இடங்களிலும் பிள்ளையார், திருவுருவம் காணக்கூடியதாக இருக்கும். ஆற்றங்கரை, குளக்கரை அரசமரத்தடி. முதலிய எல்லா இடங்களிலும் அவர் வணக்கத்திற்கு உரியவராகக் காணப்படுகிறுர். தமக்கு ஒரு தலைவர் இல்லாதபடியால் விநாயகரென்றும், விக்கினங்கள் தீர்ப்பதால் விக்னேஸ்வரரென்றும், சிவபெருமானுக்குப் பிள்ளையாதலால் பிள்ளையாரென்றும், அழைக்கப்படும் இவருக்குப் பிள்ளையார் என்ற பெயரே மிகவும் பொருத்தமாக இருக்கிறது. குழந்தைகளுடைய வரைவிலக்கணம் என்னவென்று கவனிப்போமாகில், இது நமக்கு நன்ருக விளங்கும். பிள்ளையாக இருக்கின்றகாலத்தில் நன்ருக எதையும் சாப்பிடவேண்டும். கொழுகொழுவென்றிருக்க வேண்டுமென்பதே. பிள்ளையாரும் கொழுகொழுவென்றிருப்பதோடல்லாமல் மற்ற எல்லாத் தெய்வங்களையும் விட இவருக்கு நிவேதனப் பொருள்களும், மோதகம், அப்பம், கொழுக்கட்டை, அவல், பொரி என்று நிரம்பச் சொல்லப்பட்டிருக்கிறது.

விநாயகர் வழிபாடு மிகவும் தொன்மைவாய்ந்ததாகும். இலங்கை, இந்தியாதவிர ஜாவா, சுமத்ரா போர்ணியோ, சியாம், பர்மா, மலாயா போன்ற நாடுகளில்கூட விநாயகராலயங்கள் இருக்கின்றன. இந்துமதம் முதலாகக் கருதப்படும் வேதங்கள் கி.மு. 1500 ஆண்டுகட்கு முற்பட்டவை என்று எல்லா ஆராய்ச்சியாளருமே ஒப்புக்கொண்டுள்ளனர். இந்த வேதங்களில் ''இருக்குவேதம்'' பழமை வாய்ந்ததாக இருக்க வேண்டுமென்று ஆராய்ச்சியாளர்கள் கருதுகின்றனர். அந்த இருக்கு வேதத்திலேயே ''கணர நாம்துவா கணபதிம்'' என்று கணபதியைப் பற்றி குறிப்பு இருக்கிறது. ஆகவே விநாயகர் வழிபாடு மிகத்தொன்மை வாய்ந்ததாகக் கருத இடமுண்டு.



விநாயகருடைய வடிவம் ஓங்கார வடிவம். எல்லா மந்திரங்களுள்ளும் தலைசிறந்தது, ''ஓம்'' என்னும் மந்திரம் எல்லா எழுத்துக்களின் ஓசைகளிலும் ஒலிக்கும். ''ஓ'' என்னும் ஒலி ஓம்காரமெனப்படும். இதை வடமொழியில் பிரணவமெனக் கூறுவார்கள். அ + உ + ம். முதலிய மூன்று எழுத்துக்களும் சேர்ந்துதான் ''ஓம்'' ஆகிறது. விநாயகருடைய யானை முகம், துதிக்கை, மோதகம் ஏந்தியகை இவ்வளவையும் சேர்த்து அவதானித்தால் அவர் ஓங்கார ரூபத்தோடு இருப்பது புலப்படும்.

''கணபதி அதர்வ சீர்ஷம்'' என்று கணபதியைப் பற்றிக் கூறப்படும் ஒரு மந்திரத்தில் கீழ்க்காணும் விபரங்கள் இருக்கின்றன.

(1) விநாயகரை அறுகம்புல்லால் அர்ச்சிப்பவருக்கு இந்திரனுக்கு சமமான பதவி கிட்டும்.

(2) நெல் பொரியால் ஹோமம் செய்பவர் எல்லாராலும் மதிக்கப்பட்டு புகழோடு வாழ்வார், மேதாவியாக விளங்குவார்.

(3) ஆயிரம் மோதகங்களை நிவேதித்து வழிபடுபவர் விரும்பிய பலன்களைப் பெறுவார்.

(4) நெய்யினுலும் சமித்துக்களினுலும் ஹோமம் செய்து வழிபடுபவர்கள் எல்லாச் சுகங்களையும் பெறுவார்கள்.

விநாயகருடைய ஹோமமாகக் கருதப் படும் கணபதி ஹோமத்தில் மிகுந்த திர வியங்கள் ஹோமம் செய்யப்படுகின்றன. மாம்பழம், பலாப்பழம், விழாம்பழம், வில் வம்பழம், தேன், நெய், அறுகு, நெற் பொரி, அவல், மோதகம், அதிரசம், எள்ளு ருண்டை, கொழுக்கட்டை இராசவள்ளிக் கிழங்கு, கரும்பு, செங்கீரை இத்யாதி திர வியங்கள் ஹோமம் செய்யப்படுகின்றன. இத்துணைப் பெருமை மிக்க பிள்ளையாரை நாம் எல்லோரும் தினமும் வணங்கி அவர ருளால் சுகஜீவர்களாக இம்மை இன்பங் களெல்லாம் பெற்று சுகத்தோடு வாழ்வோ மாக.

## உச்சிஷ்ட கணபதி

இயற்கையில் மலம் அல்லது அழுக்காகத் தென்படும் பொருளைப் பரந்த மனப்பான்மையுடன் பார்த்துப் பழகினுல் அது உண்மையில் அழுக்கு அல்ல என்பது தென்படும். செடிக்கு உணவாவதை நாம் அழுக்கு என்கிறோம். அத்தகைய அழுக்கையே செடியானது உண வாக மாற்றி நமக்குத் திருப்பிக் கொடுக்கிறது. இயற்கை முழுவதிலும் இந்த நிகழ்ச்சியைக் காணலாம். அழுக்கை அழுக்காகக் கருதாதே என்ற பாடத்தை உச்சிஷ்ட கணபதியின் உபாசனை நமக்குப் புகட்டு கின்றது. போஜனம் பண்ணிய பிறகு எச்சில் இலையை எடுத்து எட்ட எறிகிறோம். அது எறியப்படும் இடத்தில் எழுந்தருளியிருப்பவன் உச் சிஷ்ட கணபதி. எச்சில் இலையை எறிந்து விட்டு உச்சிஷ்ட கணபதிக்கு ஒரு நமஸ்காரம் போடுகிறோம். அவனுக்கு நாம் புறம்காட்டித் தோப் புக்கரணம் போடுவதும் வழிபாடு ஆகிறது. ஒரு மனிதனுக்கு முகம் காட்டாது முதுகுகாட்டுவது அவனை அலட்சியப்படுத்துவது ஆகி றது. தெய்வத்தின் சந்நிதிபார்த்து வணங்குவது முறை. ஆனுல் நீக் கமற எங்கும் நிறைந்துள்ள பொருளுக்கு முற்புறம் பின்புறம் என்பன இல்லை. அத்தகைய உயர்நிலைக்கு நமது மனத்தை உயர்த்துதற்கே உச்சிஷ்ட கணபதிக்கு முதுகுகாட்டி வணங்குகிறோம். எங்கும் நிறை பொருளாகிய அவன் நமக்கு மலமாகத் தென்படும் பொருளிலும் இருக்கின்றுன். நமக்கு அழுக்காகத் தென்படும் பொருளை அவனோடு இணைத்துப் பார்த்தால் அது அழுக்கு அல்ல என்பது புலப்படும். இத்தகைய புனிதமான மனப்பான்மையை உச்சிஷ்ட கணபதியின் உபாசனையினின்று நாம் பெறுகிறோம். அசுசியான பொருள்களைக் கையாளுகிற வேளைகளில் மனதை அசுசியாக்காது வைத்திருப்பவர்கள் உச்சிஷ்ட கணபதியைப் போற்றுபவர் ஆகின்றனர்.

சுவாமி சித்பவானந்தர்

# மங்கள வாத்தியம்

நாதஸ்வர கான கலாநிதி **என். கே. பத்மநாதன்**

**ப**ண்டுதொட்டுத் தமிழர் பண்பாட்டுடன் இரண்டறக் கலந்திருந்து வந்ததே இசையாகும். இத்தகைய இசையையும் அதன் நுண்மையைத் தெளிவுபடுத்தும் கர்நாடக சங்கீதக் கலையையும் அன்றுமுதல் இன்றுவரை காலத்துக்குக் காலம் பெருமையுடன் பாதுகாத்துவரும் கம்பீரமான வாத்தியம் நாகசுரமேயெனில் மிகையாகாது. நாகசுரத்தைச் சகல வாத்தியங்களிலும் மேன்மையான அரசனாக மதித்து, அந்த வாத்தியத்தை ''இராஜ வாத்தியம்'' எனப் போற்றிப் புகழ்ந்தனர் அன்றைய மக்கள். இந்த இராஜ வாத்தியமான நாகசுரத்தின் நாதம் வேதத்தில் இருந்து பிறந்ததெனப் பரதநூல் கூறும்.

**''சிரப்பா நாகசுரம் அரசனாகும்**
**சிறப்பான சுருதியதன் அமைச்சனாகும்''**

(மஹாபரத சூடாமணி - பக்கம் 303., செயுள் 864. வரி 5-6.)

என்று நாகசுரத்தின் பெருமையைப் பரதநூல் வர்ணிக்கின்றது. நாகசுர வாத்தியம் அரசனாகவும் அதோடு கூடி ஒலிக்கும் சுருதியாகிய ஒத்து வாத்தியம் அமைச்சனாகவும் ஆதி காலத்தில் போற்றப்பட்டது; பிறிதொரு செய்யுளில் நாகசுரத்தை ''நாகராஜா'' எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது. இதிலிருந்து நம்முன்னோர் நாகசுரவாத்தியத்தில் எவ்வளவு தூரம் பெரு மதிப்பும் அன்பும் வைத்திருந்தனர் என்பது புலனாகும். இராஜ வாத்தியமான நாகசுரம் பண்டைக்கால மக்களிடத்தில் ஒரு கௌரவமான இடத்தையே பெற்றிருந்தது. உற்சவ காலங்களில் திருக்கோவில்களில் சுவாமி வீதி வலம் வருகையில் நாகசுரத்திலிருந்து நாதசுரம் நிறைந்து வரும் ''மல்லாரி'' எனும் தெய்வீக கானம் அதன் இராஜ மிடுக்கு நிறைந்த பாவத்திற்கு ஒரு நல்ல உதாரணமாகும். நாகசுரக் கானம் வசியம் நிறைந்தது. ''ஓம்'' என்ற மங்கள ஓங்கார நாதவொலியே இவ்வசியத்திற்கு மூலகாரணமாகும்.

அரசன் செங்கோல் வழிநின்று குடிகளை வசீகரித்தல்போல நாகசுரமும் தனது இனிய கானத்தால் மக்களை வசீகரிக்கின்றது. நாக சர்ப்பங்கள் கூட இந்த வாத்தியத்தின் இன்னிசையில் மயங்கி ஆனந்திக்கும் என்பதை இன்றும் நாம் பிரத்தியட்சமாக அறிவோம். ஆனால் பண்டைய செய்யுட்களிலும் இதற்கான குறிப்புகள் காணப்படுகின்றன:

**''துளையது கருவியாகத் தோயுநா கசுரத்தின்**
**வளையது விரலையாறு வாய்தனி லணைத்தேயூத**
**களைதரு சர்ப்பம்பாலன் களைகடீர்ந்**
**தமுதமுண்ணும்**
**வளைவர மீதின்மேவும்வாமனுக்காசையுண்டாம்'**

(மஹாபரதசூடாமணி - பக்கம் 304., செய்யுள் 867)

என்று நாகசுரத்தின் புகழைப் பாடுகின்றது இச்செய்யுள். நாக சர்ப்பங்களுக்கு ஆனந்தமூட்டும் காரணத்தால் இந்த வாத்தியத்தை நாகசுரம் என்பாரும் உளர்.

மேற்கூறிய பல்வகைச் சிறப்புக்களும் ஒருங்கமைந்த இராஜ வாத்தியமான நாகசுரமானது தமிழ் உலகத்தில் எவ்வளவு காலமாகக் கையாளப்பட்டு வருகின்றது என ஆராயுமிடத்து எமக்குப் பெருமை தரக்கூடிய பல உண்மைகள் புலனாகின்றன. வேதகாலந்தொட்டு நாகசுரம் இருந்து வந்திருக்கின்றதென்பது என் பணிவான ஆராய்ச்சிகளின் முடிபு. இதற்குத் தகுந்த சான்றுகளும் என்மனதில் இடம்பெற்றிருக்கின்றன. நாகசுர வாத்தியத்தை மங்கள வாத்தியம் என்பர். இதனை பண்டைய

வழக்கிலிருந்தும் தற்கால வழக்கிலிருந்தும் நாம் அனைவரும் அறிந்திருப்பது வெள்ளிடைமலை. பரத சாஸ்திரக் கலையிலுள்ள பழங்கால நூலாகிய ''மஹாபரதசூடாமணி''யின் (தமிழாக்கம்) வேதநூலோர் நாகசுர வாத்தியத்தை மங்கள வாத்தியமென நாமமிட்டுப் போற்றியது காணப்படுகின்றது. அன்றியும் வேதாகம விதிமுறை யாகக் கிரியைகள் நிகழும் ஆலயக் கிரியைகளில் இந்த மங்களவாத்தியமான நாகசுரத்திற்கு, ஆகமத்தில் இடங்கொடுத்து இறை ஆராதனையில் ஈடுபடுத்தி உள்ளமையை இன்றும் நாம் காண்கின்றோம். உதாரணமாக உற்சவ காலங்களில் கோவில்களில் நடைபெறும் நவசக்தி நவசந்தி, துவஜாரோகணம், அவரோகணம் முதலான ஆகமக்கிரியா மந்திரங்களில் மங்கள வாத்தியமென நாகசுரத்தைக்குறிப்பிடுவதிலிருந்து நாகசுர வாத்தியம் வேதகாலம் முதலாக இறை ஆராதனையில் இருந்து வருவது தெளிவாகப் புலனாகின்றது. வேதாகமத்தில் கூறிய மங்களவாத்தியம் நாகசுரந்தானா என்ற சந்தேகம் எழுவதற்கே இடமில்லாமல் செய்துவிடுகின்றது மஹாபரத சூடாமணியில் காணப்படும் ஒருவெண்பா. அந்த நூலில் துளைக்கருவிகளின் இலட்சணங்களைச் சொல்லவந்த அந்த நூலாசிரியர் வேத நூலோரே மங்களவாத்தியம் என்று நாகசுரத்திற்குப் பெயரிட்டுப் போற்றினர் எனக் கூறுவதிலிருந்து, வேதாகமத்தில் குறிப்பிடப் பட்டுள்ள மங்களவாத்தியம் நாகசுரமே என்பது தெளிவாகின்றது. இக்கூற்றின் மூலம் நாகசுர வாத்தியம் வேதாகம காலந் தொட்டே இருந்து வந்திருக்கின்றதென்பது உள்ளங்கை நெல்லிக்கனிபோலத் தெளிவாகத் தெரிகின்றதல்லவா? மஹாபரதசூடாமணியில் காணப்படும் அந்த வெண்பாவை இந்தச் சந்தர்ப்பத்தில் இங்கு தருவது மிகப் பொருத்தமானதாகும்.

''முகவீணை நாகசுர மொழிபாம்பு நாதசுரந்
தருசிங்குழன் முதலாய்ச் சாற்றுஞ் -சுகமிகவே
தங்குமிவ் வாத்தியத்திற் காய்ந்திட்டார்
நூல்வல்லோர்
மங்கள வாத்தியம் எனும் நாமம்''

மஹாபரதசூடாமணி - பக்கம் 299
- செய்யுள் 855

முகவீணை, நாகசுரமெனமொழியும் நாக நாதசுர வாத்தியம் ஆகிய வாத்தியங்களுள்ளும் மங்களகரம் (இலட்சுமிகரம்) பொருந்தியதாய் முதன்மைபெற்று விளங்கும் அதன் நாதசுகமும் மிகுந்து விளங்குமாதலால் ஆராய்ந்துணர்ந்த வேதநூல்வல்லோர் இவ் வாத்தியத்திற்கு மங்களவாத்தியம் என நாமஞ்சூட்டியுள்ளனர் என்பது இச் செய்யுளின் பொருளாகும். ''ஓம்'' எனும் பிரணவத்தில் நாதமாகிய ஓங்கார ஒலியே நாகசுரவாத்தியத்திற் காணப்படும் சிறப்பான கவர்ச்சிக்குக் காரணம் என்பதும் நூல்களின் முடிபாகும். நாகசுரநாத தத்துவத்தை உணர்ந்த வேதநூலோர் அதன் 'மேலணைசு' ஆகாயமெனவும், ''கீழணைசு'' பிருதிவி எனவும், ''புல்லு'' சிதம்பரம் எனவும் அதிலிருந்து வெளிவரும் நாதம் சிவம் எனவும் கூறியுள்ளார். இந்த இராஜ வாத்தியத்தில் 10008 இராகங்களை நாத சுகம் நிறைந்துமிளிரக் கையாள முடியுமென்றும் அவர் மேலும் விளக்கியுள்ளார்.

நாகசுரவாத்தியம், வேதகாலத்திற்கு முற்பட்டதென்றும் தமிழர் வரலாற்றில் பழங்குடிமக்களாகிய நாகர்களின் வாத்தியமே நாகசுரமென்றும் பல தமிழ் அறிஞர்கள் இன்று கருதுகிறார்கள். தமிழ், சமஸ்கிருதத்திலும் தொன்மையுடைய மொழி என்ற மேல்நாட்டு மொழிவல்லுநர்களுடைய ஆராய்ச்சி முடிபுகளையும்கூட தமது வாதத்திற்கு ஆதாரமாக இத் தமிழறிஞர்கள் எடுத்துக் காட்டுகிறார்கள்.

இனி நாகசுரத்தின் பாகங்களையும் பெயர்களையும்பற்றிச் சிறிது கூறுவோம். நாகசுரவாத்தியத்தில் உறுப்புக்களின் பெயர்கள் மேலணைசு, கீழணைசு, உளவு, புல்லு (சீவாளி), அச்சு, குச்சில், கெண்டைச் சில்லு என வகுக்கப்பட்டுள்ளன. பண்டைய நாகசுரத்தில் உறுப்புக்களின் பெயர்களில் எவ்வித மாறுதல்களும் தற்காலத்தில் ஏற்படவில்லை.

பழங்கால நாகசுர அமைப்பிலிருந்து தற்கால நாகசுர அமைப்பு காலத்திற்கு ஏற்ற வகையில் மாறியிருப்பது காணக்கூடியதாக

இருக்கின்றது. பழங்கால நாகசுரங்களில் மேலணைசு, கீழணைசு பித்தளையிலும் ஐந் தரைக்கட்டை சுருதியிலும் காணப்படுகின் றது. இந்தவகை நாகசுரத்தை ''திமிரி'' நாகசுரமென்று கூறுவர். காலக்கிரமத்தில் சுருதி அமைப்புக் குறைவாகவும், முழு அமைப்பும் ''ஆச்சா'' மரத்தினால் ஆக்கப் பெற்றுப் ''பாரி'' நாகசுரமென்று அழைக் கப்பெற்று வருகின்றது. ''திமிரி'' நாகசுர அமைப்பைவிட புதிய நாகசுர அமைப் பையே தற்கால நாகசுரக் கலைஞர்களும் இரசிகர்களும் விரும்புகின்றார்கள். பாரி நாக சுரம் குறைந்த சுருதி உள்ளதாகவும் கமகப் பிரயோகங்களை இலகுவாக பிரயோகிக்கக் கூடியதாகவும் இருக்கின்றது.

நாகசுரக் கலையின் உயர்ந்த தெய்வீகப் பண்பினையும் அதன் நாதசுகத்தில் கர்நாடக சங்கீதக் கலையின் பேரின்பத்தை மக்கள் நுகரும் பான்மையையும் பேணும் பெரு நோக்குடன் இக்கலை வல்லுநர்கள் தமிழகத் தில் நாகசுரக் கல்லூரிகள் பல அமைத்து இளங்கலைஞர்களுக்கு இக்கலையைச் சம்பிர தாயமுறைப்படி போதித்து வருகின்றார்கள். இதுபோன்ற கலைக் கல்லூரிகளை இலங்கை யிலும் மற்றும் உலகின் பல பாகங்களிலும் தோற்றுவித்து இந்த இராஜவாத்தியத்தின் இன்பகரமான கலை நுட்பங்களைப் போதிக்க வேண்டும். இவ்வாத்தியத்தின் இராஜ குணங்கண்டு மோகங்கொண்டு இக்கலை பயின்று மேல்நாட்டவரும் தற்காலத்தில் இன்பமெய்துவதும் கண்கூடு.

மங்களம் நிறைந்த இராஜ வாத்திய மான நாகசுரம் வாழ்க; நாதசுகம் ஓங்குக;

அன்பும் சிவமும் இரண்டென்பர் அறிவிலார்
அன்பே சிவமாவது ஆரும் அறிகிலார்
அன்பே சிவமாவது ஆரும் அறிந்தபின்
அன்பே சிவமாய் அமர்ந்திருந்தாரே.

— திருமூலர்



# வள்ளுவரும் காந்தி அடிகளும் கடவுள் பக்தியும்



தவத்திரு குன்றக்குடி அடிகளார்

இரண்டாயிரம் ஆண்டுகளுக்குமுன்பு தமிழகத்தில் தமிழறிந்த புலவனுக தமிழர் களுடைய நாடெல்லாம் சுற்றிப்பார்த்து தமிழர்களுடைய நாடியைப் பிடித்துப் பார்த்து நூல்செய்ய ஓர் பேரறிஞன் தோன் றினுன். ஒப்பற்ற உயர்ந்த நூலைச் செய் தான், தமிழினத்திற்குத் தனிமறையாக உலகத்தின் பொதுமறையாகத் தோன்றிய நூலுக்குப் பெயர் திருக்குறள். இரண்டா யிரம் ஆண்டுகளுக்கு முன்பு இப்படியொரு அழகிய மறையை அறநூலை தமிழினத்தின் தனிமறையை உலகத்தின் பொது மறையைத் தந்த திருவள்ளுவருக்குப் பின்பு அந்தநாட்டில் அவன் பிறந்த இனத்தில் அவன் பிறந்த மரபில் அவன் பிறந்த குலத்தில் அவன் பிறந்த கோத்திரத்தில் வள்ளுவனுக்குத் தகுந்த வாரிசுகள் வரவில்லை. வள் ளுவனுடைய காப்பியம் இலக் கியமாக மட்டுமே இருந்தது. பரி மேலழகர் தோன்றிப் பக்கம் பக்கமாக உரை யெழுதினர். மணக்குடவர் தோன்றி மணி மணியாக உரை எழுதினர். இப்படித் திருக் குறளுக்குப் பதின்மூன்று உரைகள் தோன்றி நடமாடிக்கொண்டிருந்த காலத்திற்றான் நம் நாடு அடிமைப்பட்டது. தமிழன் அடிமைப் பட்டான்.

**தொகுப்பு:**
**பொ. இராசதுரை**

### திருவள்ளுவர் ஆன்மா

இந்த அடிமை வாழ்வுக்குப் பிறகு திரு வள்ளுவருடைய ஆன்மா நினைத்திருக்கும் போலத் தெரிகிறது ''நாமெழுதிய நூலுக் குப் பதவுரை, பொழிப்புரை சொல்கிறூர் களேதவிர, அதை வாழ்க்கையில் ஏற்றிப் போற்றிச் செய்முறைப் படுத்திக் காட்டு வோர் இல்லையே'' என்று. எனவே, திரு வள்ளுவருடைய ஆன்மா மீண்டும் விண்ணு லகத்திலிருந்து பெருமானிடத்தில், 'என்னை மண்ணகத்திற்கு அனுப்புங்கள்; வள்ளுவத் திற்கு ஒரு உரை காணவேண்டுமென்கின்ற ஆசை எனக்கிருக்கின்றது; நான் எழுதி னேன், இந்த நூலை; நானே போய் நான் இதற்காகத்தான் எழுதினேன்: என்னுடைய நோக்கம் இதுதான்! என்னுடைய அர்த் தம் இதுதான்! என்று நானே வாழ்ந்து காட்டிவருகிறேன்'' என்றுகூறி விடை பெற்று வந்ததுபோல இருக்கிறது, காந்தி யடிகள் என்ற பெயர்கொண்டு. என்னு டைய கற்பனை அப்படித்தான். இரண்டா யிரம் ஆண்டுகளுக்குப் பிறகு வள்ளுவ னுடைய சொற்பொருள் அறிந்தோமே தவிர வள்ளுவனுடைய இலக் கியத்திற்கேற்ற இலக்கணத்தை வள்ளுவன் நடைமுறைப்படுத் திக் காட்டுகின்ற பாத்திரத்தை இந்த நாடு காணவில்லை, அதன் காரணமாக அடிமைப்பட்டு, பல் வேறு பிரிவினைகள் தோன்றி அலைக்கடிக்கப் பட்டு, வறுமைக்குள் புக்கு, எந்தப்பெண்மை யைத் திருவள்ளுவன் பெருமைப்படுத்தி ஞனே, அந்தப் பெண்மையை ஒரு கருவிப் பொருளாக ஆக்கி இந்த நாடு அலைக்கழிந்த பிறகு, இந்தத் திருவள்ளுவரேதான் திரும் பக் காந்தியடிகளாகப் பிறந்து ஒவ்வொரு திருக்குறளுக்கும் உரை எழுதுவதுபோல, தன்னுடைய வாழ்க்கையை வாழ்ந்துகாட்டி உரை எழுதினர்.

நல்லதொரு இலக்கியத்துக்கு நல்ல தொரு பாத்திரமாக வந்தவர் காந்தியடி கள். மனிதர்கள் இன்று உயர ஆசைப்படு கிறூர்கள். பலருக்கு உயர ஆசைதான். உயர உயரப் பறக்க ஆசைதான். ஆனுலும், எப்படி உயரவேண்டுமென்று தெரியாமற்

தவிக்கிறார்கள். மேசையைப் போட்டு ஏறினால் பள்ளிக்கூடத்தில் 'தண்டனை' என்று பெயர். சுவரில் ஏணிவைத்து ஏறினால் 'வெள்ளை அடிக்க' என்று பொருள். சிலர் மூன்றடுக்கு மாளிகை கட்டி அதனுடைய மூன்றாவது மாளிகையில் உலாவினால் உயரமாக இருக்கிறோம் என்று நினைத்துக்கொண்டு இருக்கிறார்கள்போலத் தெரிகிறது. உண்மையில் உயரவேண்டுமென்று விரும்பினால் எப்படி உயரவேண்டும்?

### வள்ளுவர் கூறுகிறார்

வள்ளுவர், 'உள்ளத்தால் உயர்' என்றார். மனிதனுடைய கைகள் கால்களுக்குப் பெருமையில்லை. எட்டடி உயரம்; முப்பத்துமூன்று இஞ்சி மார்பு அகலம்; செக்கச் செவேலென்ற எலுமிச்சம்பழ நிறம்; நூற்றி நாற்பது பவுண்டு எடை: இவ்வளவும் உடைய ஒரு மனிதன் இருக்கிறான். அதனாலே அவன் நல்லவன் என்று திருவள்ளுவர் ஒத்துக் கொள்வாரா என்ன? ''அதோ போகிறான் பார்த்தாயா? ஒருவன் மனிதன் மாதிரி இருக்கிறான்'' என்கிறார். உலகத்தில் வள்ளுவனைப்போல கிண்டல் கேலி செய்த கவிஞனே கிடையாது. விக்டர் ஹியூகோ, சார்ல்ஸ் டிக்கின்சன் போன்ற ஆங்கில நாடக ஆசிரியர்களை நகைச்சுவை நாடக ஆசிரியர்கள் என்று சொல்வார்கள். எனக்கென்னவோ அவர்கள் பக்கம் பக்கமாக எழுதி. மக்களைச் சிரிக்க வைக்கிறார்கள் போலத் தோன்றுகிறது. ஆனால், திருவள்ளுவர் இரண்டு மூன்று சொல்லிலே மக்களைச் சிரிக்க வைக்கிற செப்படி வித்தைக்காரர். தூரத்தே செல்கிற ஒரு மனிதனைப் பார்த்து, ''இவன் யார்?'' என்று கேட்கிறார்கள். நீண்டு நிமிர்ந்து பார்த்து விட்டு, திருவள்ளுவர் சொல்கிறார்: ''அதோ போகிறானே, அவனா? மனிதன் மாதிரி இருக்கிறானே!'' என்கிறார். திருவள்ளுவர் தெளிவாகச் சொன்னார்: ''உருவத்தினால் ஒத்திருப்பவன் மனிதனல்ல'' என்று. மூக்கு, விழி இருந்துவிட்டால் மாத்திரம் ஒருவன் மனிதன் அல்ல. சில பாட்டிமார்களுக்குத் தெரியும் பேரக்குழந்தை பிறந்தவுடன் சொல்வார்கள், ''பிள்ளை மூக்கும் முழியுமாக இருக்கிறான்'' என்று. பிள்ளை பிறந்த கருவறையில் வேண்டுமானால் மூக்கு முழிக்குப் பாராட்டு இருக்க முடியும். அவன் நாலுபேர் மத்தியில் நடமாடத் தொடங்கிய பிறகு மூக்கு முழி போதாது. ''இவன் தந்தை என் நோற்றான் கொல் என்னும் சொல்.'' அவனுடைய நடை உடை பாவனை அவனை ஈன்றெடுத்த வீட்டை வீதியிலே கொண்டுவந்து நினைவுபடுத்த வேண்டும். அவனுடைய குலத்தைக் கோத்திரத்தை நினைவுபடுத்தவேண்டும். அது தான் ''உயர்வு'' என்று சொன்னார்கள். ஆகவேதான் உயரவேண்டுமென்று விரும்பினால் ''உள்ளத்தால் உயர்'' என்று திருவள்ளுவர் சொன்னார்.

### காந்தியடிகள் சோதனை

- காந்தி அடிகள் சோதனை செய்துபார்த்தார். பலருக்கு இன்றைக்குத் தெரியும் மற்றவர்கள்மீது வெளிச்சமடித்துப் பார்க்க. அவர் யார்? இவர் யார்? அவன் கீழ் சாதி. இவன் பெரிய சாதி. பலர் இப்படியாக மற்றவர்கள்மீது வெளிச்சத்தைப் பாய்ச்சிப் பார்க்கிறார்கள். ''நல்லவர்களாம்! கெட்டவர்களாம்! - விமர்சனம் பண்ணுகிறார்கள். அவர்கள் பக்கத்திலே அந்த வெளிச்சத்தைத் திருப்பிப் பார்த்தால் எத்தனைபேர் தேறுவார்கள். ஆனால், காந்தி அடிகள் இன்னொருவனைச் சோதனை செய்யவில்லை; விமர்சனம் செய்யவில்லை. மற்றவர்கள் குறைகளைக் காந்தியடிகள் கணக்கில் எடுத்துக்கொள்வதில்லை. மற்றவர்கள் குறைகளை அவர் மன்னித்தார்.

திருவள்ளுவர் சொன்னார், ''இடுக்கண் வருங்கால் நகுக'' என்று. ''துன்பம் வருகின்றபொழுது துன்பத்தைப் பார்த்துச் சிரி, துன்பம் போய்விடும்'' என்று சொன்னார். இந்தக் குறளைப் படித்ததும் எனக்கு ஒரு சிரிப்பு ஏற்பட்டது. திருவள்ளுவர்கூட பகுத்தறிவுக்கு அப்பாற்பட்டவரோ என்ற எண்ணம். துன்பத்தைப் பார்த்துச் சிரித்தால் துன்பம் போய்விடும் என்றால் எவர்தான் சிரிக்கமாட்டார்கள். துன்பப்படுகின்றவர்களுக்குச் சிரிப்புக்கூடவா பஞ்சம். நிச்சயமாகச் சிரிப்பார்கள். ஆனால், சிரித்தால்,

துன்பம் போகாது. துன்பம் என்பது காரியம். இந்தக் காரியத்திற்கு ஒரு காரணமுண்டு. அந்தத் துன்பம் என்ற காரியத்திற்குக் காரணம் மனிதனுடைய அறியாமை. நேற்றைய உன்னுடைய தவறு, ஆற்றாமை, சோம்பல். இந்தத் துன்பத்தை இற்றைக்கு வரவழைத்துக் கொடுத்திருக்கின்றது. இந்தத் துன்பத்திற்குக் காரணமாக இருக்கின்ற உன்னுடைய அறியாமையைப் பார்த்துச் சிரித்துக்கொள். உன்னை நீயே சிந்தனை செய்துகொள். இதுதான் காந்தி அடிகளுடைய சத்திய சோதனையும். காந்தியடிகளுடைய சத்திய சோதனையில் வேறு யார் யார் விழுந்தார்கள் என்ற பட்டியல் இல்லை. ஆனால், அவர் எங்கெங்கே விழுந்தார் என்ற பட்டியல் உண்டு. எப்பொழுது திருட நினைத்தார் என்பதற்குப் பட்டியலுண்டு. எப்பொழுதுபொய்சொல்ல நினைத்தார் என்பதற்குப் பட்டியல் உண்டு. நினைத்தே திருந்தினார், நினைத்தே மாறினார். இது வரலாறு. 'வெள்ளத்து அனையது மலர் நீட்டம், மாந்தர் தம் உள்ளத்து அனையது உயர்வு.'' உன்னுடைய உருவத்தால் உயர்வுவராது. நீ பூண்டுகொண்டிருக்கின்ற கோலங்களால் உயர்வு வராது. நீ அணிந்து கொண்டிருக்கின்ற சின்னங்களால் உயர்வு வராது. உன்னுடைய உள்ளம் எத்தகையது? மனிதனுடைய வாழ்க்கையிலே கதாநாயகன் யார்? கைகளா? கைகள்தான் கதாநாயகன் என்றால் முழங்கால்வரை தொங்குகின்ற கைகளையுடையவன் என்று சொல்ல எழுத ஆரம்பிக்கலாமே. வாய்கள்தான் கதாநாயகன் என்றால் எல்லோரும் பாட ஆரம்பிக்கலாமே. மனிதனுடைய வாழ்க்கையிலே கதாநாயகன் கையல்ல, காலல்ல, மூக்கல்ல, முழியல்ல. மனிதனின் வாழ்க்கை வரலாற்றில் கதாநாயகன் உள்ளம். இந்த உள்ளம் எப்படி இருக்கின்றதோ அதுபோல நீ வளர்வாய். உள்ளம் எப்படி இருக்கின்றதோ அதுபோல நீ உயர்வாய். உள்ளம் எப்படிச் செம்மைப் படுத்தப்படுகின்றதோ அதற்கேற்றதுதான் உனக்குச் சிறப்பு. ஆகவே, ''உள்ளத்து அனையது உயர்வு'' என்ற திருவள்ளுவரைப் புரிந்துகொண்டே காந்தி அடிகள் மிகத் தெளிவாகத் தன்னுடைய வாழ்க்கையை உள்ளத்தின் மையமாகவேவைத்து வாழ்ந்தார்கள். அவருக்கு ஏதாவது சந்தேகம் ஏற்பட்டால் அவர் ஏடுகளைப் புரட்டிப் பார்ப்பதில்லை. அவருக்கு ஏதாவது ஐயங்கள் எழுந்தால் அவர் சாத்திரங்களைப் புரட்டிப் பார்ப்பதில்லை. அவர் சந்தேகங்கள் ஏற்படும்போதெல்லாம் தன்னுடைய அந்தராத்மாவைக் கூப்பிட்டார். தன்னுடைய மனச்சாட்சியைக் கூப்பிட்டார். அவர் இந்தநாட்டு மக்களைப்பற்றிச் சொன்னது அவர்களுடைய அந்தராத்மா தூங்கிக் கொண்டிருக்கின்றதென்று. ''அதைத் தட்டி எழுப்புங்கள் புரட்சி நடக்கும்'' என்று சொன்னார்.

### காந்தியடிகள் புரட்சி

''புரட்சி'' என்றால் பயந்துவிடாதீர்கள். புரட்சி என்ற சொல். நல்ல பழைய சொல். நல்ல ஆஸ்திகமே புரட்சிதானே. மனிதனுடைய ஆணவத்தைக் கெடுத்து மனிதனுடைய வல்வினையைக் கெடுத்து மனிதனுடைய குணத்தைமாற்றி மனிதனுடைய சுபாவத்தை மாற்றி மனிதனை உலகியலுக்குப் பதிலாக திருவருளில் சிக்கச்செய்கின்ற மாறுதலே ஒரு புரட்சிதானே. நல்ல சமயம் ஒரு புரட்சி. நல்ல இலக்கியம் ஒரு புரட்சி. நல்ல அரசியல் ஒரு புரட்சி, ஏன் நல்ல சமையல்கூட ஒரு புரட்சிதான்; சுவையில்லாத ஒன்றில் சுவையை உண்டாக்குகின்றார்கள். அழிகின்ற ஒன்றை அழியாமல் பாதுகாக்கின்றார்கள். திருவள்ளுவருடைய ''வெள்ளத்தனைய மலர் நீட்டம் மாந்தர்தம், உள்ளத்தனையது உயர்வு'' என்ற திருக்குறளுக்கு இலக்கியமாக வாழ்ந்த பெருமை காந்தி அடிகளுக்கு உண்டு.

அடுத்து இன்னொரு திருக்குறள். பல பேர் குளிக்கிறார்கள். மூன்றுவேளை குளிப்பவர்களும் உண்டு. நினைத்தபோதெல்லாம் குளிப்பவர்கள் உண்டு. கொலைபண்ணிய மனிதன் கொலைபண்ணி முடித்தவுடன் கத்திகளைத் தூரப் போட்டுவிட்டுப் போய்க் குளித்தாலும்கூட பொலிஸ் இலாகாவின்

நாய் அவனைக் கண்டுபிடித்துவிடுகிறது. நன்றாகக் குளித்து, நல்ல திருநீறு பூசி உடம்பிலே சந்தனத்தைப் பூசி, நாலுபேர் மத்தியில் இருக்கின்றான்! பாவம், அந்தப் பொலிஸ் நாய் அவனைத்தான் பிடிக்கிறது. ஆகவே, குளிப்பதனாலே மனிதனின் உள்ளுக்குள் இருக்கின்ற அழுக்கை மாற்றிவிட முடியாது. அது ஒரு துணை. புறத்தூய்மை நீரால் அமையும். உடலின் தூய்மை தண்ணீரால் அமையலாம். அகத்தூய்மை வாய்மையால் காணப்படும் என்கிறார் திருவள்ளுவர். நான் சின்னப்பிள்ளையாக இருந்த பொழுது கிராமங்களிலேகேட்ட பழமொழி, மிகுந்த கோபம் வந்துவிட்டால் இவனுடைய வாசனையே கூடாது என்பார்கள். நான் அப்பொழுது சொல்லியிருக்கிறேன், சென்ற் பூசிக்கொள்ளாதே என்று. ஆனால் முன்னர் நான் கூறியதுபோல இப்பொழுதெல்லாம் சென்ற் வாசனையையெல்லாம் நாய் பார்ப்பதில்லை. மனிதனுடைய எண்ணங்களுக்கு உணர்ச்சிகளுக்கு வாசனை உண்டு. மனிதனுடைய சிந்தனைக்கு வாசனை உண்டு. ஒரு மனிதன் என்ன எண்ணுகின்றானோ அது சம்பந்தமான எண்ணத்திற்கு வாசனை உண்டு. அண்மையிலே ஒரு வேடிக்கையான செய்தி ஆனால் உண்மையானது. தாய்லாந்து தேசத்திலே பண்ணைகளில் நல்ல பாம்புகளை வைத்து வளர்க்கிறார்கள். அங்கே பண்ணையில் ஒரு பாம்பிற்கு ஒரு பாம்பியல் அறிஞன் மனிதனுடைய இரத்தத்தை எடுத்துச் செலுத்திப் பார்ப்போம் எப்படி இருக்கின்றது என்று நினைத்து ஒரு மனிதனுடைய இரத்தத்தை எடுத்துச் செலுத்தினான். அந்தப் பாம்பு அந்த இரத்தம் செலுத்தப்பட்ட சில நிமிடங்களுக்குள்ளாகச் சுழன்று சுழன்று செத்துப்போயிற்று. பாம்பியல் அறிஞன் ஆராய்ந்து சொன்ன முடிபு ''அந்தப் பாம்பின் உடலில் இருந்த விஷத்தைவிட அந்த மனிதனின் உடம்பில் இருந்த இரத்தத்தில் விஷம் அதிகமாக இருந்ததால் பாம்பு செத்துப்போயிற்று'' என்று. இப்பொழுதுகூட பலபேர் உடம்பில் இரத்தம் என்ற பெயராலே சாக்கடைதான் ஓடிக்கொண்டிருக்கிறது.

**உண்மை - எளிது**

மனிதனைப்பார்த்து அன்பு செலுத்தத் தெரியாதவன் - அழுகின்ற மனிதனுடைய கண்ணீரைத் துடைக்கத் தெரியாதவன் - பராரிகளாக - பஞ்சைகளாக – வாழ்கின்ற மக்கள்பால் இரக்கம்காட்டத் தெரியாதவன்; முடியாதவன். அவனுக்கு ஒரு இதயம் இருக்கின்றது என்றுசொன்னால் யார் ஒத்துக்கொள்வார்கள்? எனக்குக் கண்கள் எதற்காகக் கொடுத்திருக்கின்றான் கடவுள். நான் இந்த உலகத்துக் காட்சிகளைப் பார்த்து இன்பம் அனுபவிக்க மட்டுந்தானா? இன்னொருவர் படுகின்ற துன்பத்தைப் பார்த்து, கண்களில் கண்ணீர் இருந்தால் ஒரு சொட்டுக் கண்ணீர் சிந்து, உன்னுடைய கண்களால் இந்த நாட்டினுடைய பாவத்தைக் கழுவு. எது எல்லாமே எனக்குக் கொடுத்ததாக மட்டும் நினைத்துக்கொண்டிருக்கக் கூடாது. கடவுள் எதற்காகக் கைகளைக் கொடுத்தார்? நன்றாக உழைத்துப் பொருள் ஈட்ட, இரண்டு கைகளாலும் அள்ளிக் கொடுக்க. இந்தப் படிப்பினுடைய இரகசியத்தைப் புரிந்துகொள்ள முடியாமல் வாழ்கின்ற மனிதனைப் பார்த்து, ''புறத்தூய்மை நீராலமையும், அகத்தூய்மை வாய்மையால் காணப்படும்.'' என்கிறார் திருவள்ளுவர் வாய்மை என்றால் உண்மை. உண்மையென்றால் என்ன பொருள்? உண்மையென்பது வார்த்தையில் பார்த்தால் எளிமை. உண்மையென்றால் காந்தி அடிகளுடைய வாழ்க்கையின்படி என்ன பொருள்? இந்த உலகத்தை நாம் உண்மையாக நேசிக்கவேண்டும். நாம் கடவுளை உண்மையாக நேசிக்கவேண்டும். இப்பொழுது கடவுளை உண்மையாக நேசிக்கின்றவர்கள் இருக்கின்றார்களா? இப்பொழுது கடவுளை நேசிப்பது எதற்காக? ''கடவுளே! படிப்புச் சேரணும், கடவுளே! நமக்குப் பரிசு விழணும், கடவுளே! நம்முடைய வாதி வெல்லணும். கடவுளே! நம்முடைய பிரதிவாதி தோற்கணும்'', இப்படிக் கடவுளை விண்ணப்பமாகத்தான் நேசிக்கின்றோமே தவிர, கடவுளைக் கடவுளுக்காக, கடவுளை அன்புக்காக, கடவுளை உலகம்வாழவேண்டும்

என்பதற்காகப் பிரார்த்தனை செய்கின்ற மக்களின் எண்ணிக்கை குறைந்து போயிற்று. உண்மை என்பது என்ன? நான் உலகத் திற்கு உண்மையாக இருக்கவேண்டும். நான் என்னைச்சார்ந்து இருக்கின்ற மக்க ளுக்கு உண்மையாக உழைக்கவேண்டும். ஒரு மனிதன் தனியாக வாழ்ந்திட முடி யுமா? இந்த உலகத்தில் ஒரு இருபத்து நான்கு மணிநேரங்கள் வாழ்ந்து முடிக்கின் றோமே! தயவுசெய்து கணக்கெடுத்துப் பாருங்கள்; ஒரு காலையில் எழுந்து இரவு படுக்கப் போவதற்குள்ளாக உங்களுக்காக இந்த உலகத்தில் உழைக்கின்ற மனிதர்கள் எத்தனை பேர்? நாம் உடுத்திருக்கின்ற துணி சாதாரணமாக வருகின்றதா? இந்தத் துணிக்குரிய பருத்தியைச் சாகுபடி செய்த வன், அதை அறுவடை செய்தவன், நெய் தவன், நூற்றவன் யார்? உங்களுக்காக உலகம் சுழன்று சுழன்று உழைத்துக் கொடுத் துக்கொண்டிருக்கிறது. அவற்றை நீங்கள் உண்டு மகிழ்கின்றீர்கள். அவற்றை நீங்கள் அனுபவிக்கின்றீர்கள். ஆனால், அவர்களுக்கு நீங்கள் உண்மையாக என்ன கொடுத்தீர் கள்? ஒவ்வொரு மனிதனும் இதை உண்மை யாக நினைக்கவேண்டும். நான் உலகத்தில் ஒன்றைப்பெற்று மகிழும்பொழுது நான் திரும்ப உலகத்திற்கு ஒன்றைக்கொடுக்காமல் நான் மாத்திரம் அனுபவித்தால் நான் உண்மையல்ல. எனக்கு உலகத்தில் ஒன்றை அனுபவிக்க உரிமையுண்டு. இன்னொரு வனுக்கு அதை அனுபவிக்க உரிமையில் லையா? அப்படியானால் கடவுள் ஏன் அவ னுக்கு நாக்கை, செவியைக் கொடுத்தார்? ஆக, உண்மையென்பதற்குப் பொருள் உலகத்திற்கு நாம் உண்மையாக இருக்க வேண்டும், எனக்கு நான் உண்மையாக இருக்கவேண்டும். எனக்காக உழைக்கின்ற மக்களுக்கு நான் உண்மையாக இருக்க வேண்டும். எந்த உண்மையை வாய்மை என்று சொன்னார் திருவள்ளுவர். சிலபேர் சிறிய காரியங்கள் நடந்த உடனே கூட நன்றி சொல்வார்கள். ஒரு கோப்பை தேநீர் வாங்கிக் குடித்தாற்கூட நன்றி சொல்லார்கள். ஆனால், ஆண்டாண்டு காலமாக உழைத்துக்கொடுத்துக் கொண் டிருக்கின்ற மனித சமுதாயத்திற்கு நாம் என்றைக்கு நன்றிசொன்னோம்? இந்த நாட் டின் கழனிகளிலே உழுதுகொண்டிருக்கின் றானே உழவன், ''உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்'' என்று பாடப்பட்ட அந்த உழவனுக்கு நீங்கள் என்றைக்கு நன்றி சொன்னீர்கள்? நீங்கள் நினைக்கலாம், நன்றி யென்று வாயினாற் சொல்லிவிட்டுப் போனால் போகிறதென்று. எல்லோரும் வாயினால் நன்றிசொல்ல ஆரம்பித்தால் எப்படி ஜீவிப் பது எண்ணிப் பாருங்கள். ஆகவே, அகத் தூய்மை வாய்மையாற் காணப்படும். காந்திஅடிகள் தான் எதை நம்பினாரோ அதை உண்மையாக நம்பினார். அவர் யார் மீது அன்பு காட்டினாரோ, உண்மையாக அன்பு காட்டினார். அவரிடத்தில் வஞ்சகம் இல்லை, சூது இல்லை, வம்பு இல்லை. அது ஒரு பெரிய காட்சி.

ஒருவர் ஒரே நாளில் ஒரு ஆளைக் கத்தி எடுத்துக் குத்திவிடுகிறார். எனக்கு என் னவோ அவர் தேவலாம்போலத் தோன்று கிறது. சில பேர் ஈரத்துணியைக் கழுத் திலேபோட்டு அறுத்துக்கொண்டே இருக் கிறார்கள். இப்படி ஈரத்துணியை கழுத் திலேபோட்டு அறு அறு என்று தினந் தோறும் அறுத்துக்கொண்டிருக்கின்ற பாவி களைவிட ஒரு நாளில் ஒரு பெரிய கோடாரி யைத் தூக்கிப்போட்டுக் கொல்கிறவனை ஒரு நாள் மன்னித்தாலும் மன்னிக்கலாமோ என்னவோ! நான் பேசுகின்ற உரிமைகளைப் பெற்று அனுபவிக்கின்ற உரிமைகளை மற்ற வர்கள் பெறுமல் அவலம்மிக்க நான் பெற்று அனுபவிப்பதைப் பார்த்து மற்றவன் ஏக் கப்பட — அழுக்காறுகொள்ள — அவாக் கொள்ள — அந்த மனிதனைத் தீய நெறி யிலே செலுத்துகின்ற என்னுடைய வாழ்க் கைமுறை இருக்கின்றதே, அது ஒரு கொலைக் குச் சமம். இந்தக் கொலையைத் தூண்டுகிற வர்களை என்னென்று சொல்வது? திருவள்ளு வர் ரொம்பக் கெட்டிக்காரர். ''கொல் லாமை'' என்ற அதிகாரத்தில் ஒரு குறள் செய்திருக்கின்றார். ''பகுத்து உண்டு பல் லுயிர் ஓம்புதலே நூலோர்தொகுத்தவற்றுள்

எல்லாம் தலை'' என்பது அந்தத் திருக்குறள். உலகத்திலே ஏராளமான புத்தகங்கள், உலகத்திலே ஏராளமான வேதங்கள், உலகத்திலே ஏராளமான ஆகமங்கள், உலகத்திலே ஏராளமான சாத்திரங்கள். சில பேர் ஆகமத்தின்பேரை வைத்தே என்னை மிரட்டுகிறார்கள். மெய்ப்பொருள் நாயனாரைக் கொல்லவந்தவனும் ஆகமம் கொண்டுவந்திருக்கின்றேன் என்றுதான் சொன்னான். ஒருகால் அந்த ஆகமம்தான் இப்போது இவர்களுடைய கையில் அகப்பட்டு நமக்குத் தொல்லையாக இருக்கிறதோ என்னவோ! சேக்கிழார் அடிகள் பெரியபுராணத்தின்படி மெய்ப்பொருள் நாயனாரைக் கொல்ல வந்தவன் சொன்னான், ''ஆகமம் கொண்டு வந்திருக்கின்றேன், அரசனுக்கு ஓத'' என்று அவன் மெய்ப்பொருள் நாயனாரைக் குத்தி விட்டு ஓடிவிட்டான். ஒருகால் அவன் அந்த ஆகமத்தைப் போட்டுவிட்டுப் போய் இருப்பான்போலத் தெரிகிறது. இவர்கள் கைகளில் அந்த ஆகமம் சிக்கி, அந்த ஆகமத்தின் பெயரால் தீண்டாமை இருப்பதாகச் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். அது சைவ ஆகமமா அல்லது முத்தனுகன் ஆகமமா என்று பார்க்க வேண்டும். அது ஒருபுறம் இருக்க, ''பகுத்து உண்டு பல்லுயிர் ஓம்புதல் நூலோர் தொகுத்தவற்றுள் எல்லாம் தலை''. எல்லா ஆகமங்களையும் எடுத்தாள்வது இருக்கட்டும். உலகத்து எல்லா மொழிகளும் பேசிய ஒழுக்கம் உலகத்து எல்லா மதங்களும் ஓதிய ஒழுக்கம் என்னவென்றால் பகுத்து உண்டு வாழுதல். இந்தக் குறளை ஏன் திருவள்ளுவர் கொல்லாமை அதிகாரத்தில் வைத்தார்? விருந்தோம்பலில் வைக்கக் கூடாதா? ஒப்புரவறிதலில் வைக்கக் கூடாதா? ஈதலில் வைக்கக்கூடாதா? இந்தத் திருக்குறளைக் கொல்லாமை அதிகாரத்தில் வைத்த காரணம், நான் நினைக்கிறேன் வாழப்பிறந்த மனிதனுக்குச் சோறு கொடுக்காமல் சாகடிப்பதும் கொலைக்குச் சமம் என்பது திருவள்ளுவரது கருத்து என்று. கத்தியெடுத்துக்கொண்டால் மாத்திரம் கொலை என்று நினைக்காதீர்கள். வாழப்பிறந்த மனிதனுக்குச் சோறு கொடுக்காமல் அவனைச் சாகடித்தாலும்கூட அது கொலைக்குச் சமம் என்று வள்ளுவர் கருதியிருக்கிறார்.

### கடவுளும் காந்தியடிகளும்

இந்தத் திருக்குறள் காந்தியடிகளுக்கு எவ்வளவு வேதனையைக்கொடுத்திருக்கிறது? 'கடவுள் எப்படியிருப்பார்'? என்று கேட்டதற்குக் காந்திஜி சொன்னார்: 'பசித்தவனுக்கு ரொட்டிபோல இருப்பார்' என்று. இப்பொழுது எங்கள் கோவில்களிலே நிறையச் சாப்பாடு. பிரார்த்தனை பண்ணத் தவறினாலும் தவறும் பிரசாதங்கள், சர்க்கரைப் பொங்கல்கள், விநியோகங்கள் எங்கள் கோயில்களில் அதிகம். அதிலே எனக்கொரு சந்தேகம். எங்களுடைய சுவாமி எந்தக்கோவில்களிலும் சாப்பிடமாட்டார். அவர் சாப்பிடமாட்டேன் என்கிறாரென்று எவருக்கும் கவலையுமில்லை. காரணமென்ன? சாமிபேரால் படைக்கிறதெல்லாம் நமக்குத்தானென்று அவர்களுக்கே தெரியும், சுவாமி சாப்பிடவில்லையென்றால் நான் என்ன நினைக்கிறேனென்றால் காந்தியடிகள் சொன்ன வார்த்தை, உலகத்தில் எல்லா உயிர்களிடத்தும் உயிர் தங்கியிருக்கிறது. எல்லா உயிர்களிலும் கடவுள் தங்கியிருக்கிறார். ''உயிர்க்கு உயிராக'' எல்லா உயிர்களிடத்தும் தங்கியிருக்கின்ற இறைவனுக்கு எல்லா உயிர்களும் பசித்து அழுவது தெரிகிறது. ஆகவே, அவர் தனியே சாப்பிட மறுக்கிறார். ஆகவே, இந்தக் குறளின்படி பார்த்தாலும் இந்தியநாட்டின் ஏழைமக்களுடைய பசி நீங்கவேண்டுமென்பதற்காக இந்தியநாட்டு மக்களுடைய வறுமை நீங்க வேண்டுமென்பதற்காக காந்தியடிகள் போராடினார், எழுதினார். ஆரம்பகாலத்தில் காந்தியடிகள் எப்படியிருந்தார் என்பதைப் பலர் படங்களில் பார்த்திருப்பீர்கள், கோட்டும் சூட்டும் போட்டுக்கொண்டிருந்தார், கோட்டும் சூட்டும் போட்டுக் கொண்டிருந்த காந்தியடிகள் வேண்டுமென்றே ஒற்றைவேட்டிக்காரராக மாறவில்லை. அவர் ஒற்றை வேட்டிக்காரராக மாறிய காட்சியே ஒரு அனுபவக் காட்சி. அவர் தமிழகத்திலேதான் ஒற்றைவேட்டிக்

காரராக மாறினர். அதுவரையும் கோட்டும் சூட்டுந்தான் போட்டுக்கொண்டிருந்தார். அவர் தமிழகத்திலே பயணஞ்செய்து கொண்டிருந்தபொழுது களனிகளில் உழுது கொண்டிருந்த ஏழை விவசாயிகள் நான்கு முழ வேஷ்டிக்குமேல் மறுதுணி இல்லாமல் இருந்ததைப் பார்த்தார். இந்த நாட்டின் பெருவாரியான மக்கள் ஒரு வேட்டிக்குமேல் மறுதுணி இல்லாமலிருக்கும்பொழுது நான் எப்படிக் கோட்டும் சூட்டும் போடுவது என்று கழற்றித் தூக்கியெறிந்தார். இப்பொழுது நாங்களாயிருந்தால் என்ன சொல்லுவோம்? அது அவன் தலைவிதி, இது என் தலைவிதி, அவன் பண்ணிய பாவம் அவன் அனுபவிக்கிறன்! நான் பண்ணிய புண்ணியம், நான் அனுபவிக்கிறேன்'' என்று. அண்ணல் காந்தி அடிகளின் இந்த சகாப்தத்தில் வாழுகின்ற இளம் தலைமுறையைச் சார்ந்த குழந்தைகள் தயவு செய்து எளிமையாக உடுத்திக்கொள்ளக் கற்றுக்கொள்ளவேண்டும். ஆடம்பரம் என்பது மனிதகுலத்தின் நஞ்சு என்பது காந்தியடிகளின் தத்துவம்.

**அகிம்சை**

''எத்தனை விதங்கள் யான் கற்கினும் கேட்கினும் என் இதயமும் ஒடுங்கவில்லை, யான் எனும் அகந்தையும் மாறவில்லை; யாதிலும் அபிமானம், சித்தமிசை குடிகொண்ட ஈகையோடிரக்கம் யான் சென்மத்திலும் அறிகிலேன்'' என்று தாயுமானவரே சொன்னர். மிக முக்கியமான குணங்களில் ஒன்று, ஒருவர் தீமை செய்தால் அதைப் பொறுத்துக்கொள்வது. ஆத்திரப்படாமல் இருப்பது. இந்தக் குணம் இப்பொழுது எத்தனை பேருக்கு இருக்கின்றது. அகிம்சை என்பது மிக உயர்ந்த குணம். நெருப்பொடு நெருப்பு மோதினல் பற்றி எரியத்தான் செய்யும்' நெருப்பை அணைப்பது தண்ணீர். கோபத்தை மாற்றுவது அன்பு. வஞ்சகத்தை மாற்றுவது கருணை. இதைக் காந்தியடிகளே வள்ளுவருக்குப் பிறகு நடைமுறைப்படுத்திக் காட்டினர். ''வலது கன்னத்தில் அறைந்தால் இடது கன்னத்தையும் காட்டு.'' என்பது ஒரு அறவுரை. சிலர் இடது கன்னத்தையும் காட்டி முதுகையும் காட்டிவிட்டு வருகிறர்கள். ஏனென்றல், முடியவில்லை. அது அகிம்சை அல்ல. என்றல் திருப்பித் தாக்கக்கூடிய சக்தி இருந்து நான் தாக்காமல் இருக்கவேண்டும். நான் ஆண்மையுடையவனக இருக்கவேண்டும். எனக்கு வீரம் வேண்டும் துணிவு வேண்டும். ஆனல், அதே காலத்தில் அவற்றைச் செயற்படுத்தாமல் இருக்கவேண்டும். திருவள்ளுவர் புரிந்துகொண்டு பேசுகிறர்: ''வலது கன்னத்தில் அறைந்தால் இடது கன்னத்தைக் காட்டுவது மட்டும் போதாது, வலது கன்னத்தில் அடித்தான் என்பதை மறந்துவிடு.'' என்கிறர் திருவள்ளுவர். சிலரிலே திறமைசாலிகள் இருக்கிறர்கள். ''மறந்துவிட்டேன், மறந்துவிட்டேன்'' என்பார்கள். திருவள்ளுவர் விடுவாரா? நீ மறந்துவிட்டேன் என்பதற்கு அடையாளமாக உன்னை அடித்துத் தீங்கு செய்தவனுக்கு நன்மை செய் என்று கூறுகிறர். ''நன்றி மறப்பது நன்றன்று நன்றல்லது அன்றே மறப்பது நன்று. ''என்று சொன்ன திருவள்ளுவர்' இன்ன செய்தாரை ஒறுத்தல் அவர் நாண நன்நயம் செய்துவிடல்.'' என்றர். இந்தத் திருக்குறளுக்கு நல்ல இலக்கியமாக அண்ணல் காந்தியடிகள் வாழ்ந்தார். நாம் நம்முடைய துன்ப மூட்டைகளைத் தூக்க முடியாமல் அழுந்திக்கொண்டிருந்த பொழுது, காந்தியடிகள் நமக்காக நொந்து அழுது, நம்முடைய துன்பங்களையும் தம்முடைய துன்பங்களாகத் தூக்கிக்கொண்டு நடந்தார். அவர் பட்டினி கிடந்தது இல்லாமல் அல்ல அவர் பட்டினி கிடந்தது வயிற்று வலியால் அல்ல. அவர் பட்டினி கிடந்தது பசியினல் அல்ல. அவர் பட்டினிகிடந்தது, நம்முடைய துன்பங்களை மாற்றுவதற்காக. எப்படி ஒரு தாய் தன்னுடைய குழந்தையின் நோய்க்காகத் தான் மருந்து குடித்துப் பத்தியம் இருக்கிறர்களோ, அதேபோல இந்திய சமுதாயத்தின் தாய்போல விளங்கிய காந்தியடிகள் இந்திய சமுதாயத்தினுடைய குறைகளை மாற்றுவதற்காக நோன்பிருந்தார். அவரைவிட ''இன்ன செய்

தாரை ஒறுத்தல் அவர் நாண நன்னயம் செய்துவிடல்'' என்ற குறளுக்கு நிகராக யாரும் விளங்கி இருக்க முடியாது.

**வள்ளுவம்.**

எழில் ஞாயிருக ஒரு ஒளி ஞாயிருக வள்ளுவத்தின் விளக்கமாக-வள்ளுவத்திற்கு உரையாக - வள்ளுவத்திற்குப் பேரிலக்கிய மாக - திகழ்ந்து வாழ்ந்த பெருமை நம் முடைய காந்தியடிகளுக்கு உண்டு. அவ ருடைய வாழ்க்கையில் குறள் நெறி விளங் கிற்று. வள்ளுவரது முரசு எதைக் கொட்டு கிறது. வள்ளுவருடைய மறை என்ன சொல்லுகிறது. ''பிறப்பு ஒக்கும் எல்லா உயிர்க்கும்'' என்று வள்ளுவரது முரசு கொட்டுகிறது. உலகத்தில் மனிதரெல்லாம் ஒரே மாதிரிப் பிறக்கிருர்கள். ஆனுல், தாசில்தார் பிள்ளை தாசில்தாராகப் பிறப்ப தில்லை. அரசாங்க அதிபருடைய பிள்ளை அரசாங்க அதிபராகப் பிறப்பதில்லை. ஆனுல், நம்முடைய நாட்டிலே ஜாதிகளிலே மட்டும் கருத்திலுலே ஜாதி வந்துவிடுகிறது. வள்ளுவர் பிறப்பு ஒக்கும் எல்லா உயிர்க்கும் என்ருர். பொய்யாமை பொய்யாமை ஆற் றின் அறம் பிற செய்யாமை செய்யாமை நன்று''. என்று சொன்னுர். பொய் பேசு வது சொல்வதைவிட முக்கியம் பொய்யாக வாழாமல் இருப்பது. பொய்பேசாமையைக் கூடச் சிலர் செய்துவிடுவார்கள். ஆனுல் பொய்யாக வாழ்வார்கள். மற்றவர்களுக்கு நம்பிக்கையுடையவனுக மற்றவர்கள் நம்பும் படியாக வாழவேண்டும். மற்றவர்கள் வாழ்க்கைக்கு நம்பிக்கைக்கு நல்லெண்ணத் திற்கு உடையவனுக வாழவேண்டும். இந்த உயர்ந்த நெறியைக் காட்டிய பெருமை திருவள்ளுவருக்கு உண்டு.

**கடவுள் பக்தியும் ஒழுக்கமும்**

அடுத்து, திருக்குறளில் மிக முக்கிய மான ஒரு அம்சம், எந்தக் காலத்திலும் கடவுளை மறக்காமல் இருப்பது. தன்னைத் தூய்மையாக வைத்துக்கொள்ளக் கடவுள் பக்தி அவசியம். கடவுளைத் தந்தையாகவும் தாயாகவும் திருவள்ளுவர் கருதினுர். நாம் இன்றைக்குக் கடவுளை ஏதோ தாதுப் பொருளாக நினைக்கிருேம். கடவுள் பக்தி காந்தியடிகளுக்கு இருந்ததுபோல வேறு யாருக்கும் இருந்தது கிடையாது. கட வுளுக்கு இலக்கணம் என்னவென்ருல் ''வேண்டுதல் வேண்டாமை இலான்'' என் பது. ''நன்றுடையான் தீயதில்லான் விந் தன்காண் துன்பங்கள் இல்லாதான்காண்'' என்று இறைவனைப் புரிந்துகொண்டு, இரண் டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு தோன்றிய திருக்குறளுக்கு இரண்டாயிரம் ஆண்டுகள் வரையில் இந்த நாட்டு மக்கள் அந்த நெறியில் வாழாததைப் பார்த்து, திருக் குறளுக்கு ஏற்ற சமுதாய அமைப்புத் தோற்றுமையைப் பார்த்து, திருக்குறள் நெறியை, நடைமுறைப்படுத்த முடியுமா? முடியாதா? என்ற சிக்கலே எழாதிருந்த தைப் பார்த்து, திருக்குறளுக்கு எழுத்துக் கும் சொல்லுக்கும் மட்டும் பொருள்கண்டு, இந்த நாடு அடிமைப்பட்டுப் போயிருந்த தைப் பார்த்து, திருவள்ளுவரை ஈன் றெடுத்த தாய்த்தமிழகமே பிற இனத்திற்கு அடிமைப்பட்டதைப் பார்த்து, திருவள்ளு வரை ஈன்றெடுத்த தமிழகத்திலேயே வறு மையும் பஞ்சமும் பட்டினியும் அறியாமை யும் மலிந்து கிடந்ததைப் பார்த்து, விண் ணகம் சென்ற வள்ளுவன் விண்ணகத் திலேயே இறைவனிடத்திலே விண்ணப்பம் போட்டு, நானே திரும்பத் தமிழகத்திற்குச் சென்று, நானே திருவள்ளுவருக்கும் திருக் குறளுக்கும் உரை எழுதியதுபோல வாழ்ந்து காட்டி, என்னுடைய நாட்டு மக்களைக் கேட்கவேண்டும்'' என்று திரும்பி வந்ததைப் போல, காந்தியடிகள் வந்தார் என்று நம் புங்கள். திருக்குறளுக்கு எழுத்து எழுத்தாக வாழ்ந்து, திருக்குறளை எண்ணி எண்ணி வாழ்ந்த ஒரு பெருந்தகையாக அவர் வாழ்ந்தார். அவர் வாழ்க்கை திருவள்ளு வத்தின் பயன். அவர் குரல் திருக்குறளின் குரல். அவர் ஒழுக்கமும் திருவள்ளுவர் ஒழுக்கம். அவர் சிந்தனை, திருவள்ளுவர் சிந்தனை. அவருடைய உலகம், திருவுலகம்! புதுமை உலகம்! ''அந்த உலகம் வளர்க!''



# கலைக்கோயில்

இ. இரத்தினம்

செயல் திறனுடைய அறிவியலிற்கும் உணர்நலன் விரிக்கும் அழகியலுக்கும் முரண்பாடு வளரவிடாது இரண்டையும் செவ்விதில் இணைத்து வாழ்வு நடாத்தும் இயல்பே உண்மை அறிவாகும். அனுபவத்தை அறிவு எண்ணக்கருவாக்கும்; அழகியல் அதனை அழுக்ககற்றிப் புறத்தே வெளிப்படுத்தும்.

உலகிற்கு கார்ள்மாக்ஸினைத் தந்து வான்புகழ் கொண்டவர் ஹெகல். அவருடைய தருக்கம், வரலாற்றியல் ஆகியவற்றில் கண்ட அடிப்படைத் தத்துவங்களை எடுத்துத் தம் தருக்கியல் உலோகாயதத்திற்கு (Dialectical Materialism) வித்திட்டவர் கார்ள்மாக்ஸ். ஆயின் மற்றைத் துறைகளில் ஹெகல் கொண்டிருந்த கருத்துக்கள் வெளியுலகில், தமிழுலகில் அவ்வளவில் பரவவில்லை.

தருக்கம், மனம், சட்டம், ஒழுக்கவியல், சமூகம், வரலாறு என்பன ஹெகலின் ஆய்விற்குள் அடங்கிய பொருள்கள். ஹெகலின் கருத்தின்படி அரசும் அரசறிந்த வாழ்வும் மனிதனுடைய உயர்ந்த, உண்மையான அனுபவத்தை முழுமைபெறச்செப்பனிடுவன வல்ல. அனுபவம் அரசு வாழ்வில் பெறுவதைவிட ஆத்ம வாழ்விலேயே நிறைவான விடுதலையைப் பெறுகின்றது. இந்நிலையிலேயே அவன் தன் உடல், உணர்வு, யாவும் கடந்த ஓரான்மப் பெருநிலையைப் பெறுகின்றான். பொதுவுடைமைத் தத்துவக் கோட்டின் இறுதிப் புள்ளி இது. ஏனெனில் பொதுவுடைமை வழியும், மனிதனின் பராதீன நிலையை (Alienation) விடுவித்துப்பூரண சுதந்திரனாக்கவே விஞ்ஞானவழி எனப்படும் மார்க்கத்தைக் கடைப்பிடிக்கின்றது. அரசு, ஆரம்ப மூலப்பசிக்குரிய பொருளியற்படிகளை வகுக்கக், கலைகளே இந்த ஓரான்ம இறுதிப் புள்ளிக்கு மனித குலத்தை இட்டுச் செல்கின்றன. மனம் என்பது, அதற்குரிய கலை, சமயம், மெய்யியல் (தத்துவம்) என்பவற்றில் ஈடுபடும்பொழுதுதான் நிறைவுபெற்ற ஓர் மெய்ம்மைப் பொருளாகின்றது. அதாவது, அதன் உண்மை நிலையை அடைகின்றது. பொதுமையில் ஒருமையைக் காண்பதும், ஒருமையைப் பொதுமையில் கரைப்பதும் மனமே.

ஹெகலின் மனத் தத்துவத்தின்படி, மன நிறைவு என்பது கலை, சமயம், தத்துவம் மூன்றோடும்தான் முற்றுப்பெறும். இவை மூன்றும் முட்டின்றி ஒருங்கியைந்த ஒரு நிறுவகம் எங்கேனும் உண்டென்றால் அது தமிழகத்து இந்துக் கோயில்களில்தான் உண்டு. ஹெகல் கூறிய நுண்கலைகள் யாவை? கட்டிடக்கலை, சிற்பம், ஓவியம், இசை, செய்யுள், காவியம், இசைப்பா, நாடகப்பா என்பன அவை.

இக்கலைகளுள் சிலவோ பலவோ எல்லாச் சமயக் கோயில்களுக்கும் பொதுவாயின எனினும் தமிழ் இந்துக் கோயில்களுக்குச் சிறப்பானமுறையில் நிறைவாய் அமைந்துள்ளன.

கட்டிடக்கலை இந்துக் கோயில்களுக்குத் தனியான ஒரு சிறப்புமுறையில் ஆகம சிற்பசாத்திரமுறையில் அமைந்துள்ளது. இது கலையின் ஆரம்பநிலை. இதில் கருத்தும் உருவமும் புறம்பு புறம்பாக உள்ளன. கோபுரங்கள், கட்டிடங்கள் மனதைக் கவரும்; பிரமிப்பை உண்டாக்கும். ஆயின் உணர்வு நுண்மைகளை வெளிப்படுத்தா.

அடுத்து சிற்பத்துக்கு வருவோம். கருத்து வேறு, உருவம் வேறு எனும் துவிதம் ஓரளவிற்கு இங்கு மறைகிறது. சிற்பப் பொருள், வெண்கலம், வெள்ளி, பொன்னாக மாற, தூலபக்குவம் மெருகேறுவதுமன்றி சிற்பக் கோலம், கருத்திற்குக் கூடிய அழுத்தமும் அளிக்கிறது. தமிழர் கடவுள்கள் பெருமளவில் கருத்துருவ அமைதிகளே திரிபங்கி, சோமாஸ்கந்தன் நடராசன் என்பவற்றை நோக்க. தமிழர் கடவுளுருவங்கள் கருத்திற்கு இன்னும் முக்கிய உயர்வு கொடுத்துள்ளன.

இதன்பின்னர் ஒவியம். இது பருப்பொருளைக் குறைத்து இருபரிமாணத்தில் முப்பரிமாணம் (தூரம்) காட்டி கருத்திற்கு இன்றும் கூடிய சிறப்பளிக்கின்றது. தமிழ்க் கோயில்களில் ஓவியம் மிகக் குறைவு. இதற்குப் பதிலாக மலர் அலங்காரங்கள், சாத்துப்படிகள், சப்பரங்கள் தோன்றலாயின. இவை ஓவியங்கள் அளவிற்குக் கருத்துருவை வெளிப்படுத்தவில்லை. ஆயினும் பருப்பொருள் (வெளியுருவம்) தடிப்பினை அகற்றின. அடுத்து வருவது இசை. தமிழர் கோயில்கள் இசைக்கு மிக முக்கியம் கொடுத்தனவாதலின், ஓவியவளர்ச்சி அதிக இடம்பெறவில்லை. சில கோயில்களிலேயே இடம்பெற்றன. இது காலதேசச் சூழலால் ஆயதாயிருக்கலாம்.

அகமுக நிலை சார்ந்த (Subjective) அருவக் கலையான இசை, எல்லையிலாப் பல வகை உணர்வு வண்ணங்கள் எழுப்பும் தகையது. கலைகள் யாவற்றுள்ளும் தன் இராக பாவத்தால் தனித்து ஒரு குறிப்பைச் சுட்டாது உணர்வு நலனை மிகவும் தாக்கத்துடன் பல்வேறுவகையில் அருட்ட வல்ல கலை இது ஒன்றே. அடுத்து நாம் எடுத்துக்கொள்ளவேண்டியவை செய்யுளும் இசைப்பாவும் ஆகும். இவை இனந்தெரியா உணர்விற்குத் திசை அளித்து, புத்தியையும் உணர்வையும் ஒன்றிணைத்து, விடுதலை நெறிக்கு வழிகாட்ட வல்லன.

தமிழர் தேவாரங்கள் இசை, செய்யுள் இசைப்பா எல்லாம் கலந்த பிழம்பு, அவற்றைப்போல் நிறை இசைமையுடைய தொன்மையான படைப்புக்கள் உலகத்தில் இல்லை. செய்யுட்கலையையும் இசைக் கலையையும் மிக உயர்ந்த உருகுநிலையிலும் (மனம்) உறை நிலையிலும் (உடற்கரணம்) புணர்த்தி இறைவனுக்குச் சார்த்திய விந்தை தேவாரங்களுக்கே உண்டு. அடுத்தகலை காவியம். கோயிற் புராணபடனங்கள் இதை நிறைவேற்றுகின்றன. அடுத்தது நாடகச் செய்யுள். இது தமிழ்நாட்டில் பரதநாட்டியமாக மலர்ந்து பண்டுதொட்டு எங்கள் கோயில்களில் அர்ச்சனை அமிசமாக விளங்குகின்றது. அலாரிப்பு என்ற ஆரம்பநிலையைக் கவனிக்க.

ஹெகல் சொன்ன நாடகச் செய்யுள், கிரேக்க நாடகங்களைக் குறிப்பது. ஆயினும் அதற்கு வேறு உருவம் கொடுத்து இசை, செய்யுள் இரண்டொடும் குழைத்து அபிநய மூகமாக்கிக் கோயிலுக்குச் சார்த்திய பெருமை தமிழருக்குண்டு.

ஹெகல் இக்கலைகளைக் கோயில்களோடு சார்த்திக்கூறவில்லை. நிறைமனதிற்கு இவை அவசியம் என்றுமட்டும் கூறினார். இவை யாவற்றையும் ஒருங்கே முறைமைபெறக் காண, கேட்க வைத்தவர்கள் தமிழ் இந்துக் கோயில்கள் கட்டிய பெரியோர்களே. ஹெகலின் கலைகட்கு இது ஓர் புது விளக்கம்.

இக்கலைகள் அமைந்த கோயிலே, நம் சமயக் கோயில் இவ்வாறாக பொதுமை அரசு தரும் மனத்திலும், கலைக்கோயில் தரும் மனம் எவ்வளவு நிறைவு பெறும் என்பதை நாங்கள் காணலாம். பொருளாதாரம் எவ்வாறு வெவ்வேறு இடங்களில் வெவ்வேறு படிநிலைகளில் வளர்ந்துள்ளதோ, அவ்வாறே மனப்பக்குவமும் கால தேச பரிமாணங்கட்கு அமைய வெவ்வேறு கருவிகளாக வளர்ந்தும் நலிந்தும் வந்துள்ளது.

கலை, சமயம் இரண்டையும் மேலும் வளப்படுத்தவேண்டியது தத்துவம். அதுவும் கோயில்களோடு இணைந்துள்ளது என்பதை நாம் மறக்கமுடியாது. தேவாரம் வேத சாரம். அண்டசக்தியின் சிற்பக்கனவே நடராசனின் தூக்கிய திருவடி.

ஹெகலின் மாக்ஸுமூலம் கோயில்களை நோக்கில் அவை தேய்ந்துபோன வாய்பாட்டு அடிப்படையில் திரிபுபட்டுத் தோன்றும். நிறைமனம் எனும் கொள்கையோடு நோக்கில் அவற்றின் உண்மை விளங்கும். அரசொருமை பொதுவுடமை கண்ட மனம் அவ்வளவோடு அமைந்துவிடாது. "ஐம்பொன் மிக வைத்தபேரும் நேசித்து இரசவாத வித்தைக்கு அலைந்திடுவர்." நிறைமனப் பாதைதான் மேலும் பறந்து ஓரான்மப் பொதுமையில் ஒடுக்கும். வரலாறும் பரிணாமமும் கூறும் தீர்ப்பு இது.

"காண்பாரால் கண் நுதலாக்
காட்டாக்காலே"

## எதிர்நீச்சல்

நீர்வாழும் மச்சம் முற்றிலும் நீரை நம்பியிருக்கிறது. நீரைத் தவிர அதற்கு வேறு உறைவிடம் கிடையாது. மீனின் முயற்சியெல்லாம் நீருக்குள்ளேயே நின்றுவிடுகிறது. ஆயினும் அதற்கொருவித வல்லமை வருகிறது; விரைந்து வீழ்கின்ற நீரை எதிர்த்து நீந்தும் திறன் அதற்கு உண்டாகிறது. விக்கினத்தை அது வெல்லுகிறது என்றே இயம்பலாம். முற்றிலும் தெய்வத்தைச் சார்ந்திருப்பவன் அத்தகையவன். தனது இச்சா சுதந்திரங்களையெல்லாம் அவன் தெய்வத்திடம் ஒப்படைத்துவிடுகிறான். யான் எனது என்னும் செருக்கு அறுப்பவனே விக்கினேசுவரனை வழுத்துபவன் ஆகிறான். அதனால் அவன் உலகநடைமுறை என்னும் நீர்வீழ்ச்சியை எதிர்த்து இறைவனை நோக்கி நீந்த வல்லவனாகிறான்.

— சுவாமி சித்பவானந்தர்

உ

கணேசன் திருவடி சரணம்

கோண்டாவில் நெட்டிலைப்பாய் பிள்ளையார்மீது

பாடப்பெற்ற

# திருவூஞ்சற் பாக்கள்

---

## காப்பு (ஆசிரிய விருத்தம்)

பூமேவு மதியிதழி கங்கைசூடும் பூரணனு மாதிசிவ னுமையினேடு
காமேவி யுலகமுய்ய முயங்கிமுன்பு காசினியோர்க் கருள்புரிய அளித்தமைந்தா!
மாமேவு கரிமுகவ னமலனுதி வளமருவு கோண்டாவில் நெட்டிலைப்பாய்
தாமேவு மைங்கரர்க்கோ ருஞ்சல்பாடத் தற்பரனு மவனடிகள் காப்பதாமே.

## திருவூஞ்சல்

சீரேறு மம்பவளக் கால்கள்நாட்டித், திகழொளிகொள் நற்பளிங்கு விட்டம்பூட்டி,
பேரேறு மிரசதமேற் கட்டிகட்டிப், பிரசமலர் மாலையொடு மணிகள்சாத்தி,
ஏரேறு சாம்புநதக் கயிறுமாட்டி, யெழிலாரும் நீலமணிப் பலகையிட்ட,
தாரேறு மூஞ்சன்மிசை தகவினேறி, நெட்டிலைப்பாய் ஐங்கரரே! ஆடீரூஞ்சல்!

பூமகளு மிந்திரையும் கவரிவீசப் பொலிவினெடு மருத்துவரால வட்டமேந்த,
காமருறு மிந்துகதிர் கவிகைதாங்கக் கனலவன்கைத் தீவர்த்தி இருளையோட்ட,
ஏமருறு கந்தருவர் இசைகள்பாட, இசையடியார் தமதுமனக் கவலைவீட்,
தாமகிழ்வொ ட்ரமகளிர் வடந்தொட்டாட்ட நெட்டிலைப்பாய் ஐங்கரரே! ஆடிரூஞ்சல்!,

வேதமுத லுறுபொறியின் வந்தநாத! வெள்ளிமலைக் கோபுரத்து மேவும்நாத!
சோதியுள தும்பிமுக முள்ளநாத! துன்னுமைந்து கரமுடைய தூயநாத!
தாதவிழு மலர்மாலை சூடுநாத! தற்பரசீர்ச் சகலவித லோகநாத!
மேதகுநல் லடியரிடர் நீக்குநாத! நெட்டிலைப்பாய் ஐங்கரரே! ஆடீரூஞ்சல்!

துங்கமிகு மாதங்க வதனமாடச், சோதிமுகச் செவியிரண்டும் துலங்கியாட,
பொங்குமெழிற் சடைமுடியும் பிறையுமாடப், பொருவிலெழி லுறுவலவை புடையினுட,
செங்கமல வொளிமருவு பாதமாடச், சேருமெழி லுபவீத மார்புமாட,
அங்குசபா சக்கரங்க ளாடவாட, நெட்டிலைப்பாய் ஐங்கரரே! ஆடீரூஞ்சல்!

நாரதரும் தும்புருவுங் கீதம்பாட, நல்லவித்தி யாதரர்கள் தாளம்போட,
தூரியநன் முரசவிசை யெங்கும்நீட, துங்கமிகு கானவொலி துதைந்துகூட
வாரமுட னடியர்கர முச்சிசூட், மலரயனெ டுளவமரர் வந்துநாட
ஆரணியும் சடைமுடியெம் மாதிநாத! நெட்டிலைப்பாய் ஐங்கரரே! ஆடீரூஞ்சல்!

திருமருவு சடைமுடியு மூன்றுகண்ணும் தேசுபெறு கரிமுகமும் புயங்கள்நாலும்
உருமருவு பெருஞ்செவியும் நான்றவாயும் ஓதரிய ஐங்கரமும் ஒளிகொள்மார்பும்
வரமருள ஏறிவரு மாகுவென்னும் வாகனமும் மலரடியும் வந்துகாட்டிப்
பரனருளும் முக்கணுடை முதல்வா!நல்ல நெட்டிலைப்பாய் ஐங்கரரே! ஆடீரூஞ்சல்!

கண்ணனெரு திருமருக னைவீசா! கந்தனுக்கு முன்பிறந்த கணேசநாதா!
எண்ணரிய குடிலையுரு வானவீசா! ஏத்துநல வல்வையொரு பாகவீசா!
திண்ணியவக் கயமுகனைக் காய்ந்தவீசா! தேசுபெறு மாகுமிசை ஏறுமீசா
அண்ணலுமை தந்தருளு மாதியீசா! நெட்டிலைப்பாய் ஐங்கரரே! ஆடீரூஞ்சல்.!

தரணிதொழு நாயகரே! ஆடீரூஞ்சல்! தந்திமுக முன்னவரே! ஆடீரூஞ்சல்!
மருமருவு கொம்பினரே! ஆடீரூஞ்சல்! மன்னுமைந்து கரமுடையீர்! ஆடீரூஞ்சல்!
வரமருளும் தாளினரே! ஆடீரூஞ்சல்! மாஞுகு வாகனரே! ஆடீரூஞ்சல்!
தெரிவரிய மறைப்பொருளே! ஆடீரூஞ்சல்! நெட்டிலைப்பாய் ஐங்கரரே! ஆடீரூஞ்சல்!

உரவவுணர்க் காதினரே! ஆடீரூஞ்சல்! ஓங்குபெருங் காதினரே! ஆடீரூஞ்சல்!
பொருவிலொரு கோட்டினரே! ஆடீரூஞ்சல்! பொலியுமதிக் கோட்டினரே! ஆடீரூஞ்சல்!
தரணிதொழு நாயகரே! ஆடீரூஞ்சல்! சார்வல்வை நாயகரே! ஆடீரூஞ்சல்!
அரியமறை முதலினரே! ஆடீரூஞ்சல்! நெட்டிலைப்பாய் ஐங்கரரே! ஆடீரூஞ்சல்!

## வாழ்த்து

சந்தமுறும் மறையோரும் பசுவும் வாழி! சதுர்மறையும் செங்கோலு மரசும்வாழி!
வந்தகற்பு மாதரொடு தருமம்வாழி! வாய்ந்தசைவ சமயநிலை புவியில் வாழி!
முந்துதிரு வெண்ணீரு டடியார்வாழி! மும்மாரி பெய்துலகில் முகில்கள் வாழி!
அந்திருவாழ் கோண்டரவில் நெட்டிலைப்பாய் அழகுதிரு ஐங்கரரே! வாழி வாழி.

## எச்சரிக்கை

திருவார் ஐங்கர தேசோ மயனவன் எச்சரிக்கை!
மருவார் கொன்றையன் மகனுய் வந்தவன் எச்சரிக்கை!
பெருகார் வத்தொடு பேணும் மனத்தவன் எச்சரிக்கை!
தருவார் நெட்டிலைப் பாயில் வாழ்பவன் எச்சரிக்கை!

## பராக்கு!

சீராருந் தும்பிமுகத் தேவன் பராக்கு! செம்பதுமத் தோன்புகழுந் தேவன் பராக்கு!
ஆராரும் வந்துதொழும் ஐயன் பராக்கு! அடியரிடர் தீர்த்தருளும் ஐயன் பராக்கு!
காராரும் கற்பகம்போல் அருள்வான் பராக்கு! கணபதியாய்க் காத்துநமக் கருள்வான் பராக்கு!
பேராரும் நெட்டிலைப்பாய்ப் பெரியோன் பராக்கு! பேசரிய ஐந்துகரப் பெரியோன் பராக்கு!

## லாலி

கருதரிய கணபதியே! லாலி! சுபலாலி!
காத்துநமை ஆள்பவரே! லாலி! சுபலாலி!
வருமாகு வாகனரே! லாலி! சுபலாலி!
வயங்குமைந்து கரத்தினரே! லாலி! சுபலாலி!
பொருவரிய அருள்புரிவீர்! லாலி! சுபலாலி!
புண்ணியநன் வடிவினரே! லாலி! சுபலாலி!
குருமணியே! ஏரம்பா! லாலி! சுபலாலி!
குலவுநெட்டி லேப்பாயீர்! லாலி! சுபலாலி!

## மங்களம்

திருவாரு மைங்கரர்க்கு ஜெய மங்களம்! சிவ
பெருமாற்குந் தேவியர்க்குஞ் சுப மங்களம்!
தேவரெலாம் போற்றுநல செய்யதிரு முருகனுக்கும்
ஏவரையுங் காத்தருளும் ஏத்துநல பைரவர்க்கு
காவல்வீர பத்திரர்க்கும் கருதுநல பத்திரைக்கும்
மூவரெனுந் தேவருக்கும் மூதண்டத் தேவருக்கும்

மங்களம்! ஜெய மங்களம்!
மங்களம்! சுப மங்களம்!
மங்களம்! மங்களம்!! மங்களம்!!!
சுபம்!

## வள்ளுவம்

''பயனில்லாத சொற்களைப் பலமுறையும் சொல்லுகின்ற ஒருவனை மனிதன் என்று சொல்லக்கூடாது; மக்களுள் பதர் என்று சொல்ல வேண்டும்''.

நீதி உயர்ந்த மதி கல்வி அன்பு
நிறைய உடையவரே மேலோர்.

*Space Donated*
*by*

**D. Piyasena Fernando**

BUILDING CONTRACTOR

32, 5th LANE, NAWALA,
RAJAGIRIYA.

*with the best compliments*

*of*

**A. K. M. PERERA & CO.**

BUILDING MATERIAL SUPPLIERS & TRANSPORTERS

74, JETAWANA ROAD,
COLOMBO - 14.

உன்னிய கருமம் முடிப்பாய் போற்றி

# AJANTHA HOTELS LTD.

HIGH CLASS VEGETARIAN HOTEL

WITH

ROOM FACILITIES

O

# AJANTHA TOURS
&
# TRAVEL SERVICE

OFFICE:
125, OLCOTT MAWATHA
COLOMBO.

T'Phone: 32769, 28089

↓

BRANCH:

SANTHI LODGE
HOSPITAL ROAD, JAFFNA.

''நற்குஞ் சரக்கன்று நண்ணிற் கலைஞானம்
கற்குஞ் சரக்கன்று காண்''

அன்பளிப்பு

★

# உதயா ஜுவலர்ஸ்

தங்க நகை வியாபாரிகள்

53. 55, செட்டியார் தெரு,

கொழும்பு-11.

தொலைபேசி: 25745

கோண்டாவில் பெருமக்களின் பணிகள் மேலும் வளர
எமது நல்லாசிகள்.

*Space Donated*

*By*

DECCA SAREE HOUSE

WHOLESALE & RETAIL TEXTILE DEALERS

121, 3RD CROSS STREET,
COLOMBO - 11.

Telephone: 24671

மதியினை வளர்க்கும் மணியே போற்றி

WITH BEST COMPLIMENTS

FROM

maniam stores

75, 77, PRINCE STREET,
COLOMBO - 1 1

பள்ளிப் பிள்ளைகளின் சிரமதானப் பணி
பிள்ளையாருக்குத் தேனும் தினைமாவும்போல.

எமது வாழ்த்துக்கள்

*Space Donated by*

**DESIGN
TEXTILE
CENTRE**

153, KEYZER STREET,
COLOMBO-11.

T'Phone: 23621

நெட்டிலைப்பாய் விநாயகர் கும்பாபிஷேகம் இனிது நிறைவேற
முழுமனதுடன் வாழ்த்துகிறோம்.

Space Donated by

# N. SIVAGNANA RATNAM & CO.

GENERAL MERCHANTS & COMMISSION AGENTS

216, BANKSHALL STREET,
COLOMBO-11.

Phone: 31262

Grams: "ENESAR"

பொங்கும்
மங்களம்
எங்கும்
தங்குக

## யுனைட்டட் ஹாட்வெயர் ஸ்ரோர்ஸ்

*346,* பழைய சோனக தெரு,
கொழும்பு - *12.*

தொலைபேசி: 32445

## பரந்தன் ஹாட்வெயர் ஸ்ரோர்ஸ்

பரந்தன் சந்தி - பரந்தன்.

''புகழ்வோம் கணபதியின் பொற்கழலை நாளும்
திகழ்வோம் பெருங்கீர்த்தி சேர்த்தே''

*Space Donated*
*by*

**E. SINNADURAI & COMPANY**

49, NEW CHETTY STREET,
COLOMBO - 13.

T'Phone: 36196

விநாயகர் துதிபாடுவோம் விக்கினங்களைத் தவிர்ப்போம்

அன்பளிப்பு

**சென்றல் ஸ்ரோர்ஸ்**

உரிமையாளர்: எம். அமிர்தலிங்கம்

இல. 1, மனிங் பிளேஸ்,
வெள்ளவத்தை.

*With Best Compliments from:*

CIBA INDUSTRIES

*Manufacturers of*

PARACHUTE BRAND QUALITY UMBRELLAS

TAIKAS COMPANY

*Manufacturers of*

GLOBE BRAND QUALITY UMBRELLAS

STOCKISTS:

NEW CEMKHARS

250, MAIN STREET, COLOMBO - 11.

T'Phone: 21444 Cable: "PARASHOOTS"

Telex { 21467 Tx BUREAU - CE ATTN: MACSI
21476 Tx BURO CE - ATTN: MACSI

*Space*

*Donated*

*by:*

Ameen Textiles

WHOLESALE & RETAIL DEALERS

45, SECOND CROSS STREET,

COLOMBO - 11.

Phone: 20964

## ஊக்கந் தந்த அனைவருக்கும்

★ இம்மலரைச் சிறப்பிக்க ஆசியுரைகள் வழங்கிய பெரியார்களுக்கும்,


★ தமது மேதாவிலாசத்தைக்கொண்டு தரமான கட்டுரைகள், கவிதைகள் படைத்துத்தந்த தமிழ் அறிஞர்களுக்கும்,

★ மலர் வெளியிடுவதற்கு ஆதாரமான விளம்பரங்களை மனமுவந்தளித்த வர்த்தகப் பெருமக்களுக்கும்,

★ விளம்பரங்களைச் சிரமம் பாராது சேகரித்து உதவிய திருவாளர்கள் சிங்கநாயகம் சிவானந்தம், சின்னத்துரை இராசேந்திரம், சின்னத்துரை குணரத்தினசிங்கம் ஆகிய அன்பர்களுக்கும்,

★ இம்மலர் நல்லமுறையில் சிறப்புடன் வெளிவரவேண்டுமென்று பல்வகையிலும் உதவிகள் புரிந்த நண்பர்களுக்கும்,

★ இம்மலரைக் குறுகிய காலத்திற்குள் நல்லமுறையில் அச்சிட்டு உதவிய யாழ்ப்பாணம் சாந்தி அச்சகத்தாருக்கும்



எமது உள்ளம் நிறைந்த நன்றி.

யாழ்ப்பாணக் குடாநாட்டுக் கமக்காரர்களே!



உங்கள் உற்பத்திப்
பொருட்களான
மிளகாய், வெண்காயம்
ஆகியவற்றை விற்பனைசெய்ய
தலைநகராம் கொழும்பில்
நம்பிக்கையான
இடம்

↓

**PETTAH TRADE COMPANY**

**பெட்டா டிரேட் கொம்பனி**

— கொமிசன் வியாபாரம் —

90, நாலாம் குறுக்குத் தெரு,
கொழும்பு-11.


சாந்தி அச்சகம், யாழ்ப்பாணம்.